REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2022 நவம்பர் 24 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

வரு. 90 இல. 278 | Thursday 24, November, 2022 | 20பக்கங்கள் | 50/-




**வரவு செலவுத்திட்டத்தின் பின்னர் அதிகார பகிர்வு**

# இனப்பிரச்சினை தீர்வுக்கு அனைத்து கட்சிகளுக்கும் ஜனாதிபதி அழைப்பு



## டிச.11க்குப் பின் கலந்துரையாடல் மஹிந்த ராஜபக்ஷ உட்பட எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் பலரும் இணக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதற்காக அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அழைப்பு விடுத்தார். இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான இணக்கப்பாட்டுக்கு வருவதற்கு டிசம்பர் 11ஆம் திகதிக்குப் பின்னர் கலந்துரையாடல் நடத்தப்படுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இதில் பங்கேற்குமாறு அழைப்பு விடுப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதியின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

சுமந்திரன் எம்பி தமது உரையின் போது, இக்காலங்களில் ஜனாதிபதி தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பேச்சுவார்த்தை தொடர்பில் அழைப்பு விடுத்து வருவது தொடர்பில் குறிப்பிட்டார்.

அதனையடுத்து சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய ஜனாதிபதி,

நாட்டின் தற்போதைய நிலையில் அனைத்து எதிர்க்கட்சிகளும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்புடன் செயற்பட்டால், தேசிய இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும். நாம் அனைவரும் ஒன்றாக இணைந்து பேச்சுவார்த்தை நடத்தி அதற்கு தீர்வு காணலாம். எல்லோரும் அதற்கு இணக்கமா? என, கேள்வி எழுப்பினார். இதன் போது சபையிலிருந்த எதிர்கட்சிகளின் தலைவர்கள் பக்கம் கைகளை நீட்டி, நீங்கள் அனைவரும் இதற்கு இணக்கமா என தனித்தனியே கேட்டறிந்தார்.

எதிர்க்கட்சிகளின் கருத்துக்களை கேட்டறிந்த ஜனாதிபதி, பேச்சுவார்த்தைக்கான திகதியையும் அறிவித்ததுடன் வரவு செலவுத் திட்ட விவாதம் முடிவடைந்ததும் எதிர்வரும் (12) இந்தப்பேச்சு வார்த்தையை நடத்த முடியும் என்றும் தெரிவித்தார்.

இதன்போது, அதிகாரப் பரவல் மூலமான அரசியல் தீர்வுக்கு, எதிர்க்கட்சிகள் அனைத்தும் சபையில் இணக்கம் தெரிவித்ததுடன், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த 06

---

**தீர்வுக்கு அனைத்து மக்களதும் ஆதரவு அவசியம்**

## அரசுடன் ஆக்கபூர்வமாக செயற்பட TNA தயார்



**பாராளுமன்றில் சுமந்திரன் MP தெரிவிப்பு**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சகல மக்களும் திருப்தியடையும் வகையிலான தீர்வையே, தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளுமென கட்சியின் பேச்சாளர் சுமந்திரன் எம்பி பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் ஆக்கபூர்வமாக பணியாற்ற தயாராகவுள்ளதாகவும் சட்டபூர்வமாகவும் நியாயமாகவும் தமிழ் மக்களின் அபிலாசைகள் 06

---

**அனுமதி இல்லாத போராட்டங்களுக்கு இனிமேல் இடமில்லை**

## போராட்டங்களை நடத்தி அரசை வீழ்த்த இடமளியேன் - ஜனாதிபதி

நாட்டில் ஜனநாயகத்தை ஸ்தாபிக்கும் வகையில் அரசியலமைப்பை திருத்தம் செய்த, தன்னை இன்று சிலர் சர்வாதிகாரியாகவும், ஹிட்லராகவும் சித்தரிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று (23) புதன்கிழமை நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம், பாராளுமன்றம் உள்ளிட்ட விடயதானங்களுக்கான நிதி ஒதுக்கீட்டு குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அனுமதி இல்லாத 06

---

**இலங்கையின் மூத்த தொழிற்சங்கவாதியான**

## இ.தொ.கா முன்னாள் தலைவர் முத்துசிவலிங்கம் காலமானார்

**நுவரெலியாவில் இன்று இறுதிக் கிரியைகள்**

**(நுவரெலியா தினகரன் நிருபர்)**



மலையகத்தின் மூத்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முன்னாள் தலைவரும் முன்னாள் பிரதி அமைச்சருமான முத்துசிவலிங்கம் தனது 79 ஆவது வயதில் நேற்று நுவரெலியாவில் தனது இல்லத்தில் காலமானார். மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர், ராஜேஸ்வரி என்பவரைத் திருமணம் செய்திருந்தார். 06

---

**20 MOH பிரிவுகளில் அபாயநிலை**

## டெங்கு நோயாளர் தொகை திடீரென அதிகரிப்பு



**இவ்வருடத்தில் மட்டும் 55,500 பேர் பாதிப்பு**

நாட்டில் 20 சுகாதார வைத்திய அதிகார பிரிவுகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளதாக சுகாதார நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. மேல் மாகாணத்திலுள்ள பல சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகள் டெங்கு அபாயப் பிரதேசங்களாக கருதப்படுவதாக அச்சங்கத்தின் தலைவர் நஜித் சுமணசேன தெரிவித்துள்ளார்.

அடையாளம் காணப்பட்ட சுகாதார வைத்திய அதிகார பிரிவுகளில் டெங்கு 06

---

## தங்கத்தின் விலையில் படிப்படியான வீழ்ச்சி

**22 கரட் பவுண் ரூ.1,56,750**



வரலாறு காணாத விலை உயர்வை சந்தித்திருந்த தங்கத்தின் விலை, தற்போது படிப்படியாக குறைவடைந்து வருகிறது. உலக சந்தையில் நாளுக்கு நாள் தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கத்துடன் பதிவாகி வருகின்றது.

இதன்படி, ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை இலங்கை ரூபாவின் படி 6,34,708 ரூபாவாக பதிவாகியுள்ளது. கடந்த சில 06

---

## சிறு விற்பனையாளருக்கு கடனடிப்படையில் Gas

**லிற்றோ நிறுவனம் அதிரடி தீர்மானம்**



நாடு முழுவதுமுள்ள சிறு விற்பனையாளர்களுக்கு, கடன் அடிப்படையில் சமையல் எரிவாயுவை விநியோகம் செய்யுமாறு லிற்றோ நிறுவனம் அதிரடி அறிவிப்பொன்றை விடுத்துள்ளது.

சிறு விற்பனையாளர்கள், எரிவாயுவை வாங்க சிரமப்படுவதாலேயே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக நிறுவனம் 06

---

## மண்ணெண்ணெய் விநியோக தாமதத்துக்கு 02 நாட்களில் தீர்வு

**மீனவருக்காக 74 பௌசர்கள் விடுவிப்பு**



மண்ணெண்ணெய் விநியோகத்தில் நிலவுகின்ற தாமதத்தை எதிர்வரும் இரண்டு நாட்களில் முழுமையாக நீக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

மீனவர்களுக்கான எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, 74 மண்ணெண்ணெய் பௌசர்கள் நேற்று (23) விடுவிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி பணிப்பாளர் நாயகம் (சமூக விவகாரப் பிரிவு) கீர்த்தி தென்னகோன் தெரிவித்தார்.

இதற்கமைய, 49 தனியார் துறை எரிபொருள் நிரப்பு நிலையங்கள், 18 கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் ஏனைய 07 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் 06

---

## யாழ். பொது நூலகத்துக்கு பாகிஸ்தான் தூதுவர் விஜயம்



**யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் விஜயம்**

இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி, நேற்று (23) யாழ். பொது நூலகத்தை பார்வையிட்டார்.

இதன்போது, யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளர், பாகிஸ்தான் உயர்ஸ்தானிகரை வரவேற்றதுடன், யாழ்.பொது நூலகத்தின் சிறப்புகள் மற்றும் வரலாற்று ஆவணங்களையும் காண்பித்தார்.

---



## பிணையெடுக்க எவருமே இதுவரை முன்வரவில்லை

**18 வருடங்களின் பின் ஒருவர் விடுதலை** 02



## விவசாயக் காணிகள் பலவும் பலாத்காரமாக பிடிக்கப்பட்டுள்ளன

**அரசின் திட்டத்துக்கு இது பெரும் முட்டுக்கட்டை** 02

---

## இலங்கையிலிருந்து மேலும் 10 பேர் இராமேஸ்வரத்துக்கு

**இதுவரை 198 பேர் சட்டவிரோதமாக சென்றுள்ளனர்**

**(மன்னார் குறூப் நிருபர்)**



இலங்கையிலிருந்து 10 தமிழர்கள் நேற்று புதன்கிழமை (23) காலை தனுஷ்கோடிக்கு அடுத்துள்ள முகுந்தராயர் சத்திரம் பகுதியை சென்றடைந்துள்ளனர். இதுவரை, கடந்த மார்ச் முதல் இலங்கையிலிருந்து 198 இலங்கை தமிழர்கள் தனுஷ்கோடிக்கு அகதிகளாக சென்றுள்ளனர். 06

---

## இலங்கைக்கு கடத்தவிருந்த 300 கிலோ கஞ்சா பறிமுதல்

**இராமநாதபுரம் பகுதியில் 04 பேர் கைது**



**திருச்சி எம்.கே. ஷாகுல் ஹமீது**

இராமநாதபுரம் மண்டபம் அருகே மனோலி தீவு பகுதியில், இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 300 கிலோ கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டு, 04 பேர் கைது 06

---

## பட்ஜட்டுக்கு ஆதரவளித்த துமிந்தவுக்கு எதிராக கட்சி நடவடிக்கை



வரவு செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக வாக்களித்த சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர், பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்கவுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். 06

---



## கண்ணீர் அஞ்சலி !

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் போஷாகருமான

அமரர் **முத்து சிவலிங்கம் ஐயா**

அவர்களது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்

தோற்றம் 20.07.1943 | மறைவு 23.11.2022

இ.தொ.கா. குடும்பம்

---

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 நவம்பர் 24 வியாழக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**
22 முதல் 24 வரை
ஸுபஹ் - 04.43
லுஹர் - 11.58
அஸர் - 03.20
மஃரிப் - 05.51
இஷா - 07.04

**இன்றைய சுபதினம்**
சுபகிருது வருடம் கார்த்திகை 8
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: பிரதமை

**இராசி பலன்கள்**
மேஷம் - வெற்றி
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - செலவு
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - சுகம்
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - போட்டி
கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

# செலவைக் குறைக்க முடியாவிடின் வருவாயை அதிகரிப்பதே ஒரே வழி

### பாராளுமன்றில் அமைச்சர் அலி சப்ரி தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

செலவுகளை குறைக்க முடியாவிட்டால் வருமானத்தை அதிகரிப்பதை விட வேறு மாற்று வழிகள் கிடையாதென வெளி விவகார அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இம்முறை சமர்ப்பிக்கப்பட்டுள்ள பட்ஜட் நாட்டின் சவால்களை எதிர்கொள்ளும் யதார்த்த பூர்வ திட்டங்களை உள்ளடக்கியுள்ளதுடன்,ஏற்றுமதி பொருளாதாரத்திலும் முக்கிய கவனம் செலுத்தியுள்ளது.

நாட்டில் ஐந்து இலட்சத்து 07 ஆயிரம் வரிக் கோவைகள் காணப்படுகின்றன. இருந்த போதும் 30 ஆயிரம் பேரே வரி செலுத்துகின்றனர். இநிலையிலே நாட்டின் வரி வருமானம் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச சஞ்சிகை ஒன்றின் கணிப்பீட்டின்படி கடந்த பத்து வருடங்களில் சட்டபூர்வமற்ற விதத்



தில், நாட்டிலிருந்து 37 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வெளியில் சென்றுள்ளன.

இதில் அரசியல்வாதிகள் மட்டுமன்றி சகல தரப்பினரும் உட்படுகின்றனர்.

முறையான வரி அறவிடப்பட்டால் மாத்திரமே, இவ்வாறான சட்ட விரோத செயற்பாடுகளை நிறுத்த முடியுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வரவு செலவுத் திட்டம் மீதான ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்றும்போத அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுபற்றி மேலும் தெரிவித்த அமைச்சர்,

எதிர்க்கட்சியானது அரசாங்கத்தில் இருக்கும் போது ஒரு நிலைப்பாட்டிலும் எதிர்க்கட்சியில் இருக்கும் போது இன்னொரு நிலைப்பாட்டிலும் செயல்படுகின்றது .

பொறுப்புக்களை ஒப்படைத்தால் அதனை ஏற்க பயப்படுகின்றனர்.அவ்வாறு ஏற்று செயற்படுவோர் பணிகளை முன்னெடுப்தையும் தடை செய்கின்றனர். அவ்வாறானால் எவ்வாறு இந்த நாட்டை கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

## குரங்கம்மை வைரஸின் பெயரை மாற்றம் செய்ய WHO தீர்மானம்

### உலகம் முழுவதும் 20,774 தொற்றாளர் கண்டுபிடிப்பு

குரங்கம்மை வைரஸின் பெயரை 'எம்பொக்ஸ்' என மாற்றுவது தொடர்பில் உலக சுகாதார அமைப்பு கவனம் செலுத்தியுள்ளது. இத்தீர்மானம், இன்று எடுக்கப்படுமென சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. கடந்த காலங்களில், குரங்கம்மையின் பெயரை மாற்றுவதில் அமெரிக்கா கவனம் செலுத்தியிருந்தது. மங்கிபொக்ஸ் என்ற பெயர் ஒரு குறிப்பிட்ட குழு அல்லது மூன்றாம் தரப்பினருக்கு பாரபட்சத்தை ஏற்படுத்தும் என்பதால், இந்நடவடிக்கையை எடுக்கவுள்ளதாக அமெரிக்கா தெரிவித்தது.

1970 ஆம் ஆண்டில், கொங்கோ நாட்டில் ஒன்பது மாத குழந்தையொன்றிடம் முதன்முதலில் மங்கி பொக்ஸ் வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது, உலகம் முழுவதும் 20,774 பேர் மங்கி பொக்ஸ் குரங்கம்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த அக்டோபர் 25 முதல் நவம்பர் 08 வரை 47 பேர் 06

## வெளிநாட்டவரை திருமணம் செய்ய அனுமதி அவசியம்

இரட்டைக் குடியுரிமையுள்ள இலங்கையர் வெளிநாட்டவரை திருமணம் செய்வதற்கு பதிவாளர் நாயகத்திடம் அனுமதி பெற வேண்டுமென, பதிவாளர் நாயகம் பி.எஸ். பி. அபேவர்த்தன தெரிவித்தார்.

இந்த அனுமதியைப் பெறுவதற்கு, விண்ணப்பதாரர் எந்தவொரு சட்ட அதிகாரியிடமிருந்தும் பிடியாணை பிறப்பிக்கப்படாதவராக இருக்க வேண்டுமென்ற நிபந்தனை உள்ளிட்ட இரண்டு நடைமுறைகளை அவர்கள் பின்பற்ற வேண்டுமென்றும் அவர் 06

### பயணிகளுக்கு வசதியை ஏற்படுத்தும் நோக்கில்

# நாட்டின் அனைத்து போக்குவரத்து சேவைகளும் ஒரே டிஜிட்டல் தளத்தில்



ரயில், பஸ், பாடசாலை வாகன சேவை மற்றும் வாடகைக் கார் சேவை போன்ற போக்குவரத்து சேவைகளை ஒரே டிஜிட்டல் தளத்துக்கு கொண்டுவர

தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து,தேசிய சபையின் உப குழுவில் கலந்துரையாடப்பட்டது.

பயணிகளுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல், பொருளாதார ஸ்திரத்தன்மை உள்ளிட்ட நோக்குடன் இவை,டிஜிடல் தளத்துக்கு கொண்டு வரப்படவுள்ளன.

இந்த உப குழு, தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக தலைமையில் (21) கூடிய போதே இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

போக்குவரத்துத் துறையினர் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் இக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

போக்குவரத்துத் துறையில் தற்பொழுது காணப்படும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து அவர்கள் கருத்துக்களை முன்வைத்தனர்.

எரிபொருள் விலை அதிகரிப்பு, வாகனங்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களின் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் போன்றவற்றால் தமக்குக் கடுமையான சிரமங்கள் ஏற்பட்டிருப்பதாக இதில் கலந்துகொண்டிருந்த தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கம், பாடசாலை வான் உரிமையாளர் சங்கம் உள்ளிட்ட போக்குவரத்துத் துறையின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். குறிப்பாக வாகன டயர் உள்ளிட்ட உதிரிப்பாகங்களின் விலை 300% அதிகரித்திருப்பதாகவும் அவர்கள் தெரிவித்தனர். அத்துடன் வாகன உதிரிப்பாகங்களுக்குத் தட்டுப்பாடு காணப்படுவதால் பஸ், பாடசாலை வாகனங்கள் மற்றும் முச்சக்கரவண்டிகள் உள்ளிட்ட போக்குவரத்து சாதனங்களின் எண்ணிக்கை குறைந்திருப்பதாகவும் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இதில் முன்வைக்கப்பட்ட விடயங்கள் குறித்து கவனம் செலுத்தி அவற்றையும் உள்ளடக்கிய முன்மொழிவுகள் குழுவினால் முன்வைக்கப்படும் என உப குழுவின் தலைவர் பாட்டலி சம்பிக்க ரவணக 06

# கனடாவுக்கு ஆட்கடத்தல் செய்து சம்பாதிக்கும் அவசியம் கிடையாது

### சபையில் சாணக்கியன் ஒழுங்குப் பிரச்சினை

**லோரன்ஸ் செல்வநாயகம்**



கனடாவுக்கு ஆட்களை கடத்தி, பணம் சம்பாதிக்க வேண்டிய எந்தத் தேவையும் கிடையாதென தமிழ் தேசியக் கூட்டமைப்பு எம்பி இராசமாணிக்கம் சாணக்கியன் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் பாராளுமன்றத்தில் தம்மைப் பற்றி தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரிப்பதாகவும் அவர் தெரிவித்தார். இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் சகோதரர் ஒருவரே, அவுஸ்திரேலியாவுக்கு ஆட்களை கடத்துவதாக தகவல்கள் கிடைத்துள்ளது.

மட்டக்களப்பில்,காணி அபகரிப்பில் ஈடுபடுவது நானா,அல்லது சவந்திரக்காந் தனா?இதை,ஆராய்வதற்கு உடனடியாக விசேட குழுவை ஜனாதிபதி அமைக்க வேண்டுமெனவும் சாணக்கியன் எம்பி வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று ஒழுங்குப்பிரச்சினை ஒன்றை எழுப்பி கருத்துக்களை முன்வைத்த அவர், மேலும் தெரிவிக்கையில்:

திங்கட்கிழமை நான் சபையில் இல்லாதபோது என்னுடைய பெயரை பயன்படுத்தி ஒரு சில கருத்துக்களை இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்துள்ளார்.

என்னுடைய பெயர், சாணக்கியன் ராகுல் இராஜபுத்திரன் இராசமாணிக்கம். இதுபற்றி அவருக்கு குழப்பம் ஏதும் இருந்தால் அவர், அதனை தெளிவு படுத்திக் கொள்ளலாம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறும் காணி அபகரிப்புக்களில் என்னைத் தொடர்பு படுத்தியிருந்தார்.

என்னுடைய காணிகள் தொடர்பான சகல ஆவணங்களையும் தருகின்றேன். 06

## போதைப்பொருள் விற்பனை அதிகரிப்பு

# பாடசாலைகளை சுற்றி பொலிஸார் கடமையில்

### சிவில் உடையில் CID கண்காணிப்பு

பாடசாலை மாணவர்களுக்கு போதை மாத்திரைகள் உள்ளிட்ட போதைப் பொருட்களை விற்பனை செய்யும் வியாபாரிகளை, கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில், பாடசாலை மாணவர்களிடமிருந்து 06

### விடுவிக்கப்பட்ட ராஜீவ் கொலை கைதிகள்

# இலங்கைக்கு நாடு கடத்துவதற்கு திருச்சி சிறப்பு முகாம் காத்திருப்பு

### ஆவணங்கள் கிடைத்ததும் அடுத்த கட்ட நடவடிக்கை

விடுதலையான ராஜீவ் காந்தியின் தண்டனைக் கைதிகளை நாடு கடத்துவதற்கு,இலங்கையின் ஆவணங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

தற்போது, சிறப்பு முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள கைதிகள் நால்வரையும் நாடு கடத்துவது, இலங்கை அதிகாரிகளிடமிருந்து பயண ஆவணங்கள் பெறுவதை பொறுத்தே அமையுமென்று திருச்சி மாவட்ட ஆட்சியர் எம்.பிரதீப் குமார் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம், ஆவணங்களை வழங்கியவுடன், இக் கைதிகள், நாடு கடத்தப்படுரென்றும் அதுவரை முகாமிலேயே தங்க வைக்கப்படுவரென்றும் பிரதீப் குமார் கூறியுள்ளார்.

இந்திய உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பின்னர் 2022, நவம்பர் (11) சிறையிலிருந்து விடுவிக்கப்பட்ட ஆறு பேரில், இலங்கை பிரஜைகள் நான்கு பேரும் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

1991ஆம் ஆண்டு ராஜீவ் காந்தி படுகொலை வழக்கில் தண்டனை பெற்ற ஆறு பேரையும் விடுதலை செய்யுமாறு 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம், தமிழக அரசு சர்ச்சைக்குரிய வகையில் பரிந்துரைத்தது.இதையடுத்து, 2022 நவம்பர் 11ஆம் திகதியன்று அவர்களை விடுதலை செய்ய உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் தண்டனை பெற்ற ஏழு பேரில் முதல் நபரான பேரறிவாளன் உடல்நிலை சீரின்மை மற்றும் நன்னடத்தை காரணமாக மே 18 இல் விடுதலையானார்.

இந்நிலையில்,பேரறிவாளன் விடுதலையாகி, சில மாதங்களில் எஞ்சிய ஆறு கைதிகளும் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

நளினி ஸ்ரீஹரன், முருகன் என்கிற ஸ்ரீஹரன், சாந்தன், பி ரவிச்சந்திரன், றொபர்ட் பயஸ் மற்றும் எஸ் ஜெயக்குமார் ஆகிய ஏழு குற்றவாளிகள் 1991 இல் கைது செய்யப்பட்டனர்.




# விவசாயக் காணிகள் பலவும் பலாத்காரமாக பிடிக்கப்பட்டுள்ளன

### அரசின் திட்டத்துக்கு இதுபெரும் முட்டுக்கட்டை



விவசாய உற்பத்திகளை பெருக்க வேண்டுமென்ற அரசின் திட்டத்துக்கு நேர்மாறாக, விவசாயக் காணிகள் அரச இயந்திரங்களால் பலவந்தமாக பிடிக்கப்பட்டுள்ளமை கவலை தருகிறது. இந்தக் காணிகளை உடனடியாக விடுவித்து, உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் (22) இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட ஏழாம் நாள் விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

அண்மையில் ஜனாதிபதி வவுனியாவுக்கு விஜயம் செய்திருந்தார். அங்கு அரசுடைமையாக்கப்பட்டுள்ள விவசாய நிலங்கள் தொடர்பில் அவரிடம் எடுத்துரைத்தோம். 06

# பிணையெடுக்க எவருமே இதுவரை முன்வரவில்லை

### 18 வருடங்களின் பின் ஒருவர் விடுதலை



பிணைப்பத்திரத்தில் கையொப்பமிட்டு அழைத்துச் செல்ல எவரும் முன்வராததால், 18 ஆண்டுகளுக்கும் மேல் விளக்கமறியலிலிருந்த ஒருவருக்கு, நீதிமன்றமே பிணை வழங்கிய சம்பவமொன்று கொழும்பில் இடம்பெற்றுள்ளது.

பிணைப்பத்திரத்தில் கையொப்பமிட எவரும் இல்லாததாலும், பிணை தொடர்பில் நீதிமன்றத்தில் வாதிட சட்டத்தரணியொருவரை அமர்த்துவதற்கு பணமில்லாததாலும் 18 ஆண்டுகளுக்கும் மேலாக சந்தேகநபர் ஒருவர் விளக்கமறியலில் இருந்துள்ளார்.

கொலைக்குற்றம் சாட்டப்பட்டிருந்த இச்சந்தேக நபருக்கு நேற்று முன்தினம் (22) கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய பட்டபந்தி பிணை வழங்கியுள்ளார்.

இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவின் பணிப்பாளர் சகுந்தலா கருணாசிங்க, பந்துல கமஆராச்சி மற்றும் 06

# மலையக மக்கள் நலனுக்காக இறுதிக்காலம் வரை அர்ப்பணிப்புடன் உழைத்தவர் முத்து சிவலிங்கம்



இலங்கை தொழிலாளர் காங்கிரசின் முன்னாள் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான முத்து சிவலிங்கம் நேற்றுக் காலை (23.11.2022) காலமானார். அன்னாரின் மறைவு மலையகத் தமிழ் மக்கள் உட்பட அனைத்து தமிழ் மக்களையும் மிகவும் ஆழ்ந்த வேதனைக்குள்ளாக்கியிருக்கிறது. சிறந்த ஒரு தலைவனை மலையக சமூகம் இழந்து நிற்கிறது.

1943.07.20ஆம் திகதி உடப்புசல்லாவை மேத் தோட்டத்தில் அவர் பிறந்தார். ஆரம்பக் கல்வியை உடப்புசல்லாவை ரப்பானை தமிழ் வித்தியாலயத்திலும்,உயர்கல்வியை நுவரெலியா புனித திரித்துவக் கல்லூரியிலும் பயின்றார். கல்வியை முடித்த பின்னர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் அழைப்பின் பேரில் 1962ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி தலவாக்கலை இ.தொ.கா காரியாலயத்தில் எழுதுவினைஞராக பணியில் இணைந்தார்.

இவருடைய அறிவாற்றல், பேச்சுவன்மை, சமூகப்பற்று ஆகியவற்றைக் கண்டு அமரர் தொண்டமான் பெருமகிழ்ச்சி அடைந்தார். இவரை ஊக்குவித்து தொழிற்சங்கப் பணிகளில் பெருநம்பிக்கையோடு ஈடுபடுத்தி வந்தார். எழுதுவினைஞராக பதவியேற்ற இவர், தனது பெருமுயற்சியினால் இரண்டு ஆண்டுகளில் பிரதிநிதியாகவும், மாநில தொழிலுறவு அதிகாரியாகவும் பதவி உயர்வு பெற்றார். அதேவேளையில் அன்றைய தொழிற்சங்க மேதைகளின் வழிகாட்டலாலும் படிப்படியாக வளர்ந்தார்.

1962ஆம் ஆண்டில் தலவாக்கலை, கண்டி, கலஹா போன்ற இடங்களில் எழுதுவினைஞராக கடமையாற்றி இருந்தார். 1964ஆம் ஆண்டில் ஹப்புத்தளை மாவட்ட பிரதிநிதியாக பதவி உயர்வினைப் பெற்றார். 1965ஆம் ஆண்டு ஹப்புத்தளை, பண்டாரவளை ஆகிய இரு மாவட்டங்களுக்கும் மாவட்ட பிரதிநிதியாக கடமையாற்றினார்.

தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளுக்காக பல போராட்டங்களை நடத்தி இவர் வெற்றி கண்டுள்ளார். அதே போல் அரசியலில் பிரவேசித்த இவர் நாடாளுமன்ற உறுப்பினராக ஐந்து தடவை தெரிவு செய்யப்பட்டுள்ளார். இ.தொ.கா அரசியற் பிரிவு அரசுடன் இணைந்து பின்னர் அமைச்சரவை அமைச்சராகவும் நியமிக்கப்பட்டார். இவர் பிரதி அமைச்சராக பல தடவைகளில் பணியாற்றியுள்ளார்.

தோட்டத் தொழிலாளர்கள் பல்வேறு கெடுபிடிகளால் பாதிப்புக்குள்ளாகி வந்த காலப்பகுதியில் தோட்ட நிர்வாகங்களின் எதேச்சாதிகார போக்குக்கு எதிராக அவ்வப்போது பாரிய போராட்டங்களை இணைந்து நடத்தி தொழிலாளர்களின் நல்ல நண்பனாக விளங்கினார்.

இவர் மக்கள் சேவையில் முழுமூச்சுடன் தன்னை அர்ப்பணித்து ஈடுபாடு கொள்ள இவரது தந்தையாரினதும் அமரர் தொண்டமானினதும் வழிகாட்டல்களும் அறிவுரைகளும் உறுதுணையாக இருந்தன. இவரது தந்தையார் முத்தையா மேத் தோட்ட தலைவராக இருந்தவர். அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் அன்புக்கும் , நம்பிக்கைக்கும் பாத்திரமாக திகழ்ந்தவர் முத்து சிவலிங்கம். அரும்பெரும் பொறுப்புக்களை எல்லாம் அமைச்சர் முத்து சிவலிங்கத்திடம் அமரர் தொண்டமான் ஒப்படைத்து வந்தார். இ.தொ.கா தலைமை பீடத்தோடு முட்டிமோதி பலர் வெளியேறி உள்ளனர்.

நெருக்கடிகளில் இருந்து இ.தொ.காவை சாதூரியமாக மீட்டு அதனை மென்மேலும் பலப்படுத்தியவர்களில் அமைச்சர் முத்து சிவலிங்கம் முதன்மை பெறுகின்றார். அமரர் தொண்டமானின் ஆசிர்வாதத்தால் 1966ஆம் ஆண்டு டில்லியில் சர்வதேச சுதந்திர தொழிற்சங்க சம்மேளனத்தில் மூன்று மாத தொழிற்சங்க பயிற்சியை பெற்றார். அதன் பின்னர் ஜெனீவா, ஜப்பான், சீனா, இந்தியா உட்பட 40 நாடுகளில் தொழிற்சங்கப் பயிற்சி நெறிகளிலும் மாநாடுகளிலும் அவர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. 1989ஆம் ஆண்டு அரசியலில் பிரவேசித்து நுவரெலியா, மஸ்கெலியா தேர்தல் தொகுதிகளில் முதன் முறையாக போட்டியிட்டு 28,000 வாக்குகளைப் பெற்றார். விகிதாசார அடிப்படையில் நடந்த தேர்தல் என்பதால் காத்திருப்பு பட்டியலில் அவரது பெயர் இடம்பெற்றிருந்தது. 1991 ஆம் ஆண்டு தேர்தல் சட்டத்தின் பிரகாரம் அமைச்சர் முத்து சிவலிங்கத்திற்கு நுவரெலியாவிலும், பதுளையில் சென்னனுக்கும் நாடாளுமன்றத்தில் இடம் கிடைத்திருந்தது. 1994ஆம் ஆண்டு நுவரெலியா, மஸ்கெலியா தேர்தல் தொகுதியில் போட்டியிட்டு 86,500 வாக்குகளை பெற்று முதலிடத்திற்கு தெரிவானார். 1997ஆம் ஆண்டு காலத்தில் பெருந்தோட்டங்களில் வாழும் தொழிலாளர்கள் இருளில் சஞ்சரித்துக் கொண்டிருந்த வேளையில் அவர்களது இல்லங்களுக்கு ஒளியை கொடுத்த பெருமை அன்றைய பிரதி அமைச்சர் முத்து சிவலிங்கத்தை சாரும். எனவே, பெருந்தோட்ட மக்கள் அவரை அன்று மட்டுமல்ல இன்றும் கூட நன்றியுடனும் பாசத்தோடும் நினைவு கூருகின்றனர். மலையக மக்களுக்காக மாத்திரம் இவர் சேவையாற்றவில்லை. ஒரு அரசியல்வாதியாக இந்த நாட்டு மக்கள் அனைவருக்கும் இவர் பணிபுரிந்து வந்திருக்கின்றார். அவரது இழப்பானது இ.தொ.காவுக்கும் மலையக மக்களுக்கும் பேரிழப்பாகும்.



சவரிமுத்து தேவதாஸ்
சிரேஷ்ட ஊடக இணைப்பாளர்
இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்

## நூரிய்யாவில் மாணவர் ஒன்றுகூடல்

கன்னத்தோட்டை அல்குல்லிய்யதுன் நூரிய்யாஹ் அரபுக்கலாசாலையின் பழைய மாணவர்களின் பொதுக்கூட்டம் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் நடைபெறவுள்ளது.

கலாபீடத்தில் கல்வி பயின்று வெளியேறிய அனைவரும் குறித்த தினம் தவறாது கலந்து கொள்ளுமாறு அரபுக்கலாசாலையின் அதிபர் கேட்டுக்கொண்டுள்ளார்.



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சுபகிருது வருடம் கார்த்திகை மாதம் 08ஆம் நாள் வியாழக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 ரபீஉனில் ஆகிர் பிறை 28

### குறள் தரும் சிந்தனை



உறின்உயிர் அஞ்சா மறவர் இறைவன்
செறினும் சீர்குன்றல் இலர்

*தலைவன் சினந்தாலும் சிறப்புக் குறையாமல் கடமை ஆற்றுபவர்கள்தான், போர்களத்தில் உயிரைப் பற்றிக் கலங்காத வீர மறவர்கள் எனப் போற்றப்படுவர்.*

## அரசாங்கத்தின் கொள்கைக்கு கிடைத்துள்ள அங்கீகாரம்

2023ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இவ்வாக்கெடுப்பு 37 மேலதிக வாக்குகளால் நிறைவேறியுள்ளது. இவ்வாக்கெடுப்பில் ஆதரவாக 121 வாக்குகளும் எதிராக 84 வாக்குகளும் கிடைக்கப் பெறறுள்ளன. பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம். அதாவுல்லா தலைமையிலான தேசிய காங்கிரஸும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸும் ஆளும் கட்சியுடன் இணைந்து வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்துள்ளன.

இவ்வாக்கெடுப்பு மேலதிக வாக்குகளால் நிறைவேறியதைத் தொடர்ந்து வரவு செலவுத்திட்ட குழு நிலை விவாதம் நேற்று முதல் ஆரம்பமானது. அந்நிய செலாவணிப் பற்றாக்குறையின் விளைவாக இவ்வருடத்தின் ஆரம்பப் பகுதியில் தோற்றம் பெற்ற பொருளாதார நெருக்கடி, கடந்த ஏப்ரல் மாதம் முதல் ஜுலை மாதம் முடிவுறும் வரையும் தீவிர நிலையை அடைந்திருந்தது.

அதன் காரணத்தினால் எரிபொருள் மற்றும் எரிவாயு தட்டுப்பாடு அதிகரித்துக் காணப்பட்டது. அவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக நாட்கணக்கில் காத்திருக்க வேண்டிய நிலைக்கு மக்கள் முகம் கொடுத்தனர். குறிப்பாக எரிபொருள் நிரப்பும் நிலையங்களிலும் எரிவாயு விற்பனை நிலையங்களிலும் நாட்கணக்கில் காத்திருக்கும் நிலை உருவாகி இருந்தது. வாகனப் போக்குவரத்து இயல்பு நிலையை இழந்தது. அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களதும் விலைகளும் பெரிதும் அதிகரித்தன.

இதன் விளைவாக இப்பொருளாதார அசௌகரியங்களுக்கு நிவாரணமும் தீர்வும் கோரி மக்கள் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் முன்னெடுக்கலாயினர். இந்த நிலையில், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவர் தலைமையிலான அமைச்சரவையும் பதவி விலகும் நிலை ஏற்பட்டது. இருந்த போதிலும் நாடும் மக்களும் முகம் கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடி தணியவில்லை. இவர்களது பதவி விலகல் பொருளாதார நெருக்கடிக்கு ஒரு தீர்வாகவோ நிவாரணமாகவோ அமையவில்லை.

இவ்வாறான நிலையில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாட்டை விட்டு வெளியேறி பதவி விலகும் நிலைக்கு உள்ளானார். பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலைக்கு உள்ளாகி இருந்த நாட்டின் தலைமையைப் பொறுப்பெடுக்க எவரும் முன்வராத சூழலில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி பதவியை ஏற்றார். அதனைத் தொடர்ந்து நாடும் மக்களும் முகம் கொடுத்துள்ள தீவிர பொருளாதார நெருக்கடியைத் தணித்துக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை அவர் முன்னெடுக்கலானார். அதன் பயனாக நாடு முகம்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடி கட்டம் கட்டமாக வீழ்ச்சி அடைய ஆரம்பித்தது. அதனால் கடந்த ஏப்ரல் முதல் ஜுலை வரையான காலப்பகுதியில் நாட்டில் காணப்பட்ட நெருக்கடி நிலை மெதுமெதுவாக நீங்கத் தொடங்கியது. குறிப்பாக எரிபொருள், எரிவாயு பற்றாக்குறை நீங்கியுள்ளதோடு அவற்றுக்கு விலைக்குறைப்பும் செய்யப்பட்டுள்ளது. அவற்றின் பிரதிபலன்களையும் கூட மக்கள் அனுபவிக்க ஆரம்பித்து விட்டனர்.

இவ்வாறான சூழலில், 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளை நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 14 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள இந்நாட்டில் உலகின் நவீன போக்குகளுக்கு ஏற்றவாறு புதிய பொருளாதார அடித்தளம் ஒன்றைத் தயாரித்து, சமூகப் பாதுகாப்புடன் கூடிய திறந்த பொருளாதார முறைமையை கட்டியெழுப்புவதை நோக்காகக் கொண்டு இவ்வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

பொருளாதார ரீதியில் வங்குரோத்து நிலையை அடைந்துள்ள இந்நாட்டை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் நாட்டின் அனைத்துத் துறைகளும் கருத்தில் கொள்ளப்பட்டதாக இவ்வரவுசெலவுத் திட்டம் அமைந்திருக்கின்றது. இந்த நிலையில் கடந்த 15 ஆம் திகதி ஆரம்பமான இவ்வரவுசெலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் ஆளும் கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் தத்தம் கருத்துக்களை முன்வைத்தனர். ஆறு நாட்கள் நடைபெற்ற இவ்விவாதத்தைத் தொடர்ந்து நடைபெற்ற இவ்வாக்கெடுப்பிலேயே இரண்டாம் வாசிப்பு மீதான விவாதம் மேலதிக வாக்குகளால் நிறைவேறியுள்ளது.

இதன் ஊடாக இவ்வரவு செலவுத்திட்டம் நாட்டினதும் மக்களினதும் விமோசனத்தை இலக்காகவும் நோக்காகவும் கொண்டிருப்பது தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களில் கவனத்தைக் குவித்துள்ள இவ்வரவுசெலவுத்திட்டம் அரசியல் பேதங்களுக்கு அப்பால் நோக்கப்பட வேண்டும் என்பதே மக்களின் கருத்தாகும். அதுவே நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மைகளைத் தேடித்தரும்.

editor.tkn@lakehouse.lk

# உலக பசுமை பொருளாதார அமைப்பின் ஆதரவை கோருகிறார் சுற்றாடல் அமைச்சர் நசீர் அகமது

எகிப்தில் உள்ள ஷர்ம் எல்ஷேக்கில் நடைபெற்ற COP27 காலநிலை உச்சிமாநாட்டின் நிகழ்வுகளுடன் இணைந்ததாக, UAE ஐ தளமாக கொண்டு இயங்கும் உலக பசுமைப் பொருளாதார அமைப்பின் (WGEO) சிரேஷ்ட அதிகாரிகளை சுற்றாடல் அமைச்சர் நசீர் அகமது சந்தித்துள்ளார்.

COP27 மாநாட்டு அரங்கின் UAE வளாகத்தில் WGEO இன் பணிப்பாளர் நாயகம் அப்துல் ரஹீம் சுல்தானுடன் இருதரப்பு கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்த ஆண்டு செப்டம்பரில், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் துபாயில் நடைபெற்ற 8 ஆவது உலக பசுமைப் பொருளாதார உச்சிமாநாட்டில் (WGES) நடைபெற்ற அமைச்சர்கள் மட்ட வட்டமேசை பேச்சுவாத்தையில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர் நசீர் அஹமட் கலந்து கொண்டதோடு, பசுமைப் பொருளாதாரம் தொடர்பான உலகளாவிய கூட்டணிக்கு இலங்கை அரசாங்கம் அதன் அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியுள்ளது.

2022 உலக பசுமைப் பொருளாதார உச்சிமாநாட்டுக்கு இணங்க, இலங்கை அரசாங்கம் பசுமைப் பொருளாதாரம் தொடர்பான உலகளாவிய கூட்டமைப்பிற்கு தனது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியுள்ளதோடு, காலநிலை மாற்ற நடவடிக்கைகளை நோக்கிய இலங்கையின் பயணத்தை மேலும் ஆதவளிப்பதற்காக, WGEO இனால் சாத்தியமான ஒத்துழைப்பு மற்றும் ஆதரவுக்கான நான்கு முக்கிய பிரதான துறைகளை WGEO இன் பணிப்பாளர் நாயகத்திடம், அமைச்சர் அஹமட் முன்வைத்துள்ளார்.



அவையாவன;

1. காலநிலை மாற்றத்தை எதிர்த்துப் போராடுவதற்காக விருத்தியடைந்துவரும் இலங்கை வீதி வரைபடத்தை அமுல்படுத்துவதற்கு நிதிசார் ஆதரவு தேவைப்படும்.

2 நவீன தொழில்நுட்பங்களுடனும் அனுபவத்துடனும் அரச மற்றும் அரச சார்பற்ற துறைகள் இரண்டிற்கும் கட்டமைக்கப்பட்ட திறன் கட்டியெழுப்புகை நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல்.

3. இலங்கையை பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி மாற்றுவதற்கான உத்திகளைக் கண்டறிய உதவக்கூடிய பல்வேறு தொழில்நுட்ப மற்றும் தொழில்நுட்பம் அல்லாத நிபுணர்களுக்கான பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டிய தேவை உள்ளது.

4. இருதரப்பு ரீதியாகவும் சாத்தியமான வகையிலும் குறிப்பான அபிவிருத்தித் திட்டங்கள் அடையாளம் காணப்பட வேண்டும். கருத்திட்டங்களை வினைத்திறன்மிக்கதாக அமுல்படுத்துவதற்கு கருத்திட்ட நிதியிடல் ஆதரவும் தேவைப்படும்.

சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட், இலங்கையின் பசுமை மாறுதல் செயன்முறைக்கு ஆதரவாக WGEO இன் நிதிசார் மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றியும் கலந்துரையாடினார். இலங்கையின் மேற்கூறிய குறிப்பிட்ட தேவைகளுக்கு பணிப்பாளர் நாயகம் சுல்தான் சாதகமாக பதிலளித்ததுடன், 2023 ஆம் ஆண்டு தொடங்கும் WGEO இன் எதிர்வரும் வரவு செலவுத் திட்ட சுற்றில் அவைகளை உள்வாங்கவும் இணக்கம் தெரிவித்தார். 2023 இல் ஐக்கிய அரபு அமீரகம் நடத்தும் அடுத்த காலநிலை மாற்ற மாநாடு முன்னதாக ஆரம்பிக்கப்படவுள்ள இணைந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தனது எதிர்பார்ப்புகளை அமைச்சர் அஹமட் வெளிப்படுத்தினார்.

உலக பசுமைப் பொருளாதார அமைப்பு (WGEO) என்பது, பாதுகாப்பான மற்றும் வளமான எதிர்காலத்தை நோக்கி பசுமைப் பொருளாதாரம் எப்படி, ஏன் உலகின் சிறந்த பாதையாக அமையும் என்பது தொடர்பான முன்னேற்றத்தைத் தூண்டுவதற்கான முழுமையான அணுகுமுறைக்கான சர்வதேச சமூகத்தின் அழைப்புகளுக்கு ஒரு விரிவான பதிலளிப்பாகும்.

உலக பசுமைப் பொருளாதார அமைப்பின் தலைமை அலுவலகம் (WGEO) ஐக்கிய அரபு எமிரேட்ஸின் துபாயில் அமைந்துள்ளது.

# 'சித்தரமிர்தம்' வெளிவருவது முப்பெரும் சித்தர்களின் அருளாசி எமது மக்களுக்கு கிடைப்பதற்கான அறிகுறி

### இலங்கை சித்தர் சபையின் ஆலோசகரும், தமிழ்நாடு மகாசித்தர்கள் ட்ரஸ்ட் அறங்காவலர் சபை உறுப்பினரும், 'சித்தரமிர்தம்' – பதிப்பாசிரியருமான எச். எச். விக்கிரமசிங்க எழுதிய வெளியீட்டுரை

ஸ்ரீ ஸ்ரீ காகபுஜண்டரின் அவதாரமான ஸ்ரீ தலையாட்டிச் சித்தர் பெருமானின் சீடரான அன்னைச் சித்தர் ராஜ்குமார் சுவாமிகளின் திருவடிகளைச் சரணடைகின்றேன். அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை என்னும் சமரச சுத்த சன்மார்க்க மகாமந்திரத்தை உலகெங்கும் ஒலிக்கச் செய்த ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் வள்ளலாரைப் போல், வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடி ஒரு கோடிப்பேருக்கு மேல் தன் அட்சயக் கரத்தால் உணவளித்து பிரம்மரிஷி மலையில் மகாசமாதியடைந்த அன்னைச் சித்தர் ராஜ்குமார் சுவாமிகளின் குருவருளினால் திருவருள் கூடி இன்னுமொரு புனித கைங்கரியத்தில் அடியேனும் கருவியாக உள்ளேன்.




கவியரங்கானது கவிமாமணி கலா. விஸ்வநாதனின் அறிமுகத்தை மீண்டும் தந்தது. தேரடிச் சித்தர் யோகர் சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளும் மகாவாக்கியங்களுக்கும் சித்தரமிர்தத்திற்கும் தொடர்பிருப்பதாகவே எனக்கு எண்ணத் தோன்றுகின்றது.

நாவலப்பிட்டி குயின்பெரியில் ஜீவ சமாதியான நவநாத சித்தர், கொழும்பு முகத்துவாரத்தில் மகாசமாதியான பெருஞ்சித்தர் பெரியானைக் குட்டி சுவாமிகள், செல்வத்தில் பிறந்து அனைத்தையும் துறந்து அம்பாறை காரைதீவில் சித்தியடைந்த சித்தானைக் குட்டிசுவாமிகள் என்ற மூன்று சித்தர்பெருமக்களும் இலங்கை வரைபடத்தில் முக்கோணப் புள்ளிகளாக இருந்து சிவபூமியாம் இலங்கையையும் அதன் மக்களையும் இற்றை வரை காத்து வருகின்றனர்.

'சித்தரமிர்தம்' வெளிவருவதே பெரியானைக் குட்டி உள்ளிட்ட முப்பெரும் சித்தர்கள் ஓடோடி எம்மைக் காக்க வருகின்றார்கள் என்கின்ற செய்தியை பாறைசாற்றுவதாகவே நான் உணர்கின்றேன்.

மறைந்திருந்த கவிமாமணி கலா. விஸ்வநாதனை அடியேன் வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து, நெருக்கடியினால் பலரும் மறந்திருந்த சித்தர் பெருமானின் மகிமைகளை மீண்டும் நூலுருவில் நினைவுபடுத்தச் செய்வது குருவருளும் திருவருளுமாகும்.



கவிமாமணி கலா. விஸ்வநாதனைச் சித்தரமிர்தத்தின் ஆக்கப் பணிக்காகவும் அடியேனை இதன் வெளியீட்டுப் பணிக்காகவும் பணித்த குருவருளையும் திருவருளையும் வியந்து போற்றுகிறோம்.

இந்த நூலுக்கு அணிந்துரை வழங்கி அணி செய்த யாழ்ப்பாணம் பல்கலைக் கழகப் பொறியியல் துறை முன்னாள் விரிவுரையாளரும், ஆய்வாளருமான மு. நித்தியானந்தன் (லண்டன்), வாழ்த்துரை வழங்கிய முன்னாள் இந்து சமய கலாசார அமைச்சர் பி.பி. தேவராஜ், ஆசியுரை அருளிய ஸ்ரீ சுவர்ணாம்பிகா சமேத ஸ்ரீ அருணாச்சலேஸ்வர ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ கா. செந்தில்குமார் குருக்கள் ஐயா, பாராட்டுரையில் அணி செய்த தமிழக கரூர் சித்தர் சபையின் ஆன்மீக எழுத்தாளர் ஜி. சிவராமன், இலங்கை சித்தர்பீடத்தின் குரு யோகி, சித்தர் ராஜகுமாரின் சீடரான இந்நூல் வெளிவர ஆலோசனைகளை வழங்கிய கோபிநாத் தங்கவேல் ஆகியோருக்கு நன்றி கூறுகின்றேன்.

மேலும் இந்நூலை வெளியிட நிதியுதவி வழங்கிய நண்பர் வல்லிபுரம், தங்கராஜ் (லண்டன்), இந்நூலை நன்முறையில் பதிப்பித்துத் தந்த மணிவாசகர் பதிப்பகத்தின் (தமிழ்நாடு) மேலாளர் இராம. குருமூர்த்தி ஆகியோருக்கும் நன்றி கூறுகின்றேன்.

# ஊடகவியலாளர் சரிப்டீன் விருது வழங்கி கௌரவிப்பு



கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கலை இலக்கியத் துறையில் சேவையாற்றி வரும் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த கலைஞர்களை கௌரவித்து விருது வழங்கி வருகிறது. 2020, 2021 ஆம் ஆண்டுகளில் விருதுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களை கௌரவிக்கும் கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா திருகோணமலையில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யூ.ஜி. திசாநாயக்க தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இதன் போது 2020ஆம் ஆண்டு ஊடகத்துறையில் இளம் கலைஞர் விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த சிரேஷ்ட ஊடகவியலாளர், அறிவிப்பாளர் எம்.எல்.சரிப்டீன் 'ஊடகத்தில் இளம் கலைஞர்' விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

ஊடகத்துறை இளம் கலை பட்டம், ஊடகத்தறை டிப்ளோமா, மனித உரிமை மற்றும் ஜனநாயக டிப்ளோமா போன்ற பட்டங்களை பூர்த்தி செய்துள்ள இவர், சுமார் 21 வருடங்களுக்கு மேலாக ஊடகவியலாளாராகவும், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபத்தின் பிறை எப்.எம். வானொலியிலும் கடமையாற்றி வருகிறார்.

'பாரம்பரிய கலைகளும் தொழில் முறைகளும்' எனும் நூலை வெளியிட்டுள்ள இவர், ஊடகம் மற்றும் இலக்கியத் துறைகளில் பல விருதுகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்கள் வங்கியின் பிராந்திய கடன் பிரிவுகளுக்கான பாராட்டு விழா

மக்கள் வங்கி, 2020/2021 பிராந்திய கடன் பிரிவுகளுக்கான பாராட்டு விழாவை சமீபத்தில் மிக விமரிசையாக நடத்தியுள்ளது. வத்தளை பெகசஸ் ரீஃப் ஹோட்டலில் இடம்பெற்ற இந்த வைபவம், மக்கள் வங்கியின் நிறுவன வங்கிச்சேவைத் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அபிவிருத்தி மற்றும் நுண்கடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகம், வணிகக் கடன் பிரிவுகளின் கீழ் பிராந்திய கடன் பிரிவுகளின் சிறந்த செயல்திறனை இந்நிகழ்வு அங்கீகரித்துள்ளது.

இந்நிகழ்வில் மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபைத் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ, பிரதம நிறைவேற்று அதிகாரி/பொது முகாமையாளர் ரஞ்சித் கொடிதுவக்கு, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (கொடுப்பனவு, டிஜிட்டல், செயல்முறை முகாமைத்துவம் மற்றும் தர நிர்ணய உத்தரவாதம்) கே.பி. ராஜபக்ஷ, சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் (பரிவர்த்தனை வங்கிச் சேவை மற்றும் வெளிநாட்டு வாடிக்கையாளர் சேவைகள்) ரொஹான் பத்திரகே, பிரதிப் பொதுமுகாமையாளர் (நிறுவன வங்கிச்சேவை) கிறிஷானி நாரங்கொட் மற்றும் மக்கள் வங்கியின் நிர்வாக முகாமைத்துவ உறுப்பினர்கள், பெரும் எண்ணிக்கையிலான பணியாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.



## போதை மாத்திரைகளுடன் பெண் உட்பட மூவர் கைது

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் தெல்லிப்பளை பொலிஸாரினால் பெண்ணொருவர் உள்ளிட்ட மூவர் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் சோதனை நடவடிக்கைகளின் போது, 19 மற்றும் 22 வயதுடைய இரு இளைஞர்கள் 18 போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்த போது, தமக்கு, மல்லாகம் பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் போதை மாத்திரைகளை விற்பனை செய்ததாக வாக்குமூலம் அளித்தனர். அதன் அடிப்படையில் மல்லாகம் சென்ற பொலிஸார், 36 வயதுடைய பெண்ணொருவரை 40 போதை மாத்திரைகளுடன் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட மூவரையும் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஆசிரியர் மீதான தாக்குதல் சம்பவம்

# யாழ். ஒஸ்மானியா கல்லூரி ஆசிரியர்கள் வடமாகாண ஆளுநருக்கு கடிதம்

**யாழ். விசேட நிருபர்**



யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் பணியாற்றும் சில ஆசிரியர்கள் தாம் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுப்பதாகவும், அதனால் தாம் உளரீதியான பாதிப்பை எதிர் கொண்டுள்ளதாக வடமாகாண ஆளுநருக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளனர்.

ஒஸ்மானியா கல்லூரி உடற்பயிற்சி ஆசிரியர் ஒருவரை மாணவன் ஒருவனின் தந்தை பாடசாலைக்குள் புகுந்து தாக்குதல் மேற்கொண்டதில் அவ் ஆசிரியர் காயங்களுக்கு உள்ளாகி யாழ். போதான வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்நிலையில் பாடசாலையில் கற்பிக்கும் சில ஆசிரியர்கள், தமக்கு அச்சுறுத்தல் உள்ளமையால் தாம் உளரீதியான பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளதாகவும் பாதுகாப்பான பாடசாலை ஒன்றுக்கு இடமாற்றம் வழங்க வேண்டும், ஆசிரியர் மீது தாக்குதல் மேற்கொண்டவரை கைது செய்ய வேண்டும், மற்றைய மாணவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க மேற்படி மாணவனுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும் என மூன்று கோரிக்கைகளை முன் வைத்து கடிதம் மூலம் அதனை வடக்கு ஆளுநரிடம் தெரியப்படுத்தியுள்ளனர். தமது கோரிக்கைகளை நிறைவேற்றும் வரையில் தாம் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபட மாட்டோம் எனவும் அக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை யாழ்ப்பாண பொலிஸார் முன்னெடுத்து வருவதாகவும் தாக்குதல் மேற்கொண்டவர் புத்தளம் பகுதிக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளதாகவும் அவரை கைது செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, குறித்த சம்பவங்கள் தொடர்பில் செய்தி சேகரிக்க சென்ற இரண்டு ஊடகவியலாளர்களை, பாடசாலையின் பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் என தம்மை அடையாளப் படுத்திக் கொண்ட நபர்கள் சிலர் அச்சுறுத்தி, அவர்களின் கையடக்க தொலைபேசி, கமரா என்பவற்றை பறித்து, படங்களை அழித்து, பாடசாலை தொடர்பில் எந்த செய்தியும் வெளிவர கூடாது என அச்சுறுத்தி இருந்தனர். அது தொடர்பில் ஊடகவியலாளர்களால் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.




கனடா அனுப்புவதாக கூறி

## ஒரு கோடி ரூபா மோசடி செய்ததாக பெண் மீது இளைஞர்கள் புகார்

**யாழ். விசேட நிருபர்**

கனடாவிற்கு அனுப்புவதாக கூறி தம்மிடம் இருந்து 99 இலட்சத்து 35 ஆயிரம் ரூபா பணத்தினை மோசடி செய்துள்ளார் என பெண்ணொருவருக்கு எதிராக இரு இளைஞர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பண்டத்தரிப்பு பகுதியை சேர்ந்த பெண்ணொருவர் தம்மை கனடாவிற்கு அனுப்புவதாக ஆசை வார்த்தைகள் கூறி கடந்த ஏப்ரல் மாதம் பணத்தை பெற்றுக்கொண்டதாகவும், 7 மாதங்கள் கடந்தும் இதுவரையில் எம்மை வெளிநாடு அனுப்புவதற்கான எந்த ஏற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்த அவ் இளைஞர்கள், அப்பெண்ணிடம் தாம் பணத்தை மீளத் தருமாறு கேட்ட போது, கொழும்பில் உள்ள முகவர் ஒருவருக்கு அவர் பணத்தை செலுத்தி விட்டதாகவும், தற்போது அந்த முகவரது தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் கூறுகிறார் எனவும் தெரிவித்தனர்.

சண்டிலிப்பாய் மற்றும் சங்கானை பகுதிகளை சேர்ந்த இரு இளைஞர்களில் ஒருவர் 55 இலட்ச ரூபாவும், மற்றையவர் 44 இலட்சத்து 35ஆயிரம் ரூபாவும் அப்பெண்ணிடம் கொடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



யாழ். மாநகர சபைக்கு நேற்று முன்தினம் (22) விஜயம் செய்த இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகர் மேஜர் ஜெனரல் உமர் பாரூக் புர்கி, யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணனை சந்தித்து கலந்துரையாடியபோது பிடிக்கப்பட்ட படம். இதன்போது யாழ் மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனும் உடனிருந்தார். (யாழ். விசேட நிருபர்)

## வல்லை நீரேரியிலிருந்து இளைஞன் சடலமாக மீட்பு



**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணம் அச்சுவேலி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வல்லைப் பாலத்தில் மீன் பிடித்துக் கொண்டிருந்தபோது நீரேரியில் தவறி விழுந்து காணாமல் போயிருந்த இளைஞரொருவர் நேற்றைய தினம் புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புத்தூர் கலைமதி கிராமத்தை சேர்ந்த பாஸ்கரன் திலக்ஸன் (வயது 19) எனும் இளைஞனே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞரும் அவரது நண்பர்கள் சிலரும் இணைந்து வல்லை பாலத்தில் நேற்றுமுன் தினம் செவ்வாய்க்கிழமை மாலை வேளையில் தூண்டில் போட்டு மீன் பிடியில் ஈடுபட்டுள்ளனர்.அதன் போது இளைஞன் பாலத்தில் இருந்து நீரேரிக்குள் தவறி விழுந்ததையடுத்து இளைஞரைத் தேடும் பணியில் அச்சுவேலி பொலிஸாரும் பொதுமக்களும் இணைந்து ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் புதன்கிழமை கடற்படையினரின் சுழியோடிகளால் இளைஞன் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## யாழ். சங்கரத்தை வித்தியாசாலையில் கட்டடத்தொகுதி அங்குரார்ப்பணம்



**சாவகச்சேரி விஷேட நிருபர்**

யாழ். சங்கரத்தை வித்தியாசாலையின் புதுப்பிக்கப்பட்ட கட்டடத்தொகுதி திறப்பு விழா வைபவமும் வருடாந்த பரிசளிப்பு விழாவும் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ப.சிவலோகநாதன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நிதிப் பங்களிப்பாளர்களான பேராசிரியர் இராஜராஜன், திருமதி அகிலா இராஜராஜன் ஆகியோர் கலந்து கொண்டு புனரமைக்கப்பட்ட வித்தியாசாலைக் கட்டடத்தை திறந்து வைத்திருந்தனர். அத்துடன் வித்தியாசாலையின் நிறுவுனர் சிலையை நிறுவுனரின் உறவினரான ஜஷிகன் இராஜலதன் திரைநீக்கம் செய்து வைத்திருந்தார்.

பாடசாலைக் கட்டடமானது பேராசிரியர் இராஜராஜன் குடும்பத்தினரின் 8 மில்லியன் ரூபா நிதியில் புனரமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் கொழும்புக்கிளை பழைய மாணவர் சங்க கூட்டம்

யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி கொழும்புக்கிளை பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 3 ஆம் திகதி சனிக்கிழைமையன்று காலை 9.30 மணிக்கு பம்பலப்பிட்டி தொடர்மாடி சன சமூக நிலையத்தில் (Community Centre) சங்கத்தின் தலைவர் ஏ. பரணி ரூபசிங்கம் தலைமையில் நடைபெறுமென கொழும்புக்கிளை நிர்வாகக் குழு துணைத் தலைவர்களின் ஒருவரான செ. துரைராசா தெரிவித்தார்.

வருடாந்த பொதுக் கூட்ட அறிவித்தல், கணக்கு அறிக்கை என்பவற்றை நிர்வாகக் குழு செயலாளர் என். ஜெயபாஸ்கர் சகல சங்க அங்கத்தவர்களுக்கும் மின்னஞ்சல் வழியாக அறிவித்துள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

## மீன்சந்தை கட்டடத்தொகுதி திறந்துவைப்பு

**பருத்தித்துறை விசேட நிருபர்**



வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட காக்கைதீவு மீன் சந்தை ஒன்றரை கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தலைமையில் நேற்று காலை திறந்து வைக்கப்பட்டது.

காக்கைதீவு பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்ட மீனவர்கள் கடற்தொழிலை ஜீவனோபாயமாக மேற்கொண்டு வருகின்றனர். மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக சபையின் ஒன்றரை கோடி ரூபாய் நிதிப் பங்களிப்பில் மீன் விற்பனை நிலையம் மற்றும் அதனுடன் கூடிய நவீன மலசல கூடம் என்பன அமைக்கப்பெற்று நேற்றைய தினம் அது திறந்துவைக்கப்பட்டது. பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சுலோச்சனா முருகதாசன் நாடா வெட்டி திறந்துவைத்தார். அத்துடன் யாழ். பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பணிப்பாளர் நடராஜா சர்வேஸ்வரன் கல்வெட்டை திரைநீக்கம் செய்து வைத்தார்.

இதன் பொழுது மானிப்பாய் பிரதேச கடற்தொழில் சங்கங்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள், பிரதேச பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், உபதவிசாளர் சி.கணேசவேல், பிரதேச சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

## இராணுவத்தால் வீடு கையளிப்பு

**(நாகர்கோவில் விஷேட நிருபர்)**



வடமராட்சி தம்பசிட்டி பூவற்கரையில் இராணுவத்தினரினால் புதிதாக அமைக்கப்பட்ட வீடு கையளிக்கும் நிகழ்வு நேற்று புதன்கிழமை (23) இடம் பெற்றது.

55 வது காலால் படைபிரிவு படைத் தளபதி மேஜர் ஜெனரல் பிரசன்ன குணரத்னவின் அழைப்பின் பெயரில், யாழ். படைகளின் கட்டளை தளபதி ஜெனரல் சந்தன விஜேசுந்தர பிரதம விருந்தினராக கலந்து கொண்டு, வீட்டிற்கான நிதி அனுசரணையாளர் சீலாணிமானுவேல், சிறப்பு கௌரவ விருந்தினர்களுடன் இணைந்து சம்பிரதாய பூர்வமாக நாடாவை வெட்டி திறந்து வைத்தனர்.

இந் நிகழ்வில் 551 வது படையணி பிரிகேடியர் சிந்திக்க, வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிறி, காங்கேசன்துறை இரண்டின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் சுஜீவ இத்துமால் கொட, பருத்தித்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பிரியந்த அமரசிங்க, பருத்தித்தித்துறை பிரதேச சபை தவிசாளர் ச.அரியகுமார், பருத்தித்தித்துறை நகரசபை தவிசாளர் யோ.இருதயதாஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




HNB ASSURANCE

SupremeHealth Unlimited

அனைத்திற்கும் மேலாக - சிறந்த சுகாதார திட்டம்

- வருடாந்தக் காப்பீடு ரூ.75 மில்லியன்
- உங்கள் குடும்பம் மற்றும் பெற்றோருக்கான மருத்துவக் காப்பீடு
- மருத்துவமனை கட்டணங்களில் உப எல்லைகள் இல்லை
- உலகளாவிய பணம் செலுத்தும் அவசியம் இல்லாத உரிமைகோரல் தீர்வு சேவை
- No Claim Benefit + Restore Benefit சகிதம் வரையறையற்ற அனுகூலங்கள்

மேலும் விபரங்களுக்கு 1301
www.hnbassurance.com

HNB ASSURANCE GROUP | HNB ASSURANCE | HNB General Insurance

HNB அஷ்யூரன்ஸ் PLC (PQ 108) ... கொழும்பு 03.

# கட்டுகஸ்தோட்டையில் நீர் விநியோகத் தடை

(பேருவளை விசேட நிருபர்)




கட்டுகஸ்தோட்டை பாரிய கண்டி நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அத்தியாவசிய திருத்தப் பணிகள் மேற்கொள்ளப் படவுள்ளதால் இன்று 24ஆம் திகதி வியாழக்கிழமை மு.ப. 8 மணி முதல் பி.ப. 2 மணி வரையிலான 6 மணிநேர நீர் விநியோகத்தடை பின்வரும் பகுதிகளில் அமுலாகும் என தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை அறிவித்துள்ளது.

கஹவத்த, தெலும்புகஹவத்த, உருகொட, கஹல்ல, வலனகல மற்றும் ஹிராகடுவ ஆகிய நீர்த்தேக்கங்களை உள்ளடக்கிய பிரதேசங்களில் நீர் விநியோகம் தடைப்படும்.

இதனால் பாவனையாளர்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களுக்கு தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை கவலை தெரிவிப்பதோடு, நீரை முன்கூட்டியே சேமித்து வைத்து சிக்கனமாக பயன்படுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளது. இது பற்றிய மேலதிக விபரங்களுக்கு 1939 என்ற இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும்.

# பெரும்பான்மை பலமிருந்தால் பாராளுமன்றை கலைக்க எதிரணி பிரேரணையை கொண்டுவரலாம்

(லோரன்ஸ் செல்வநாயகம்)



பெரும்பான்மை பலம் இருக்குமானால் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தை கலைப்பதற்கான பிரேரணையை கொண்டு வர முடியுமென, பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

அரசியலமைப்பிற்கிணங்க134 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுடன் பதவியிலுள்ள ஜனாதிபதிக்கு, மக்கள் ஆணை கிடையாதென்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளுக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பலம் இருக்குமாயின், பாராளுமன்றத்தை கலைக்கும் பிரேரணையை அவர்கள் தாராளமாகக் கொண்டு வரமுடியும் என்றும் பிரதமர் தெரிவித்தார். அரசாங்கமானது எந்த நிலையிலும் பாராளுமன்ற ஜனநாயகத்திற்கு மதிப்பளித்தே செயல்படும் என்றும் அவர் தெரிவித்தார்

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற வரவு செலவுத் திட்ட குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

# முன்னாள் அமைச்சர் பெ. சந்திரசேகரனின் தாயார் காலமானார்

லிந்துலை நிருபர்

மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபக தலைவரும் முன்னாள் அமைச்சருமான அமரர் பெரியசாமி சந்திரசேகரன் அவர்களின் அன்புத் தாயார் தனது 86 வது வயதில் நேற்று இயற்கை எய்தினார். அன்னாரின் இறுதிக்கிருகைகள் இன்றைய தினம் (24) தலவாக்கலை ஹொலிருட் தகனச் சாலையில் நடைபெறவுள்ளதாக குடும்பஸ்தினர் தெரிவித்தனர்.

## குரங்கம்மை வைரஸின்... (02 ஆம் பக்கத்தொடர்)

உலகளாவிய ரீதியில் குரங்கம்மை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அண்மையில், வெளிநாடுகளிலிருந்து இலங்கை திரும்பிய இருவர் குரங்கம்மை தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

## வெளிநாட்டவரை... (02 ஆம் பக்கத்தொடர்)

கூறினார்.

கடந்த 10 மாதங்களில் 1,703 இலங்கையர் பதிவாளர் நாயகத்தின் சம்மதத்துடன் வெளிநாட்டவரை திருமணம் செய்து கொண்டதாகவும், இவர்களில் பெரும்பாலானோர் ஐரோப்பிய நாடுகளில் வசிப்பவர்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## பாடசாலைகளை சுற்றி... (02 ஆம் பக்கத்தொடர்)

போதைக்காக பயன்படுத்தப்படும் மாத்திரைகள் மற்றும் போதைப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டதுடன், அந்த போதைப் பொருட்களை விற்பனை செய்தவர்களும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இதையடுத்து, பாடசாலைகளைச் சுற்றி புலனாய்வுப் பிரிவினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு, போதைப் பொருள் வர்த்தகர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

## நாட்டின் அனைத்து... (02 ஆம் பக்கத்தொடர்)

தெரிவித்தார். நாட்டிலுள்ள சகல போக்குவரத்துத் துறைகளையும் ஒரே டிஜிட்டல் தளத்தில் கொண்டு வருவது பிரதான முன்மொழிவாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த முன்மொழிவுகள் அனைத்தையும் உள்ளடக்கிய அறிக்கை, டிசம்பர் மாதம் தேசிய சபையிடம் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

## இனப்பிரச்சினை தீர்வுக்கு அனைத்து...

ராஜபக்‌ஷவும் இணக்கம் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

தேர்தல் தொடர்பில் இதன் போது கருத்து தெரிவித்த ஜனாதிபதி, நாட்டில் பாரிய பொருளாதார நெருக்கடி காணப்படுவதால், அது தீர்க்கப்பட்ட பின் தேர்தலை நடத்துவது பற்றி யோசிக்க முடியும் என தெரிவித்தார். தேர்தல் முறை மாற்றப்பட வேண்டும்.விருப்பு வாக்கு தேர்தல் முறை காரணமாக பெரும் செலவுகளும் சிக்கல்களும் உருவாகின்றன. இந்நிலையில், நாட்டின் பொருளாதார நிலைமைக்கு தீர்வு காணப்பட வேண்டும். இதற்காக எதிர்க்கட்சிகள் எம்மோடு இணைந்து செயல்பட வேண்டும் என கேட்டுக் கொண்டார். எதிர்க்கட்சிகள் எம்மோடு இணைந்து ஒத்துழைப்புடன் செயல்பட்டால் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என்றும் அவர் தெரிவித்தார்.

## டெங்கு நோயாளர்...

பரவுவதைத் தடுக்க, சுற்றுப்புறங்களை சுத்தமாக வைத்திருக்குமாறு அவர் கேட்டுள்ளார்.

இவ்வருடத்தில், இதுவரை 55 ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இது 2021இல், பதிவான எண்ணிக்கையை விட இரண்டு மடங்கு அதிகமென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## தங்கத்தின் விலையில்...

நாட்களாக தங்கத்தின் விலை சிறிதளவு உயர்ந்து வருகிறது.

இலங்கையில், தங்க நிலவரத்தின்படி, 24 கரட் தங்கப் பவுண் ஒன்று 1,79,150 ரூபாவாக பதிவாகியுள்ளது. அதேபோல 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 1,64,200 ரூபாவாக இருந்தது.

இந்நிலையில்,21 கரட் தங்கப் பவுண் ஒன்று 1,56,750 ரூபாவாக நேற்று பதிவாகியுள்ளது. எனினும், ஆபரணத் தங்கத்தின் விலை இந்த விலைகளிலிருந்து மாற்றம் பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கடந்த மாதங்களில் 22 கரட் தங்கப் பவுண் ஒன்று வரலாறு காணாத வகையில் உயர்ந்து 2,00,000 ரூபாவை எட்டியிருந்தது.

எனினும், அடுத்து வந்த சில நாட்களில் 20 தொடக்கம் 40 ஆயிரம் ரூபாவால் தங்கத்தின் விலை குறைவடைந்து, தற்போது 1,60,000 ரூபாவை அண்மித்த விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

## சிறு விற்பனையாளருக்கு...

தெரிவித்துள்ளது. நாடு முழுவதும் எரிவாயு தட்டுப்பாடு நிலவுவதால் இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## இலங்கையிருந்து மேலும்...

இந்நிலையில், வவுனியா மாவட்டம் கணேசபுரத்தைச் சேர்ந்த உதயசூரியன், அவரது மனைவி பரிமளம் மற்றும் அவரது நான்கு குழந்தைகள், வவுனியா மாவட்டம் பூவரசங்குளம் பகுதியைச் சேர்ந்த புவனேஸ்வரி, அவரது மூன்று குழந்தைகளென இரண்டு குடும்பத்தை சேர்ந்த 10 பேர் மன்னாரிலிருந்து நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (22) இரவு படகில் புறப்பட்டு தனுஷ்கோடிக்கருகே முகுந்தராயர் சத்திரம் பகுதியை சென்றடைந்தனர். தகவலறிந்த இராமேஸ்வரம் கரையோர பொலிஸார், இவர்களை மீட்டு, மண்டபம் கரையோர காவல் நிலையத்தில் வைத்து விசாரணை நடத்தினர். பாதுகாப்பு அதிகாரிகளின் விசாரணைக்கு பிறகு இந்த பத்துப்பேரும் மண்டபம் அகதிகள் முகாமில் ஒப்படைக்கப்பட்டனர். தமிழகத்துக்கு இலங்கையிலிருந்து சென்ற அகதிகள் எண்ணிக்கை 208 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு கடத்தவிருந்த...

செய்யப்பட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டத்தின் தென்கடல் பகுதியான மன்னார் வளைகுடா வழியாக, இலங்கைக்கு கஞ்சா கடத்தவுள்ளதாக மத்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. இதைத் தொடர்ந்து, மண்டபத்திலுள்ள இந்திய கடலோர காவல் படையினரின் உதவியுடன் ரோந்து கப்பலில்,ரோந்து நடவடிக்கைகள் ஆரம்பமாகின.

இதன்போது, நடுக்கடலில் வந்த தமிழக மீன்பிடிப் படகை இராணுவத்தினர் சோதித்தனர்.

இச்சோதனையில், எட்டு கோணிப்பைகளில் 300 கிலோ கஞ்சாவும், 500 கிராம் எடையுள்ள கஞ்சா எண்ணெயும் இருந்தமை தெரிய வந்தது. படகில், சுமார் 80க்கும் மேற்பட்ட பார்சல்களிலிருந்த 300 கிலோ கஞ்சாவும் பறிமுதல் செய்யப்பட்டது. மேலும்,இதனுடன் சம்மந்தப்பட்ட நால்வரும் கைதாகினர்.

மேலும் இவர்களிடமிருந்து அரை லீட்டர் போதை வஸ்து எண்ணெய், ஜி.பி.எஸ் கருவிகள் மற்றும் செல்போன்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைப்பற்றப்பட்டுள்ள கஞ்சாவின் சர்வதேச மதிப்பு சுமார் இந்திய ரூபாவில் 03 கோடிக்கும் அதிகமெனக் கூறப்படுகிறது.

## பட்ஜட்டுக்கு ஆதரவளித்த துமிந்தவுக்கு...

வரவு செலவுத் திட்டத்துக்கு எதிராக வாக்களிக்க கட்சியின் மத்திய குழு எடுத்த தீர்மானம் தமக்கும் பொருந்துமென்றும்,மத்திய குழுவில் தானும் பங்குபற்றியதாகவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, முன்னாள் ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க மீண்டும் கட்சியின் ஆட்சியை பிடிப்பாரா? என ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மைத்திரிபால சிறிசேன, இது தொடர்பில் அச்சப்படவில்லை, எவரும் கட்சியில் இணையலாம் என்றார்.

## இ.தொ.கா முன்னாள் தலைவர்...

உடபுஸ்ஸல்லாவ டலோஸ் தோட்டத்தில் முத்துகக்ருப்பன் வீராயி தம்பதிகளின் நான்காவது பிள்ளையான இவர், ஆரம்ப கல்வியை டலோஸ் தமிழ் வித்தியாலயத்திலும், உயர் கல்வியை நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியிலும் பயின்றார்.

1956 ஆம் ஆண்டு இலங்கை தொழிலாளர் காங்கிரசில் சாதாராண ஒரு உறுப்பினராக தன்னை இணைந்து, தொழிற்சங்க அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்து,அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் விசுவாத்தை வென்றிருந்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசில் பல்வேறு பதவிகளை வகித்ததுடன், இறுதியில்கட்சியின் தலைவராக இருந்து ஓய்வுபெற்றார்.

முன்னாள் ஜனாதிபதிகளான ஜே.ஆர்.ஜயவர்த்தன, ரணசிங்ஹ பிரேமதாச, டி.பி.விஜேதுங்க, சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க, மஹிந்த ராஜபக்‌ஷ ஆகியவர்களுடன் இணைந்து செயற்பட்டவர்.

மலையக மக்களுக்கு மின்சாரம் பெற்றுக் கொடுப்பதில் முன்னின்று செயற்பட்ட அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24) மாலை 03 மணிக்கு நவரெலியா பொது மயானத்தில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

## கனடாவுக்கு ஆட்கடத்தல்... (02 ஆம் பக்கத்தொடர்)

ஒரு குழுவை அமைத்து உடனடி விசாரணைகளை நடத்துமாறு நான், ஜனாதிபதியிடம் கோருகிறேன். அதேபோன்று, சிவநேசதுரை சந்திரகாந்தனின் காணி ஆவணங்களையும் நான் தருகி றேன். அது தொடர்பிலும் விசாரணை நடத்தப்பட வேண்டும். சிவநேசதுரை சந்திரகாந்தன் காணி அபகரிப்பில் ஈடுபடுவதை, என்னால், ஆதாரத்துடன் தெரிவிக்க முடியும். மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுத்தலைவரான இவரின், ஊழல்களை விரைவில் கண்டுபிடிப்போம்

கனடாவுக்கு விசா எடுப்பது எப்படி என்பது கூட அவருக்குத் தெரியாது. இதை, திங்கட்கிழமை அவர் நிரூபித்திருந்தார்.

துணைவேந்தர் ரவீந்திரநாத் கடத்தப்பட்டார். பிரேமினி என்ற பெண் கடத்தப்பட்டு பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளார்.இதனைப் பற்றி அவரிடம் கேட்க வேண்டும்.

அவுஸ்திரேலியாவுக்கு ஆட்கடத்துவது தொடர்பில் ஏ பி.சி. செய்தியில் செப்டம்பர் (22) வெளியான செய்தியில் சிவநேசதுரை சந்திரகாந்தனின் சகோதரர் என அழைக்கப்படும் அகிலகுமார் சந்திரகாந்தன் குறிப்பிடப்பட்டிருந்தார். இந்த ஆவணங்களை சபையில் சமர்ப்பிக்கின்றேன். '

## விவசாயக் காணிகள் பலவும்... (02 ஆம் பக்கத்தொடர்)

கடந்த இரண்டு வருடங்களாக இந்த உயர் சபையிலும், பல முறை இது குறித்து பேசி வருகின்றோம். அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், அக்கரைப்பற்று, வட்டமடு உள்ளிட்ட இன்னோரன்ன பல பிரதேசங்களில், பல்லாயிரக்கணக்கான ஏக்கர் காணிகள் அரசுடைமையாக்கப்பட்டுள்ளன.இதனால், அவற்றை விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்த முடியாமல் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். யுத்த காலத்தில், அவர்களுடைய விவசாய நிலங்களுக்கு செல்ல முடியாதிருந்தது. இதனால், இவர்களுடைய சொந்தக் காணிகள் எல்லாம் அரச இயந்திரங்களுக்கு கீழ் வர்த்தமானி அறிவித்தல் செய்யப்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் தமது தொழிலையிழந்து, மோசமான பொருளாதார நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இது குறித்து, நாங்கள் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரிடமும் பாராளுமன்ற ஆலோசனை சபை கூட்டத்திலும் இன்னும் பல சந்தர்ப்பங்களிலும் பலமுறை சுட்டிக் காட்டினோம். எனினும், இதற்கான தீர்வுகள் இதுவரை பெற்றுக்கொடுக்கப்படவில்லை. எனவே,இக்காணிகளை உரியவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென வேண்டுகோள் விடுக்கிறேன். கைத்தொழிற்சாலைகள் மூடப்படும் அபாய நிலை ஏற்பட்டுள்ளது.

அதேபோன்று, தனியார் துறையில் வேலை செய்பவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்தியாவசிய பொருட்களின் விலை பல மடங்காக அதிகரித்துள்ள போதும், அவர்களுடைய சம்பளம் எந்தவொரு மாற்றத்தையும் காண முடியவில்லை.

## பிணையெடுக்க எவருமே... (02 ஆம் பக்கத்தொடர்)

லக்மினி அமரசிங்க ஆகியோர் முன்னிலையிலே இச்சந்தேக நபருக்குப் பிணை வழங்கப்பட்டது. கொலைச் சம்பவம் தொடர்பில் கொழும்பு விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எழுபது, வயதுடைய சந்தேக நபரான ஜேம்ஸ் அன்டனி லோரன்ஸ் என்பவரே இவ்வாறு நீதிமன்றத்தினால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

## அரசுடன் ஆக்கபூர்வமாக செயற்பட...

நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் அரசியல் நெருக்கடி பொருளாதார நெருக்கடியுடன் பிணைந்துள்ளதை சுட்டிக்காட்டிய அவர், உலகளவில் நம்பிக்கை கட்டியெழுப்பப்பட, தேசிய பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முக்கியமாகும் என்றும் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற ஜனாதிபதி, பிரதமர் அலுவலகம், பாராளுமன்றம் உள்ளிட்ட 16 விடயதானங்களுக்கான வரவு செலவு திட்டத்தின் நிதி ஒதுக்கீடு தொடர்பான குழு நிலை விவாதத்தில், உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சபையில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

சுதந்திரத்துக்கு பின்னரான நோயாக, நாட்டில், தேசிய இனப்பிரச்சினை தொடர்கிறது. அதிகார பரவலாக்கம் தொடர்பில், உலகில் 40க்கு மேற்பட்ட நாடுகள் "சமஷ்டி முறை அரசைக் கொண்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ சர்வ கட்சி மாநாடு நடத்தி, சிறந்த அறிக்கையை பெற்றுக் கொண்டார்.அத்துடன் 2000 ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தேசிய பிரச்சனை தீர்வு தொடர்பில் சட்ட மூலம் ஒன்றை கொண்டு வந்தார். அந்த சமயத்தில் அதிகாரப் பரவலாக்கலுக்கு, எதிர்க்கட்சிகள் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. எனினும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையே அக்கட்சிகள் எதிர்த்தன.

நாட்டில் அனைத்து மக்களும் திருப்தியுடன் ஏற்றுக்கொள்ளக் கூடிய அனைவரும் பாதுகாப்பு உணர்வுடன் வாழக்கூடிய தீர்வு முன்வைக்கப்பட வேண்டும். அதை நாம் வரவேற்கின்றோம். இதற்கு நீண்ட காலம் அவசியமில்லை. ஒரு நாளில் அமர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி தீர்வை பெற்றுக் கொள்ள முடியும். தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் அதுவே நடைபெற்றன.

வரவு செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பில், எதிராக வாக்களிக்கவே முதலில் நாம் தீர்மானித்தோம். ஆனால், பின்னர் எதிராக வாக்களிப்பதில்லை என்ற தீர்மானத்தை எடுத்தோம். கடந்த பத்து நாட்களில் பல சந்தர்ப்பங்களில் தேசிய பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும் என்று ஜனாதிபதி வலியுறுத்தி வருகிறார். கலந்துரையாடுவதற்காக அவர் தமிழ் தேசிய கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஜனாதிபதிக்கு மதிப்பளித்து, அவருக்கு எமது நம்பிக்கையை வெளிப்படுத்துவதற்காகவே, நாம் வாக்களிப்பில் கலந்து கொள்வதில்லை என்று தீர்மானித்தோம்.

வாக்குறுதிகள் உறுதிப்படுத்தும் போதே நல்லிணக்கம் ஏற்படும். உண்மைகளை மூடி மறைத்தால் நல்லிணக்கம் ஏற்படாது. காணாமற் போனோர் தொடர்பான அலுவலகம் அமைக்கப்பட்டு பல வருடங்கள் கடந்துள்ளன. ஒரு விசாரணை கூட நடக்கவில்லை. வாக்குறுதி செயற்பாடுகளில் இருக்க வேண்டுமென்றும் அவர் தெரிவித்தார்.

## மண்ணெண்ணெய் விநியோக...

ஊடாக மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் தொடர்ந்து விநியோகிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அனுமதி வழங்கப்பட்டிருந்தும் பணம் செலுத்தாத காரணத்தால் நேற்று (22) மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாத அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் இன்று (23) மண்ணெண்ணெய் விநியோகிக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கீர்த்தி தென்னகோன் மேலும் தெரிவித்தார்.

மேலும், இதுவரை மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படாத 18 கூட்டுறவு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலம், மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாகாண கூட்டுறவு ஆணையாளர்கள் மற்றும் செயலாளர்களின் பரிந்துரையின் பேரில், இதற்கு தேவையான நிதி வசதிகள் கூட்டுறவு கிராமிய வங்கிகளால் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மீனவர்களுக்கான எரிபொருள் விநியோகம் தொடர்பான மேற்பார்வை மற்றும் முகாமைத்துவம் மாகாண பிரதம செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களுக்கு நேற்று முன்தினம் (22) முதல் வழங்கப்பட்டுள்ளது.

இதற்கமைய மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் விநியோகம் இன்று (24) முதல் முழுமையாக இயல்பு நிலைக்கு திரும்பும் என்றும் கீர்த்தி தென்னகோன் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வத்தளை ஹெந்தல, பேருவளை (மீனவத் துறைமுகம்), ஹெந்தல விஜேசிங்க, காலி, அஹுங்கல்ல, தங்காலை, நுரைச்சோலை, புத்தளம், சிலாபம் வெல்ல, சிலாபம் அலுத்வத்த, வல்வெட்டித்துறை, புதுக்குடியிருப்பு, ஊர்காவற்றுறை, மைலிட்டி, தலையடி, குருநகர், களுவாஞ்சிக்குடி உள்ளிட்ட பல பகுதிகளுக்கு 28 எண்ணெய் பவுசர்கள் நேற்று முன்தினம் (22) விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும், கடற்றொழில் திணைக்களத்தின் கீழ் இயங்கும் 14 துறைமுகங்களிலுள்ள மீனவர்களுக்கு மண்ணெண்ணெய் மற்றும் டீசல் எரிபொருள் தொடர்ந்து வழங்கப்படும்.

நவம்பர் (22 ) முதல் தெற்கு, மேற்கு, வடமேற்கு, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பிரதம செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்களின் நேரடிக் கண்காணிப்பிலேயே மீனவர்களுக்கு அவசியமான எரிபொருள் விநியோகம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

மீனவர்களின் எரிபொருள் தேவை தொடர்பில் தற்போது காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, களுத்துறை, கொழும்பு, கம்பஹா, புத்தளம், யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களின் மாவட்டச் செயலாளர்களும் கடற்றொழில் திணைக்களமும் ஆராய்ந்து வருகின்றன.

மீன்பிடி நடவடிக்கைகளுக்கு எரிபொருளைப் பெறுவதில் ஏதேனும் சிரமம் இருப்பின், சம்பந்தப்பட்ட மாவட்டச் செயலாளர்கள் அல்லது மாகாண பிரதம செயலாளர்கள், கூட்டுறவுச் செயலாளர்கள் ஆகியோரிடம் கோரிக்கை விடுக்குமாறு ஜனாதிபதியின் சமூக விவகாரப் பிரிவு, மீனவ சங்கங்களையும், வர்த்தகர்களையும் அறிவுறுத்தியுள்ளது.

## போராட்டங்களை நடத்தி...

போராட்டங்களுக்கு இடமில்லை. போராட்டத்தினால் அரசாங்கத்தை வீழ்த்த இடமளிக்க முடியாது.இராணுவத்தை களமிறக்கி, அவசரகால சட்டத்தை அமுல்படுத்தி இவ்வாறான ஆர்ப்பாட்டங்கள் முடக்கப்படும்.

நட்டமடையும் அரச நிறுவனங்களை விற்குமாறும், இலாபமடையும் நிறுவனங்களை விற்க வேண்டாமென வும் எதிர்க்கட்சி தலைவர், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர். நட்டமடையும் அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்துவது, முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் காலத்தில் ஆரம்பமானது.

கைத்தொழில் அமைச்சராக பதவி வகித்தேன். அப்போது இலாபமடைந்த பல அரச நிறுவனங்கள் விற்கப்பட்டன.

நட்டமடையும் அரச நிறுவனங்களை விற்க வேண்டுமென முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ குறிப்பிட்டுள்ளார். அதேபோல் எதிர்க்கட்சி தலைவரும் அவ்வாறே குறிப்பிட்டுள்ளார். ஆகவே ஒன்றிணைந்து ஒரு தீர்மானத்தை எடுப்போம்.

பாராளுமன்றம் அமைதியான முறையில் கூடும் சூழல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மே மாதம் 09 ஆம் திகதி, ஜுலை மாதம் 09 ஆம் திகதி நாட்டில் எவ்வாறான சூழல் காணப்பட்டது என்பதை அனைவரும் மீண்டும் நினைத்துப் பார்க்க வேண்டும். மே 09 ஆம் திகதி சம்பவம் தொடர்பில் பலர், நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

ஆனால் மே மாதம் 09 ஆம் திகதி நாட்டில் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாடுகளே இடம்பெற்றன. மக்கள் பிரதிநிதி ஒருவர் நடுவீதியில் மிலேச்சத்தனமான முறையில் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

கோட்டா கோ ஹோமென ஆரம்பத்திலிருந்து குறிப்பிட்ட பாராளுமன்ற உறுப்பினர், மயிரிழையில் உயிர் தப்பினார்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு எவ்வாறு அனுமதி வழங்குவது ?

மே மாதம் 09 ஆம் திகதி அலரிமாளிகையில் இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொள்ளாதவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

பாராளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கு தீ வைத்து, ஜனநாயகத்துக்கு எதிராக செயற்படுவதை எவ்வாறு ஏற்றுக் கொள்வது.

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிரான அடக்குமுறைகள் தலைதூக்கினால், படித்தவர்கள் அரசியலுக்குள் பிரவேசிக்கமாட்டார்கள்.

சண்டியர்கள் மாத்திரம்தான் அரசியலுக்குள் பிரவேசிப்பார்கள். போராட்டத்தால் பாதிக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நட்டஈடு வழங்க வேண்டும்.

ஜூலை மாதம் (09) போராட்டத்தில் ஜனாதிபதி விரட்டியடிக்கப்பட்டார். ஜனாதிபதி மாளிகை நாசமாக்கப்பட்டது. ஜனாதிபதி செயலகம் ஆக்கிரமிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து பாராளுமன்றத்தை சுற்றிவளைக்க முயற்சித்தனர்.

பாராளுமன்றத்தை சுற்றிவளைத்திருந்தால் நாடு மோசமாக பாதிக்கப்பட்டிருக்கும்..

ஜனநாயகத்தை உறுதிப்படுத்தும் வகையில் அரசியலமைப்பின் 17ஆவது திருத்தம், 19 ஆவது திருத்தம் ஆகியவற்றை உருவாக்க முன்னின்று செயற்பட்டவன் நான். தற்போது சர்வாதிகாரியாக சித்தரிக்கப்பட்டுள்ளேன்.

போராட்டகாரர்களால் மகாநாயக்க தேரர்களும், சர்வ மத தலைவர்களும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கப்பட்டனர்.

பௌத்த மத தலைவர்களை அச்சுறுத்துபவர்கள் எவ்வாறு அரசியலமைப்பின் 09 ஆவது உறுப்புரையின் பிரகாரம் பௌத்த மதத்தை பாதுகாப்பார்கள்.

அனுமதி பெற்ற போராட்டங்களை தடுக்கப்போவதில்லை.

முன்னிலை சோசலிச கட்சியின் தலைவர் குமார் குணரட்ணம் நல்லவராயின் பஷில் ராஜபக்‌ஷ எவ்வாறு கெட்டவரானார்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு ஆதரவாக நாட்டு மக்கள் தற்போது இல்லை. அனைத்து பிரச்சினைகளுக்கும் பேச்சுவார்த்தை ஊடாக தீர்வு காண முடியுமென்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

போராட்டத்தின் பின்னணியிலிருந்து செயற்பட்ட ஊடகங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும்.

போராட்டம் தொடர்பான விசாரணைகள் நிறைவு பெற்றதன் பின்னர், இச்சம்பவம் தொடர்பில் ஆராய ஆணைக்குழுவை ஸ்தாபிக்கவுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

## 'விஜயபாகு' P 627 கப்பல்

# துறைமுக அதிகார சபைக்கு ஜனாதிபதியால் கையளிப்பு





அமெரிக்க கடலோரப் பாதுகாப்பு திணைக்களத்தினால் இலங்கை கடற்படைக்கு வழங்கப்பட்ட P 627 ஆழ்கடல் பாதுகாப்புக் கப்பல் 'விஜயபாகு" என்ற பெயரில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில் அதிகார சபைக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (22) மாலை கொழும்புத் துறைமுக கிழக்கு முனையத்தில் இடம்பெற்றது.

கடல் பிராந்தியத்தில் காணப்படும் பொதுவான கடல்சார் சவால்களை முறியடிக்கும் வகையில் கூட்டாண்மையை வலுப்படுத்தவும், மேம்படுத்தவும் இந்தக் கப்பல் அமெரிக்க கடலோரப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் இலங்கைக் கடற்படைக்கு வழங்கப்பட்டது.

விசேட கடற்படை வாகனத் தொடரணியில் விழாவிற்கு வருகை தந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கடற்படையினரின் விசேட மரியாதையுடன் வரவேற்கப்பட்டார்.கப்பலை, அதிகார சபைக்கு கையளிப்பதற்கான பத்திரத்தை கட்டளை அதிகாரி கெப்டன் லங்கா திஸாநாயக்கவிடம் ஜனாதிபதி கையளித்தார்.

பின்னர் "விஜயபாகு" என பெயரிடப்பட்ட கப்பலின் பெயர்ப்பலகை மற்றும் உத்தியோகபூர்வ சின்னத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களும் கப்பலை பார்வையிட்டதுடன், கப்பலின் நினைவுப் புத்தகத்தில் நினைவுக் குறிப்பையும் இட்டார்.இதன் பின்னர், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடற்படைத் தளபதி விசேட நினைவுப் பரிசையும் வழங்கி வைத்தார்.

*'Hamilton Class High Endurance Cutter'* வகை கப்பல்களுக்கு சொந்தமான இரண்டாவது கப்பல் என்ற வகையில், இலங்கை கடற்படைக்கு கிடைத்த இந்த கப்பல் 115 மீட்டர் நீளம் கொண்டது. அதிகபட்ச வேகம் மணிக்கு 29 கடல் மைல்கள் ஆகும். இந்தக் கப்பல் ஒரே நேரத்தில் குறைந்தது 14,000 கடல் மைல் தூரம் வரை கண்காணிப்பு பணியை மேற்கொள்ளும் திறன் கொண்டது. மொத்தம் 187 கப்பல்களுடன் செயல்பாடுகளை மேற்கொள்ளக் கூடிய கடற்படை தொழில்நுட்ப சாதனங்கள் மற்றும் வசதிகளையும் இந்தக் கப்பல் கொண்டுள்ளது.

மேலும், இந்தக் கப்பல் அமெரிக்காவின் கடலோர காவல்படையின் கீழ் இருந்தபோது, அந்நாட்டின் கடற்பகுதியில் நடந்துவந்த சட்டவிரோத மீன்பிடித்தல், சட்டவிரோத கடற்பயணம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் ஆகியவற்றைத் தடுப்பதற்காக சிறப்பு பங்களிப்பை வழங்கியது.

P 627 ஆழ்கடல் பாதுகாப்புக் கப்பலைப் இலங்கை கடற்படை பெற்றுக்கொண்டதில் இருந்து அதன் கட்டளை அதிகாரி கப்டன் லங்கா திஸாநாயக்கவின் மேற்பார்வையில் கப்பலின் முதல் பணியாளர்கள் 130 பேர் கொண்ட குழுவினருக்கு சுமார் 10 மாதங்கள் கப்பல் தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதோடு இலங்கை கடற்படையின் தேவைக்கேற்ப கப்பலின் செயல்பாடுகள் நவீனமயப்படுத்தப்பட்டது.

தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சன்ங், பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் (ஓய்வு பெற்ற) கமல் குணரத்ன, விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன, பொலிஸ் மா அதிபர் சி. டி.விக்ரமரத்ன உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.


## இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

### ஏலவிற்பனை அறிவித்தல்

### அழியக்கூடிய கப்பற்சரக்கின் விற்பனை

**ஏலவிற்பனைத் திகதி: 25.11.2022**

**My No.: LD/S/CICT/2022/11/PC-01&LD/S/SLPA/2022/11/PC-04**

**CICT & JCT** திறந்த வெளிகளில் வைக்கப்பட்டுள்ள அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள தடை அகற்றப்படாத அழிந்து போகக்கூடிய கப்பற்சரக்கு கொள்கலன்கள் (புதிய தோடம்பழங்கள்) பண்டாரநாயக்க வாசல் (BQ) நலன்புரி கட்டிடத்தில் 2022.11.25 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு ஏலவிற்பனை மூலம் விற்கப்படும்.

2022.11.24 ஆம் திகதியன்று மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவை (+ பெசேவ மற்றும் ஏனைய வரிகள்) மு.ப. 8.30 மணியிலிருந்து மு.ப. 11 மணி வரையும் மற்றும் மீளளிக்கப்படும் கட்டணமாக 200,000 ரூபாவையும் செலுத்திய பின்னர், கொழும்பு-01, லோட்டஸ் வீதி, 15 ஆம் இலக்கத்திலுள்ள கெனல் யாட், வன் ஸ்ரொப் ஆவணமாக்கல் நிலையம், இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, லொஜிஸ்டிக்ஸ் பிரிவு, விற்பனை பிரிவு அலுவலகத்தில் ஏலவிற்பனை ஆவணங்கள் மற்றும் கேட் அனுமதிப்பத்திரங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்ளலாம்.

அவ்வாறே, தாவர தனிமைப்படுத்தல் சான்றிதழை பெற்றுக் கொள்ளக்கூடிய சாரார் மாத்திரம் இந்த ஏலவிற்பனையில் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள். அதியுயர் விலைக்கான விலைமனுதாரர் ஏலவிற்பனையின் ஐந்து (5) நாட்களுள் தாவர தனிமைப்படுத்தல் சான்றிதழை சமர்ப்பிக்கும்படி தேவைப்படுத்தப்படுவதுடன் அதனை சமர்ப்பிக்கத் தவறின் இத்தவறானது வைப்புத் தொகையை கையகப்படுத்தலுக்கு வழிவகுக்கும்.

2022.11.24 ஆம் திகதியன்று மதியம் 12 மணியிலிருந்து பி.ப. 1 மணி வரையும் உரித்தான திறந்த வெளியில் விற்பனைக்காக பட்டியலிடப்பட்டுள்ள அம்சங்கள் பரீட்சிக்கப்படலாம்.

மேலதிக விபரங்களுக்காக **www.slpa.lk** என்ற இணையத்தை பார்வையிடவும்.

**பிரதான முகாமையாளர் (லொஜிஸ்டிக்ஸ்),**
**24.11.2022**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**லொஜிஸ்டிக்ஸ் பிரிவு,**
**இல.: 15, லோட்டஸ் வீதி, கொழும்பு-01.**



திகதி 22.11.2022 செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 4947
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,935,360.00
ஆங்கில எழுத்து C வெற்றி இலக்கங்கள் 7 0 2 7 1 5
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.10,753,658.00

**கொவிசெத** Govisetha — சீட்டிழுப்பு இலக்கம் 3189
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,849,200.00
ஆங்கில எழுத்து J வெற்றி இலக்கங்கள் 41 43 46 70
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,591,055.60

**ராசி சுப பலன்** Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 256
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 8,444,880.00
இலக்கினம் துலாம் வெற்றி இலக்கங்கள் 11 15 29 37 விசேட இலக்கினம் துலாம்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.2,544,381.00

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம்: 977
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,714,080.00
வெற்றி இலக்கினம் C வெற்றி இலக்கங்கள் 32 35 59 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 133,964,225.60

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 1402
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,077,300.00
வெற்றி இலக்கினம் கும்பம் வெற்றி இலக்கங்கள் 3 2 5 7 8 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,057,732.40

**கோடி 28 + Mega POWER மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம் 1295
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,454,040.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.281,649,278.00
J 08 04 27 36 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00 அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ.10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475 Email : info@nlb.lk Web : www.nlb.lk
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01


## சிவஸ்ரீ டாக்டர் சாம்பசிவ மணிக்குருக்கள் ஏற்பாட்டில்

# டாக்டர் எல்.ஆர். ஈஸ்வரி அம்மா பாராட்டு விழாவும் திரையிசை விருந்தும்







சிவஸ்ரீ டாக்டர் சாம்பசிவ மணிக்குருக்கள் ஏற்பாட்டில் திரைப்பட பாடகி பட்டத்து ராணி இசையரசி கலைமாமணி டாக்டர் எல்.ஆர். ஈஸ்வரி அம்மாவின் இசை சேவையின் (65ஆவது ஆண்டு) கௌரவிப்பும் பாராட்டு விழாவும் திரையிசை விருந்தும் எதிர்வரும் 04.12.2022 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணி முதல் இரவு 9.30 வரை சென்னை 17, திநகரிலுள்ள சர். பிட்டி தியாகராஜா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சர்வதேச இந்து மத குருபீடாதிபதி சபரிமலைக் குருமணி டாக்டர் ஸ்ரீ ஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சார்யாரின் ஆசியுடன் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபுவின் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக இசையமைப்பாளர்களான சங்கர் கணேஷ், தீனா, ரி.எல். மஹாராஜன், நடிகர்களான வை.ஜி. மகேந்திரன், டெல்லி கணேஷ், பாண்டியராஜன், மதுரா டிராவல்ஸ் உரிமையாளர் வி.கே.ரி. பாலன் ஆகியோர் கலந்து கொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக ஏ.எல்.எஸ். புரெடக்ஷன் திருமதி ஜெயந்தி கண்ணப்பன், நடிகைகளான கே.ஆர். விஜயா, காஞ்சனா, சச்சு, வெண்நிற ஆடை நிர்மலா, சிஐடி சகுந்தலா, வடிவுக்கரசி, பாடகி அம்ருதா, பாடகர்களான ரி.எல். தியாகராஜன், கானா உலகநாதன், வேல்முருகன், முகேஷ், செந்தில் தாஸ் இவர்களுடன் இராஜேந்திரன், குரு, டைமன் பாபு ஆகியோர் கலந்துகொள்ளும் இந்நிகழ்வில் அனைவரும் பங்குபற்றலாம்.


**Repeat Your ad For Better Offers**



## விலைமனுக்களுக்கான அழைப்பு

**மாவட்டச் செயலகம் - பொலன்னறுவை**

**வன விலங்குகளிடமிருந்து பயிர்ச்செய்கைகளை பாதுகாப்பதற்கு விவசாயிகளுக்கு வாயு ரைபிள்களை வழங்குவதற்கான பெறுகை**

**பெறுகை இல. POL/DST/FRM/07**

1. பொலன்னறுவை மாவட்டச் செயலகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் வன விலங்குகளிடமிருந்து பயிர்ச்செய்கைகளை பாதுகாப்பதற்காக உற்பத்தி செய்யப்பட்ட 500 வாயு ரைபிள்களைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. இந்த விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் மேற்கொள்ளப்படும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2022-11-24ஆம் திகதி முதல் 2022-12-15ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி வரை பின்வரும் முகவரியிலிருந்து மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைமைக் கணக்காளர்,**
**மாவட்டச் செயலகம்,**
**பொலன்னறுவை.**
**தொலைபேசி: 027-2222061**
**தொலைநகல்: 027-2222061**
**மின்னஞ்சல்: accpolon@gmail.com**

4. மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், பொலன்னறுவை எனும் முகவரிக்குச் செய்யப்படும் எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத 2000.00 கட்டணத்தை மாவட்டச் செயலக சிறாப்பர் பிரிவிற்குச் செலுத்தியதன் பின் 2022-11-24ஆம் திகதி முதல் 2022-12-14ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணி முதல் 3.00 மணி வரை 2022-12-15ஆம் திகதி மு.ப. 9.00 மணி முதல் மு.ப. 10.00 மணி வரையில் சிங்கள மொழியிலான முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பெற்றுக்கொள்ளலாம்.
5. சகல விலைமனுக்களுடனும் விலைக்கோரல் பிணை முறியொன்றை அனுப்புதல் வேண்டும். மாவட்டச் செயலாளர், பொலன்னறுவை எனும் பெயரில் சமர்ப்பிக்க வேண்டிய விலைக்கோரல் பிணை முறியின் பெறுமதி 100,000.00 ரூபாவாகவிருத்தல் வேண்டும் என்பதுடன் அது இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற கோரிக்கை முறியாக அல்லது பொலன்னறுவை மாவட்டச் செயலக சிறாப்பர் பிரிவிற்கு ரொக்கப் பணமாகச் செலுத்தப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டாகவிருத்தல் வேண்டும்.
6. கொள்வனவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ள உருப்படியின் முழு அளவும் 2022 டிசம்பர் 25ஆம் திகதியாகும் போது வழங்கக்கூடிய கொள்ளளவு விலைமனுதாரர் வசம் இருத்தல் வேண்டும் என்பதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரலுக்கு இயைபாக மாதிரியை வழங்குதல் வேண்டும்.
7. சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களை 2022-12-15ஆம் திகதி அல்லது அதற்கு முன் மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், பொலன்னறுவை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வாயு துப்பாக்கிகளுக்கான விலைமனுக்களைச் சமர்ப்பித்தல்'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். 2022-12-15ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு மாவட்டச் செயலகத்தின் நிதி வள முகாமைத்துவப் பிரிவில் விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் இந்நிகழ்வில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**டப். ஏ. தர்மசிறி,**
**மாவட்டச் செயலாளர் / அரச அதிபர்,**
**பொலன்னறுவை.**



## மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு

### புத்தளம் லக் விஜய நிலக்கரி ஆலைக்கு 2022-2023 ஆம் ஆண்டிற்கான நிலக்கரியை வழங்குவதற்கான முன்மொழிவு கோரல்

**குறிப்பு : நிலக்கரி வழங்கல தொடர்பாக 2022 நவம்பர் 23 ஆம் திகதி வெளியிடப்பட்ட விளம்பர அறிவிப்பு நிராகரிக்கப்பட்டுள்ளதுடன் மேலும் கீழ்க் குறிப்பிடப்பட்ட தேவைகளுக்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம்.**

அமைச்சரவைக் கூட்டத்தின் வழிகாட்டலின்படி இலங்கை சோசலிச குடியரசின் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு, புத்தளம், நுரைச்சோலை, லக் விஜய நிலக்கரி ஆலைக்கு **2022-2023** ஆம் ஆண்டிற்கான நிலக்கரியை வழங்குவதற்கான நிலக்கரி வழங்குனர்களிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள நிலக்கரி வழங்குனர்கள், கடன் அடிப்படையில் **720,000±10% மெட்ரிக் டொண்** மதிப்பிடப்பட்டளவு நிலக்கரி வழங்குவதற்காக தங்களது முன்மொழிவுகளை சமர்ப்பிக்கலாம். மேற்குறிப்பிட்ட அளவு நிலக்கரி வழங்குவதற்கான நங்கூரமிடலானது **2023 ஜனவரி மாதம் முதல் 2023 ஏப்ரல் மாத கடைசி வரையாகும்.** விடுவிக்கப்பட்ட மற்றும் திறைச்சேரி உத்தரவாதங்கள் அல்லது சர்வதேச வணிக வங்கியால் வழங்கப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட கடன் கடிதம் போன்றவற்றை கோருவதற்குப் பதிலாக, கடன் அடிப்படையில் / ஒத்திவைக்கப்பட்ட கட்டண முறை / அல்லது வேறு ஏதேனும் கட்டண விதிமுறைகளில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள இணையதளத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலக்கரியின் தரம் கிலோகிராமுக்கு kcal 6150 கிலோகலோரி அளவிலான நிலக்கரியை வழங்குவதற்கான முன்மொழிவுகளை சமர்ப்பிக்க வேண்டும். முத்திரையிடப்பட்ட முன்மொழிவுகள் கொடுக்கப்பட்ட முகவரிக்கு வழங்கப்பட வேண்டும் அல்லது கடவுச்சொல் பாதுகாக்கப்பட்ட முன்மொழிவுகள் **2022.12.01 ஆம் திகதி 16.00 மணிக்கு (இலங்கை தரநிலை நேரம்)** என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும் அல்லது கடவுச்சொல் பாதுகாக்கப்பட்ட முன்மொழிவு Secretary@powermin.gov.lk மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

**செயலாளர்,**
**மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு,**
**இல-80, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு 07,**
**இலங்கை.**

விரிவான முன்மொழிவுகளை சமர்ப்பிப்பதற்கு முன்னர், இலங்கை நிலக்கரி கம்பனி (பிரைவேட்) லிமிடெட்டின் www.lankacoal.lk இணையத்தளத்தைப் பார்வையிடுவதன் மூலம் மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு,
இல-80, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்தை,
கொழும்பு 07, இலங்கை.

# கிழக்கின் குரல்



# எட்டு உயிர்களை காவு கொண்ட குறிஞ்சாக்கேணி படகு விபத்து

### நேற்றுடன் ஒரு வருட பூர்த்தி

கிண்ணியா மத்திய நிருபர், தம்பலகாமம் குறூப் நிருபர்





குறிஞ்சாக்கேணி படகு விபத்து இடம்பெற்று ஒரு வருடம் நேற்றையதினத்துடன் (23) பூர்த்தியடைந்ததையிட்டு, துஆப் பிரார்த்தனை குறிஞ்சாக்கேணி பாலமுன்றலில் நடைபெற்றது.

கடந்த வருடம் இதே தினத்தன்று காலை 7 மணிக்கு 15 மாணவர்களையும் 7 பெற்றோரையும் ஏற்றிக்கொண்டு, குறிஞ்சாக்கேணி ஆற்றங்கரையிலிருந்து கிண்ணியா ஆற்றங்கரைக்குப் பயணித்த படகானது கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தின்போது, பாடசாலைக்குச் சென்ற 5 மாணவர்களும் அம்மாணவர்களை அழைத்துச் சென்ற 2 தாய்மார்களும் ஒரு தந்தையும் உயிரிழந்தனர்.

கிண்ணியா பிரதேச செயலகமும் கிண்ணியா ஜமாத் உலமா சபையும் இணைந்து ஏற்பாடு செய்த துஆப் பிரார்த்தனையின் போது, இச்சம்பவத்தில் உயிரிழந்தவர்கள் நினைவு கூரப்பட்டனர். பாத்திமா சிரீன் (8), பாத்திமா அஹ்லா (6) ஆகிய இரு சகோதரிகளும் கைகளை இறுகப் பிடித்தவாறு ஜனாஸாக்களாக மீட்கப்பட்டிருந்தனர். அத்துடன், சலீம் சேஹு சஹி எனும் மூன்றரை வயதுடைய சிறுவனும் இச்சிறுவனின் தாயான பாத்திமா சப்ரீனாவும் (30) இவ்விபத்தில் உயிரிழந்தனர். மேலும், 39 வயதுடைய முகமது சக்கரியா தாலிசா எனும் தாயும் அவரது 6 வயதுடைய மகன் பரிஸ் பஹியும் உயிரிழந்தனர். 70 வயதுடைய அப்துல் காதர் உட்பட எண்மர் இவ்விபத்தில் உயிரிழந்தனர்.

இதேவேளை, குறிஞ்சாக்கேணிப் பாலத்தை நிர்மாணித்துத் தருமாறு கோரி பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலய மாணவர்கள் கவனயீர்ப்புப் போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

இது தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதற்காக, கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனியிடம் பாடசாலை அதிபர் முஹம்மது தாரிக் மற்றும் கிண்ணியா உலமா சபையும் மகஜரொன்றைக் கையளித்தது.

# அனர்த்த முன்னாயத்தங்களை ஆராய்வதற்கான கலந்துரையாடல்

ஒலுவில் விசேட நிருபர்



இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்ளும் வகையில் முன்னாயத்தச் செயற்பாடுகளை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் பிரதேச செயலக ரீதியாக நடத்தப்பட்டு வருவதாக, அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தெரிவித்தார்.

மழைக் காலத்தில் ஏற்படக்கூடிய வெள்ளநீரை வழிந்தோடச் செய்தல், அனர்த்த முன்னெடுப்புகளை மேற்கொள்ளுதல்,

கிராமிய மட்டத்தில் அனர்த்தக் குழுக்களை வலுப்படுத்துதல், முன்னெச்சரிக்கை செயற்பாடுகளை விருத்தி செய்தல், சூறாவளி, டெங்கு அபாயம் ஆகியவற்றை எதிர்கொள்ளக்கூடிய வகையில் சகல துறைசார் திணைக்களங்கள் ஊடாக தயார் செய்து நடைமுறைப்படுத்துதல் தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

நலன்புரி நிலையங்களாக அடையாளப்படுத்தப்பட்ட இடங்களில் அடிப்படை வசதிகளை விஸ்தரித்தல், அனர்த்த நிலைமையின் போது அவசர தேவைகளுக்கான பொருட்களை சேமித்து வைத்தல், முக்கியமான உபகரணங்களை கைவசம் வைத்திருத்தல் தொடர்பிலும் இக்கலந்துரையாடலின் போது அறிவுறுத்தி வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

24 மணி நேரமும் இயங்கும் வகையில், சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சகல திணைக்களங்களிலும் அவசரகால செயற்பாடுகளை கையாளும் கட்டுப்பாட்டு அறையை விஸ்தரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அவர் தெரிவித்தார்.

வெள்ள அனர்த்தங்களை தடுக்கும் வகையில் துரிதமாக பொதுமக்கள், சுகாதாரத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், வீதி அபிவிருத்தித் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றின் ஒன்றிணைந்த உதவியை நாடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

# மாணவர்களுக்கு சான்றிதழ்கள்



பெரியநீலாவணை தினகரன் நிருபர்

கல்முனை வலயக் கல்வி அலுவலகத்தின் முன்னோடிச் செயற்பாடாக வாசிப்பு மாத பாடசாலை மட்டப் போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வும் கலைகளின் அரங்கேற்றமும் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது, 'நேசிப்போம், வாசிப்போம்' என்ற தலைப்பில் உயர்தர கலைப்பிரிவு மாணவிகள் பங்கேற்ற கன்னிக் கவியரங்கொன்றும் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக்கழக தமிழ்த்துறை இருக்கைப் பேராசிரியர் றமீஸ் அப்துல்லா பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

தென்கிழக்குப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் எம்.எம்.மஸ்றூபா, கல்முனை வலயக் கல்வி அலுவலக தமிழ்ப்பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தார் எம்.பிர்தௌஸ் ஆகியோர் இதில் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

# வயலில் ஆடு மேய்வதை தடுத்த நபர் மீது மண்வெட்டித் தாக்குதல்

றொட்டவெவ குறூப் நிருபர்

தனது வயலுக்குள் ஆட்டை மேய்ச்சலுக்கு விட வேண்டாமென்று தெரிவித்த அவ்வயல் உரிமையாளர் மண்வெட்டித் தாக்குதலுக்கு உள்ளான சம்பவமொன்று திருகோணமலை, நொச்சிக்குளம் பகுதியில் இடம்பெற்றது.

நொச்சிக்குளம், சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த வேலாயுதம் ராஜேந்திரன் (65) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்கு உள்ளாகினார்.

அவ்வயலில் நேற்று முன்தினம் (22) ஆடு மேய்ந்து கொண்டிருந்த வேளையில் தனது வயலுக்குள் ஆட்டை விட வேண்டாமென்று, ஆட்டு உரிமையாளருக்கு அவ்வயல் உரிமையாளர் தெரிவித்தபோதே, அவ்வயல் உரிமையாளர் மண்வெட்டித் தாக்குதலுக்கு உள்ளாகியதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

மேற்படி நபர் கையில் காயமடைந்த நிலையில், மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

மண்வெட்டியால் தாக்குதல் நடத்திய சந்தேக நபர் தலைமறைவாகியுள்ள நிலையில், பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பின் மனிதநேயப் பணி

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்

ஜனாஸாக்களை அடக்கம் செய்வதற்கான 1,000 சவக் குழிகள் காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பினால் கடந்த 2013ஆம் ஆண்டு முதல் நேற்று முன்தினம் (22) வரை இலவசமாக தோண்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாக, அவ்வமைப்பினர் தெரிவித்தனர்.

சவக் குழிகள் தோண்டுதல், மரணிப்பவர்களின் ஜனாஸாக்களை வைத்தியசாலையிலிருந்து வாகனத்தில் வீடுகளுக்கு கொண்டு போய்க் கொடுத்தல் உள்ளிட்ட மனிதநேயப் பணியை காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

இப்பணியின் அடிப்படையில் ஆயிரமாவது சவக் குழி நேற்று முன்தினம் இரவு தோண்டிக் கொடுக்கப்பட்டது.

காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா ஜும்ஆ பள்ளிவாசல் மையவாடியில் இக்குழி தோண்டப்பட்டது.

காத்தான்குடி, புதிய காத்தான்குடி, பூநொச்சிமுனை, மஞ்சந்தொடுவாய், 19ஆம் வட்டாரம் ஆகிய பிரதேசங்களில் மனிதநேயப் பணியை காத்தான்குடி ஜனாஸா நலன்புரி அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

# சிறுதொழில் முயற்சியாளர்களின் விற்பனைக் கண்காட்சி

துறைநீலாவணை நிருபர், கல்முனை மத்திய தினகரன் நிருபர், திராய்க்கேணி தினகரன் நிருபர்



இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில், 'சுயமாக முன்னேற முனையும் மனிதர்கள்' எனும் தொனிப்பொருளில் கண்காட்சி கல்முனை, அட்டாளைச்சேனைப் பிரதேச செயலகங்களில் நேற்று (23) நடத்தப்பட்டது.

அம்பாறை பூராகவும் உள்ள சிறுதொழில் முயற்சியாளர்களை மையப்படுத்தியதாக முயற்சியாண்மை வர்த்தகக் கண்காட்சி நடைபெற்றதுடன், சிறுதொழில் முயற்சியாளர்கள் தமது விற்பனைப் பொருட்களையும் காட்சிப்படுத்தினர். இக்கண்காட்சியில், சிறுதொழில் முயற்சியாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# காரைதீவில் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 97ஆவது ஜனன தின நிகழ்வு

காரைதீவு குறூப் நிருபர்



காரைதீவு சத்யசாயி நிலையத்தின் ஏற்பாட்டில், பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 97ஆவது ஜனன தின விழா அந்நிலையத் தலைவர் எம்.இராஜேஸ்வரன் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இதனையிட்டு நேற்று (23) அதிகாலையில் ஓங்காரம், சுப்ரபாதம், நவரத்தின மாலை ஆகியன இசைக்கப்பட்டு, சத்யசாயி பாபாவின் உருவப்படம் தாங்கிய தேர் வீதி வழியாக வந்தது.

இதனைத் தொடர்ந்து பஜனை, சிறப்புப் பேச்சு நடைபெற்றதுடன், சாயி பாலர் பாடசாலை மாணவர்களுக்கு பதக்கம் அணிவித்தலும் இடம்பெற்றது.

# பண மோசடி செய்தவருக்கு 8 வருட சிறைத்தண்டனையுடன் அபராதம்

கந்தளாய் தினகரன் நிருபர்

திருகோணமலை, கந்தளாய் பிரதேசத்தில் 85 இலட்சம் ரூபா பண மோசடியில் ஈடுபட்ட ஒருவருக்கு 8 வருடகால சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதுடன், 8 இலட்சம் அபராதம் விதித்து கந்தளாய் நீதவான் நீதிமன்றம் நேற்று (23) தீர்ப்பளித்துள்ளது.

கந்தளாய், லைட் வீதியைச் சேர்ந்த 29 வயதுடைய ஒருவருக்கே இவ்வாறு தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் நாட்டில் நிலவிய எரிபொருள் நெருக்கடியான காலகட்டத்தில் மேற்படி நபர், டீசல் மற்றும் பெற்றோல் பெற்றுத் தருவதாகக் கூறி பலரிடம் 85 இலட்சம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளார்.

இது தொடர்பில் கந்தளாய் பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்டவர்கள் செய்த முறைப்பாடுகளின் அடிப்படையில் கடந்த ஓகஸ்ட் 8ஆம் திகதி மேற்படி நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்நிலையில், இது தொடர்பான வழக்கு விசாரணை கந்தளாய் நீதவான் நீதிமன்றத்தில் இடம்பெற்று வந்ததைத் தொடர்ந்து, மேற்படி நபரின் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால், மேற்படி தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரி வீதிக்கான புனரமைப்புப் பணி ஆரம்பம்



பாலமுனை கிழக்கு தினகரன் நிருபர்

பாலமுனை அல்ஹிதாயா மகளிர் கல்லூரி வீதிக்கான அபிவிருத்தி வேலைத்திட்டம் நேற்று (23) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஏற்பாட்டில் இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் உதவித் தவிசாளர் எஸ்.எம்.எம்.ஹனிபா, பிரதேச சபை உறுப்பினர் ஏ.பி. பதுறுதீன் உட்பட பிரதேச மக்கள் ஆகியோர் இவ்வேலைத்திட்ட ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.

### அம்பாறை மாவட்ட மு.கா மத்திய குழு தலைமை;

# கட்சித் தலைவர் ஹக்கீமைத் தவிர வேறு எவருக்கும் பதவி கிடையாது!

### - அப்துர் ரஸாக் தெரிவிப்பு

கல்முனை மத்திய தினகரன் நிருபர்



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவராக ரவூப் ஹக்கீம் இருக்கும்வரை அம்பாறை மாவட்ட மத்திய குழுவின் தலைமைப் பதவி மு.கா.வில் யாருக்கும் வழங்கப்பட மாட்டாதென, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசிய கொள்கை பரப்புச் செயலாளரும் அம்பாறை மாவட்ட மத்திய குழுவின் தலைவருமான அப்துர் ரஸாக் (ஜவாத்) தெரிவித்தார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் சாய்ந்தமருது மத்திய குழு அங்குரார்ப்பண நிகழ்வு அண்மையில் சாய்ந்தமருது பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றபோதே, அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றிய போது,

"அம்பாறை மாவட்டத்தின் மத்திய குழுத் தலைவராக, உறுப்பினர்களாக இருக்க வேண்டிய உரிமை உள்ளவர்கள் அம்மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மாத்திரமென்பதுடன்,

அவர்களையே தெரிவுசெய்ய வேண்டுமெனவும் உத்தரவிட்டு அதற்கான ஏற்பாடுகளை செய்த ஒரேயொரு கட்சி அகில இலங்கை மக்கள் காங்கிரஸ். இதனூடாக அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், மக்களுடைய உரிமைகளை எவ்வாறு பாதுகாக்க வேண்டுமென்பதில் உறுதியாக இருப்பதை நாம் விளங்கிக்கொள்ள வேண்டும்.

மு.கா.வில் கண்டியைச் சேர்ந்த ஒருவருக்கு, அம்பாறை மாவட்ட மத்திய குழுத் தலைவர் பதவி கடந்த 23 வருடங்களாக வழங்கப்பட்டு உள்ளதெனின், அது பிழை. அப்பதவியை இன்னும் கொடுக்க முடியாத, கொடுப்பதற்கு நம்பிக்கை இல்லாத ஒரு கட்சியாக மு.கா. இருக்கின்றது.

ஆனால், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சி அப்படியானதல்ல. பிரதேசத்திலுள்ள மக்களே அப்பதவிக்கு வர வேண்டுமென்ற ஜனநாயகக் கோட்பாட்டில் உறுதியாக இருந்து, இன்றும் செயற்படுகின்றது.

அதன் வெளிப்பாடே இன்று நாம் மத்திய குழுக்களின் நிர்வாகங்களை தெரிவுசெய்து கொண்டிருக்கிறோம்" என்றார்.

# சம்மாந்துறை மஷூறாவுக்கு இலக்கிய வித்தகர் விருது

காரைதீவு குறூப் நிருபர்



கிழக்கு மாகாண கலாசாரத் திணைக்களத்தின் 2021ஆம் ஆண்டுக்கான இலக்கிய வித்தகர் விருதை சம்மாந்துறை மஷூறா பெற்றுக்கொண்டுள்ளார். கிழக்கு மாகாணப் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் திருகோணமலை உவர்மலை விவேகானந்தாக் கல்லூரியில் அண்மையில் இதற்கான விருது வழங்கல் மற்றும் கௌரவிப்பு விழா நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட கிழக்கு மாகாண ஆளுநர் அநுராதா யஹம்பத், அவருக்கு விருது வழங்கிக் கௌரவித்துள்ளார்.

# முன்மாதிரியான பணி



இறக்காமம் தினகரன் நிருபர்

மின் வெட்டு மேற்கொள்ளப்பட்ட வேளையிலும் கூட தனது கடமையை இடையறாது செய்து பூர்த்தியாக்க வேண்டுமென்று எண்ணி, அம்பாறை மாவட்டத்தில் அரசாங்க சேவையில் பணியாற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர், தனது கையடக்கத் தொலைபேசியின் வெளிச்சத்தை ஒளிரச் செய்து தனது கடமையில் ஈடுபட்டதை அவதானிக்க முடிந்தது. இறக்காமம் பிரதேச சபை அலுவலகத்தில் அனைவரையும் நெகிழ வைக்கும் இந்நிகழ்வு பதிவானது. இவ்வாறான காலகட்டத்திலும் தமது கடமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் அரச ஊழியர்களும் இருக்கவே செய்கின்றார்கள்.




# இ.தொ.கா குடும்பம் ஒரு சாணக்கிய தொழிற்சங்கவாதியை இழந்துவிட்டது

## ஜீவன் தொண்டமான் எம்.பி

ஹற்றன் சுழற்சி நிருபர்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் குடும்பம் ஒரு சாணக்கிய தொழிற்சங்கவாதியை இழந்துவிட்டது. இந்த இழப்பு காங்கிரஸிற்கு மட்டுமல்ல மலையக மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொது செயலாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

1994ம் ஆண்டு காலப்பகுதியில் இருளில் இருந்த மலையகத்திற்கு தன்னுடைய அமைச்சின் ஊடாக மின்சாரத்தை பெற்று ஒளி தந்தவர் அமரர். முத்துசிவலிங்கம்.இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் மூத்த தலைவரென சௌமிய மூர்த்தி தொண்டமான் ஐயா போற்றப்பட்டதன் பின் தற்போது மூத்த தலைவர் என்ற வரிசையில் முத்து சிவலிங்கம் ஐயாவும் இணைவார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 83 வருட அரசியல் மற்றும் தொழிற்சங்க வரலாற்றில் பல தசாப்த காலமாக தொழிற்சங்கம் மற்றும் அரசியல் வழிகாட்டியாக இருந்து இந்த மாபெரும் அமைப்பின் தலைவராகவும், போசகராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும், மலையக மக்களின் பிரதி அமைச்சராகவும், பதவி வகித்து எம்மை வழிநடத்திய இந்த மூத்த தலைவரின் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

அன்னாரின் பிரிவால் துயர்கொண்டுள்ள குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதோடு, இவரின் குடும்பத்தாருடன் துக்கத்தை பகிர்ந்து கொள்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# அனுபவங்களின் ஊடாக பல அரசியல் பாடங்களை கற்றுக் கொடுத்துள்ளார்

## இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் இரங்கல்

எனது அரசியல் பிரவேசத்தின் போது அவரது அனுபவங்களின் ஊடாக பல அரசியல் பாடங்களை கற்றுக் கொடுத்துள்ளார். அவருடைய இழப்பு இ.தொ.காவிற்கு மாத்திரமல்லாது முழு மலையகத்திற்கும் ஒரு பேரிழப்பாகும் என இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் போசகரும் முன்னாள் தலைவருமான முத்து சிவலிங்கம் காலமான செய்தி கேட்டு மிகுந்த மன வேதனை அடைந்தேன். அவர் 1943.07.20 ஆம் திகதியன்று உடப்புசல்லாவ ரப்பானை தோட்டத்தில் பிறந்து, ஆரம்ப கல்வியை உடப்புசல்லாவ வித்தியாலயத்திலும் பின்னர் உயர் கல்வியை நுவரெலியா புனித கிறிஸ்தவ கல்லூரியிலும் பயின்றவர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஐயாவின் கொள்கையை ஏற்று 1962 ஆம் ஆண்டு மார்ச் 25ஆம் திகதி தலவாக்கலையில் தன்னை இ.தொ.காவுடன் இணைத்துக் கொண்டார்.

மறைந்த தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானுடன் கைக்கோர்த்து இ.தொ.காவை வெற்றி பாதையில் செல்ல வழிகாட்டி உள்ளார். இந்நாட்டின் வளர்ச்சிக்காக பல அமைச்சு பதவிகளை வகித்து பாரிய சேவைகளையும் முன்னெடுத்துள்ளார்.

அவருடைய இழப்பால் துயரும் அவரின் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்வதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

## மாத்தளை நகர மத்திய சந்தை மணிக்கூட்டு

# கோபுர கடிகாரம் ஒரு வருடமாக செயலிழந்த நிலையில்

உக்குவளை விசேட நிருபர்

மாத்தளை நகர மத்திய சந்தை கட்டடத்திற்கு எதிரே அமைந்துள்ள பிரதான மணிக்கூடு கோபுரத்திலுள்ள கடிகாரம் சுமார் ஒரு வருடத்திற்கு மேலாக செயலிழந்து காணப்படுவதாக பொதுமக்கள் அங்கலாய்க்கின்றனர்.

இது சம்பந்தமாக மாத்தளை மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர் மற்றும் மாநகர சபையின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆகியோருக்கு தெரிவித்த போதும் இதுவரை கடிகாரம் திருத்தப்படவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர்.

சுமார் 100 வருடங்கள் பழமை வாய்ந்த ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த மணிக்கூடு கோபுரத்திலுள்ள கடிகாரம் சரியான நேரத்தை காட்டியதாகவும்,மாநகர சபை ஆட்சியாளரால் டிஜிட்டல் முறைமைக்கு மாற்றியமைக்கப்பட்டதன் பின்னர் சில காலங்களில் முற்றாகவே செயலிழந்து விட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

மாத்தளை மாநகர சபையை சேர்ந்த அனைவரும் காலை, மாலை இம்மணிக்கூட்டுக்கோபுரத்தை கடந்து பயணித்த போதும் செயலிழந்து காணப்படும் கடிகாரம் இவர்களின் கண்களுக்கு தென்படாமை பற்றி பொது மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# எமக்கு வழிகாட்டியாக திகழ்ந்த அன்னாரின் இழப்பு ஈடுசெய்ய முடியாததாகும்

## எம்.ராமேஷ்வரன் எம்.பி

ஹற்றன் சுழற்சி நிருபர்

எமக்கு வழிகாட்டியாக திகழ்ந்த முன்னாள் தலைவர் முத்துசிவலிங்கத்தின் இழப்பு இ.தொ.காவிற்கு ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதி செயலாளரும்,பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஷ்வரன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மலையக மக்களின் உரிமைக்குரலாக ஒலித்த பெருந்தலைவர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவுக்குப் பிறகு முத்துசிவலிங்கத்தின் திடீர் மறைவு இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கு வேதனையளிக்கின்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரசுடன் அரசியல் செயற்பாடுகளில் இருந்த காலத்தில் தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு, கூட்டு ஒப்பந்த பேச்சுவார்த்தை மற்றும் மலையக மக்களுக்கு தேவையானவற்றை அறிந்து மறைந்த தலைவர் ஆறுமுகன் தொண்டமானுடன் இணைந்து அனைத்து நடவடிக்கைகளையும் மிக துல்லியமாக முன்னெடுத்து வந்தார்.

அதுமட்டுமல்லாமல் மலையகத்தில் பல தோட்டங்களுக்கு மின்சாரத்தையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

எமது ஸ்தாபனத்தின் மூத்த தலைவர் என்ற ரீதியில் எமக்கு வழிகாட்டியாக திகழ்ந்த அன்னாரின் இழப்பு எமக்கும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸிற்கும் ஈடு செய்ய முடியாத ஒரு பேரிழப்பாகும்.

அன்னாரின் பிரிவால் துயர்கொண்டுள்ள குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதோடு, ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# மத்திய மாகாண ஆளுநர், நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் சந்திப்பு



பூஜாபிட்டிய தினகரன் நிருபர்

இலங்கைக்கான நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் எட்வர்ட் அப்பிள்டன் மற்றும் மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யூ கமகே ஆகியோருக்கிடையில் சிநேகபூர்வ சந்திப்பொன்று கண்டியில் உள்ள மத்திய மாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் (21) நடைபெற்றது. இருவரும், இரு நாடுகளுக்கும் முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் குறித்து கலந்துரையாடியதுடன், கலந்துரையாடலின் பின்னர் நட்புறவை அடையாளப்படுத்தும் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக்கொண்டனர். இந்த சிநேகபூர்வ சந்திப்பில் மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன, மத்திய மாகாண ஆளுநரின் செயலாளர் அன்டன் திலகரத்ன, ஆளுநரின் ஒருங்கிணைப்பு செயலாளர் உபுல் மகிந்தரத்ன மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

# மருமகனின் கூரிய ஆயுத தாக்குதலில் மாமியார் மரணம்

வலப்பனை தெரிப்பெய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முக்குனகாபிட்டிய கலங்கவத்தை பகுதியில் மருமகன் மாமியாரை கூரிய ஆயுதத்தால் தாக்கியதில் மாமியார் சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக தெரிப்பெய பொலிசார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதல் சம்பவம் (22) மாலை இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் 59 வயது டப்ளியூ.ஜி.ரணசிங்க என்ற பெண் உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

உலக உணவு திட்டத்தின் கீழ் முக்குனகாபிட்டிய கலங்கவத்தை பகுதியில் வறுமையை எதிர்நோக்கும் குடும்பங்களுக்கு உலர் உணவு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

அவ்விடத்திற்கு தாக்குதல் சம்பவத்தில் ஈடுப்பட்ட குடும்பத்தில் தாய் மற்றும் மகள் ஆகியோர் வந்துள்ளனர். இதன்போது தாக்குதலை நடத்திய மருமகனும் வந்துள்ளார்.இவர்களிடத்தில் ஏற்பட்ட குடும்ப தகராறு காரணமாக வாய்த்தர்க்கம் தாக்குதலில் முடிந்துள்ளது. இதன் போது கோபம் கொண்ட (27) வயது மருமகன் தனது மனைவியையும்,தனது மாமியாரையும் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார்.

இந்த சமயத்தில் மனைவி சிறு காயங்களுடன் உயிர் தப்பியுள்ள நிலையில் மாமியாருக்கு வெட்டு பலமாக விழுந்ததால் சம்பவ இடத்திலேயே மாமியார் உயிரிழந்துள்ளார்.

மருமகன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை தெரிப்பெய பொலிசார் முன்னெடுத்துள்ளனர்.

# ஐந்து மாதங்களின் பின்பு உடப்புஸ்ஸலாவை நகரத்துக்கு மண்ணெண்ணெய் விநியோகம்



உடப்புஸ்ஸலாவை பிரதேசத்துக்கு ஐந்து மாதங்களுக்கு பின்னர் மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டுக்கு நேற்று தீர்வு கிட்டியுள்ளதாக உடப்புஸ்ஸலாவை நகரில் இயங்கும் சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் ஜெயசேன அதிகாரம் தெரிவித்தார்.

உடப்புஸ்ஸலாவை பிரதேசத்தில் சுமார் 3000 க்கும் அதிகமானவர்கள் மண்ணெண்ணெய் இன்றி 05 மாதங்களாக அவதிப்பட்டு வந்துள்ளனர்.அத்தோடு மண்ணெண்ணெய் அடுப்பு பாவனையார்கள் மற்றும் விவசாய காணிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரம் பாவிப்போர் என பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் நாட்டில் ஏற்பட்ட மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் கடந்த ஐந்து மாதங்களாக இப்பிரதேச மக்களுக்கு மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை.

உடப்புஸ்ஸலாவை நிரப்பு நிலையத்தினர், சிபெட்கோ நிறுவனத்திற்கு பல முறை கோரிக்கை விடுத்தும் நேற்று 6600 லீட்டர் மண்ணெண்ணெய் கிடைத்துள்ளது.

இதை முறையான படிமுறைக்கு அமைய வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆ.ரமேஸ்

# இ.தொ.காவின் 83 வருட அரசியல் வளர்ச்சிக்கு அடித்தளமாக செயற்பட்டவர்

## இ.தொ.க உப தலைவர் பாரத் அருள்சாமி

ஹற்றன் சுழற்சி நிருபர்

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் 83 வருட அரசியல் வளர்ச்சிக்கு அடித்தளமாக செயற்பட்டவர்களில் இவரும் ஒருவர். எம்மை போன்ற வளர்ந்து வரும் இளம் தலைமுறைக்கு எப்போதும் துணையாக நின்றவர்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் முத்துசிவலிங்கம் ஐயா மறைந்தமை இலங்கை தொழிலாளர் காங்கிரசுக்கு ஒரு பாரிய இழப்பு என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவர் பாரத் அருள்சாமி தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

அமரர் ஆறுமுகன் தொண்டமானின் இழப்பிற்கு பிறகு, முன்னாள் தலைவர் முத்துசிவலிங்கத்தின் திடீர் மறைவு கவலை அளிக்கின்றது.

அவர் அரசியல் செயற்பாடுகளில் இருந்த காலத்தில் தோட்ட தொழிலாளர்களின் சம்பள உயர்வு, தொழிலாளர் கல்வி மற்றும் மலையக மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் தனது மும்முரமான நடவடிக்கைகளை முன்னெடுத்து வந்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவர் சௌமியமூர்த்தி தொண்டமானின் காலம் முதல் அமரர் முத்து சிவலிங்கம் பெருந்தோட்டத் துறைக்கு பல்வேறு முன்மாதிரியான சேவையாற்றியதோடு, பாராளுமன்றத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தியிருந்ததோடு, பிரதியமைச்சராகவும் மக்களுக்கு சேவையாற்றியுள்ளார்.

அன்னாரின் பிரிவால் துயர்கொண்டுள்ள குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்வதோடு, ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# எனது அரசியல் வாழ்வின் வழிகாட்டியாக செயற்பட்டவர் அமரர் முத்து சிவலிங்கம்

## இராதாகிருஷ்ணன் எம்.பி இரங்கல்

நுவரெலியா தினகரன் நிருபர்

மலையகத்தின் மூத்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவரும் முன்னாள் இ.தொ.கா தலைவரும் பிரதி அமைச்சரும் எனது அரசியலுக்கு வழிகாட்டியாக நின்று செயற்பட்டவருமான முத்துசிவலிங்கம் அவர்களின் மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்து கொள்கின்றேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தனது இரங்கல் செய்தியில் தெரிவித்தள்ளார்.

அமரர் முத்து சிவலிங்கம் என்னை அரசியலுக்கு அறிமுகப்படுத்தியவர். அதனை நான் என்றும் மறக்கமாட்டேன்.

அவர் எனக்கு பல்வேறு நிலைகளிலும் நின்று வழிகாட்டியாக செயற்பட்டவர்.

என்னுடைய இன்றைய இந்த அரசியல் வளர்ச்சிக்கு அவரும் ஒரு காரணகர்த்தா என்றால் அது மிகையாகாது.

அவர் இலங்கை தொழிலாளர் காங்கிரசில் இருந்து ஒய்வு பெறுகின்ற வரை அந்த அமைப்பிற்காக முழுமையாக நின்று உழைத்தவர். இந்த அமைப்பின் சாதாரண ஒரு உறுப்பினராக உள்வாங்கப்பட்டு பின்பு படிப்படியாக பல்வேறு பதவிகளுக்கு உயர்த்தப்பட்டு பின்பு நிதிச் செயலாளராக அதன் தலைவராக மிகவும் சிறப்பாக செயற்பட்ட ஒருவர்.

அவருடைய பிரிவானது அவருடைய குடும்பத்திற்கு மாத்திரம் அன்றி இந்த முழு மலையக சமூகத்திற்குமே ஒரு பெரும் இழப்பாகும்.அவர் உடப்புஸ்ஸல்லாவ டலோஸ் தோட்டத்தில் பிறந்து உயர்ந்த நிலையை அடைந்தவர். அவருடைய ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

# மக்களின் வறுமையை கருத்தில் கொண்டு வரி அறவீட்டை குறைக்க வேண்டும்

## நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் எஸ். சிவரஞ்சனி



நாட்டில் பொருளாதார நெருக்கடி காரணமாக அன்றாட வாழ்க்கை நிலையில் மோசமாக பாதிக்கப்பட்டு வரும் நுவரெலியா மாநகர சபைக்குட்பட்ட மக்களிடம் அறவிடப்படும் வரி மற்றும் நீர் கட்டணங்களை குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் எஸ். சிவரஞ்சனி தெரிவித்தார்.

நுவரெலியா மாநகர சபை அதிகாரத்திற்குட்பட்ட பிரதேச மக்களின் வாழ்க்கை நிலை தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பொருட்களின் விலை அதிகரிப்பு,வரி அதிகரிப்பு என மக்களின் மீது வாழ்க்கை சுமை அதிகரித்துள்ள நிலையில் நுவரெலியா மாவட்டத்தில் குறைந்த வருமானம் பெறும் தோட்டத் தொழிலாளர்கள், கூலிவேலை செய்வோர் வருமானத்தில் அதிகமாக பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்களுக்கு கிடைக்கும் நாள் வருமானத்தை வைத்து அந்த நாளின் வாழ்க்கையை கொண்டு செல்ல கடஷ்டப்படுகின்றனர்.

குறிப்பாக நுவரெலியா மாநகர சபைக்குட்பட்ட பிரதேச மக்களின் அன்றாட வாழ்க்கையை கொண்டு செல்லும் சாதாரண மக்கள் நிலை மிக மோஷமாக உள்ளதை கண்டறிந்துள்ளேன்.

இந்த நிலையில் தொழில் ரீதியாகவும்,பொருளாதார ரீதியாகவும் தினம் பாதிக்கப்பட்டு வரும் நுவரெலியா மாநகர சபை மக்கள் ஊடாக மாநகர சபை தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள வரி மற்றும் நீர் கட்டணங்களை அதிகரித்துள்ளது.

அபிவிருத்தி என்ற போர்வையில் இவ்வாறு அறவிடப்படுகின்ற வரி மற்றும், நீர் கட்டணத்தின் ஊடாக கிடைக்கும் பணத்தினை மாநகர அபிவிருத்தியென மண்ணில் இடாது பொருளாதார நெருக்கடியான இக்காலக்கட்டத்தை உணர்ந்து வரிச் சுமையை குறைக்க திட்டங்களை கொண்டு வருவது சிறந்ததாகும் என தெரிவித்தார்.

ஆ.ரமேஸ்

# நகர்வலம்



# வெலிகம பிரதேச செயலக இணைப்புக் குழுக்கூட்டம்

சபாநாயகர் தலைமையில் முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு





**வெலிகம தினகரன் நிருபர்**

வெலிகம பிரதேச செயலகத்தின் இணைப்புக்குழுக்கூட்டம் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதேசத்திலுள்ள பல்வேறு விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டதோடு மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளுக்கும் இதன்போது தீர்வுகளும் பெற்றுக்கொடுக்கப்பட்டதாக அரச அதிகாரியொருவர் தெரிவித்தார்.

மேற்படி பகுதிகளில் முன்னெடுக்கப்படுகின்ற அரசின் பிரதான வேலைத் திட்டங்கள், வெலிகம பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளின் சுகாதார நடவடிக்கைகள், உள்ளூராட்சி மன்ற நடவடிக்கைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள், வீதி அபிவிருத்தி, நகர அபிவிருத்தி, மின்சாரம், நீர், கல்வி, மீன்பிடி, வீடு, போக்குவரத்து சம்பந்தமான விடயங்கள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டன.

இதில் வெலிகம பிரதேச செயலாளர், வெலிகம பிரதேச சபைத் தலைவர் உட்பட துறைசார் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

ஒரு கோழி முட்டையை

## 60 ரூபாவிற்கு விற்பனை செய்த வியாபாரிக்கு ரூ. 1 இலட்சம் அபராதம்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

கோழி முட்டையினை கூடுதல் விலைக்கு விற்பனை செய்த வீரகெடிய பிரதேச வியாபாரி ஒருவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

ஒரு முட்டை 60 ரூபா வீதம் ஐந்து முட்டைகளை 300 ரூபாவிற்கு விற்பனை செய்த வீரகெடிய வியாபாரியை ஹம்பாந்தோட்டை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சபை அதிகாரிகளின் சுற்றிவளைப்பின் போது கண்டுபிடிக்கப்பட்டு கைது செய்து வலஸ்முல்லை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதவானினால் இவருக்கு ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதித்து நீதவான் தீர்ப்பளித்ததாக ஹம்பாந்தோட்டை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஹம்பாந்தோட்டை மாவட்டமெங்கும் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சபை அதிகாரிகளினால் தொடர்ந்தும் வியாபார நிலையங்கள் சுற்றிவளைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## புதையல் தோண்டிய நான்கு பேர் கைது

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

பதவிய பகுதியிலுள்ள தொல்பொருள் பெறுமதிமிக்க இடமொன்றில் புதையல் தோண்டிக்கொண்டிருந்த நான்கு பேரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த தகவலொன்றுக்கமைய பதவிய பொலிஸ் பிரிவின் பொக்கவெத்த பகுதியில் நடத்திய சுற்றிவளைப்பின் போது சந்தேக நபர்களை கைது செய்துள்ளதுடன் புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் மற்றும் பூஜைப் பொருட்களையும் அதிரடிப்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 41,39,37,29 வயதுடைய பதவிய மற்றும் பிங்கிரிய பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் என்பது தெரியவந்துள்ளது. மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக வேண்டி சந்தேக நபர்களை விசேட அதிரடிப்படையினர் பதவிய பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

# முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 77ஆவது பிறந்த தின நிகழ்வு தங்காலையில்

முன்னாள் ஜனாதிபதி உட்பட குடும்பஸ்தர் பங்கேற்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் 77ஆவது பிறந்த தினம் அண்மையில் தங்காலை நகர மண்டபத்தில் வெகுவிமர்சையாக சமய நிகழ்வுகளுடன் நடைபெற்றது.

இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சமல் ராஜபக்ஷ எம்.பி உட்பட குடும்பத்தினர் மற்றும் அரசியல் பிரமுகர்கள் ஆதரவாளர்களும் கலந்து சிறப்பித்தனர்.

இங்கு உரையாற்றிய ரெகவ ஜின ரதன தேரர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தினை முடிவிற்கு கொண்டுவந்து எமது நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தினார்.

தற்பொழுது நாடு சிறியதோர் விபத்திற்குள்ளாகியுள்ளது. இதிலிருந்தும் இந்த நாட்டை காப்பாற்றக் கூடிய சிரேஷ்ட தலைவர் முன்னாள் ஜனாதிபதியென அவர் தனதுரையில் தெரிவித்தார்.

# இலங்கை - பாகிஸ்தான் ஆயுத படைகளின் இருதரப்பு சந்திப்பு

இலங்கை _ பாகிஸ்தான் ஆயுத படைகளின் பாதுகாப்புதொடர்பான கலந்துரையாடலொன்று இம்மாதம் 16, 17ஆம் திகதிகளில் கராச்சி 'எக்ஸ்போ' நிலையத்தில் நடைபெற்றது. இலங்கை தூதுக்குழுவிற்கு பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் (ஓய்வு நிலை) கமல் குணரட்ன தலைமை தாங்கியதோடு பாகிஸ்தான் தூதுக் குழுவிற்கு பாதுகாப்புச் செயலாளர் லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு நிலை) ஹமீத் உஸ் ஜமான் கான் தலைமை தாங்கினார்.




இதன்போது, இலங்கையும் பாகிஸ்தானும் இருதரப்பு இராணுவ உறவுகளின் தற்போதைய நோக்கத்தை மதிப்பாய்வு செய்ததோடு ஆயுதப்படை பாதுகாப்பு உரையாடலின் கீழ் அடையப்பட்ட முன்னேற்றம் குறித்தும் திருப்தியை வெளிப்படுத்தினர்.

பிராந்திய பாதுகாப்பு மற்றும் முன்னோக்கியிருக்கும் சவால்கள் குறித்து இருதலைவர்களும் கருத்துகளை பரிமாறிக்கொண்டனர்.

அனைத்து பிராந்திய மற்றும் சர்வதேச அரங்குகளிலும் இலங்கையும் பாகிஸ்தானும் தொடர்ந்து நல்லுறவுடன் பாதுகாப்பு ஒத்துழைப்பு, இராணுவப்பயிற்சி, கூட்டுப்பயிற்சிகள், உயர்மட்ட வருகைகளின் போது பரஸ்பரத்துடன் செயற்பட உறுதி பூண்டப்பட்டது.



கொழும்பு கொட்டாஞ்சேனை 'எஸ்கோலா' சர்வதேச பாடசாலையின் பரிசளிப்பு விழா அண்மையில் கொழும்பு, டவர் மண்டபத்தில் நடைபெற்றது. பாடசாலை பணிப்பாளர் மோகன சுந்தரம் மற்றும் பணிப்பாளர் அதிபர் கௌசல்யா மோகனசுந்தரம் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அ. அரவிந்தகுமார் பங்குபற்றி சிறப்பித்தார். இவ்விழாவில் பிரதம அதிதி வரவேற்கப்படுவதை படத்தில் காணலாம்.

வடமத்திய மாகாண சுகாதார திணைக்களத்திற்கு

# சிறுநீரக நோய்களை கண்டறியும் நடமாடும் பரிசோதனை ஆய்வக பஸ்

**அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்**

சீன அரசாங்கத்தின் அன்பளிப்பாக கிடைக்கப்பெற்ற சிறுநீரக நோய்களைக் கண்டறியும் நடமாடும் பரிசோதனை ஆய்வக பஸ் ஒன்றை அநுராதபுரம் பிராந்திய சுகாதார பணிப்பாளர் நிமல் ஆரியரத்னவிடம் வழங்கும் நிகழ்வு வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் கடந்த (21) மாகாண சபை வளாகத்தில் நடைபெற்றது.



இந்த நடமாடும் ஆய்வகத்தில் சிறுநீரக நோயைக்கண்டறிய சிறுநீர் பரிசோதனை, இரத்த பரிசோதனை மற்றும் ஸ்கேன் பரிசோதனை வசதிகள் உள்ளன. சிறுநீரக நோயை கண்டறிய இந்த நடமாடும் ஆய்வகத்தைப் பயன்படுத்துவதன் மூலம் நோயாளிகள் பரிசோதனைக்காக வைத்திய சாலைக்கு செல்ல வேண்டிய அவசியமில்லை என தெரிவிக்கப்படுகிறது.

இதன் போது வடமத்திய மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் கே.எம்.எஸ். தம்மிக ஜயசேகர, மாகாண ஆளுநரின் செயலாளர் நயனா தஸநாயக, மாகாண சுகாதார சேவை பணிப்பாளர் வைத்தியர் பாலித பண்டார உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## ரிபாய் கந்தூரி கொடியேற்றம்

**ருஸைக் பாரூக்**

சுல்தானுல் ஆரிபீன் செய்யதினா அஹ்மதுல் கபீருர் ரிபாயீ (கத்தஸல்லாஹு ஸிர்ரஹுல் அஸீஸ்) அவர்களின் 145 ஆவது ஆண்டு வருட ஞாபகார்த்த ரிபாய்க் கந்தூரி கொடியேற்றம் நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.00 மணியளவில் கொழும்பு 12, ரிபாய் தங்கல் ஒழுங்கை உள்ள ரிபாய் தரீக் சங்கத்தில் சங்கைக்குரிய ரிபாய் மௌலானா அல் ஹாஜ் யு. பி. ஸைய்யத் ஆசிக் தங்கள் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.



லேக்ஹவுஸ் ஊழியர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்ட மருத்துவ முதலுதவி பயிற்சி செயலமர்வொன்று அண்மையில் நடைபெற்றது. கொழும்பு தேசிய வைத்தியசாலையின் தேசிய ஒருங்கிணைப்பாளர் புஷ்பாரம்யானி சொய்சா இதில் வளவாளராகக் கலந்துகொண்டு செயலமர்வை நடாத்தினார். லேக்ஹவுஸ் நிறுவனத்தில் நடந்த இச்செயலமர்வில் பங்கேற்றுள்ள ஊழியர்களை படத்தில் காணலாம்.

(படம்: சுதத் நிஷாந்த)

# புத்தளத்தில் பெண்கள், சிறுவர்கள் சம்பந்தமான தெளிவூட்டல் நிகழ்வு

**(புத்தளம் தினகரன் நிருபர்)**



புத்தளம் விழுது மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் சம காலத்தில் பெண்கள், சிறுவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் சம்பந்தமான தெளிவூட்டல் நிகழ்வு புத்தளம் நகரபிதா எம்.எஸ். எம்.ரபீக் தலைமையில் புத்தளம் மணல்குன்று தும்புத் தொழிற்சாலை வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

இதன்போது அப்பகுதி வாழ் பெண்கள் சமகாலத்தில் எதிர்நோக்கும் சவால்கள் சம்பந்தமாக விரிவாக கலந்துரையாடப்பட்டன.

நகரபிதா எம்.எஸ்.எம்.ரபீக், விழுது மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆக்கபூர்வமான இவ்வாறான பணிகளைப் பாராட்டி பேசியதுடன் பெண்களின் சுய தொழில் முயற்சி மற்றும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக தாம் வழங்கி வரும் ஒத்துழைப்புக்களைப் பற்றியும் குறிப்பிட்டார்.

சமூகத்தில் தற்போது பெரும் சவாலாக மாறியுள்ள போதைப் பொருள் பாவனையை கட்டுப்படுத்தும் முகமாக தமது நகர சபையின் ஒத்துழைப்புடன் படையினரால் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகள் பற்றியும் விபரித்தார்.

பெற்றோர்கள் இவ்விடயத்தில் மிகுந்த அவதானமாக நடந்து கொள்ளுமாறும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

புத்தளம் நகர சபை என்றும் பெண்களின் சுய தொழில் முயற்சி மற்றும் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளுக்காக தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்கும் எனவும் தெரிவித்ததுடன் எதிர்காலத்தில் இக்கட்டடத்தை புனரமைத்து பெண்களின் சுய தொழில் பயிற்சி வழிகாட்டல் நிலையமாக மாற்ற தாம் உத்தேசித்துள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# இந்தியாவின் வசதியற்றவர் சுகாதார மேம்பாட்டுக்காக

## அமெரிக்கா 15 மில்லியன் டொலர் உதவி




இந்தியாவின் சுகாதார கட்டமைப்பு மேம்பாட்டுக்காக அமெரிக்க அரசு 15 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிகமான தொகையை ஒதுக்கியுள்ளதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

அந்நாட்டின் சர்வதேச அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் வாயிலான இத்தொகை, வசதியற்றவர்களுக்கு கண் அறுவை சிகிச்சைகளை மேற்கொள்ளவும், கிராமங்களில் வாழும் அதிகம் கவனிக்கப்படாத பெண்களின் சுகாதாரத் தேவைகளுக்கான பொருட்களைத் தயாரிக்கும் இந்திய சமூகம் சார்ந்த உற்பத்தியாளர்களுக்கு உதவவும் பயன்படுத்தப்படவுள்ளது.

கீழ்மட்ட மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட உலக நாடுகளையும் உலக பொருளாதாரத்தையும் விரிவான முதலீடுகள் மற்றும் தரமான கட்டமைப்புகளின் ஊடாக மேம்படுத்த ஜி20 மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், இந்தோனேசிய ஜனாதிபதி விடோடோ மற்றும் ஐரோப்பிய ஆணைக்குழுவின் தலைவர் வொன்டர் லெயன் ஆகியோர் தலைமையில் எடுக்கப்பட்ட நடவடிக்கையாக இது கருதப்படுகிறது. ஜி20 மாநாட்டில் உருவாக்கப்பட்ட உலகளாவிய கட்டமைப்பு மற்றும் முதலீடு திட்டத்தை அறிமுகம் செய்ய ஆதரவையும் பங்களிப்பையும் தேடும் வகையில் அமெரிக்க, இந்தோனேசிய மற்றும் ஐரோப்பிய யூனியன் ஆணையாளர் ஆகியோர் இம்மாநாட்டு உறுப்பினர்களான தலைவர்கள் மற்றும் நாடுகளின் அமைச்சர்களை சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியிருந்தனர்.

# பாகிஸ்தான் – ஆப்கான் எல்லையில் துப்பாக்கிப் பிரயோகம்; பாக். வீரர் பலி



ஆப்கானிஸ்தானுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான ஸ்பின்பொல்டாக் சமான் எல்லையில் ஒருவர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒரு பாகிஸ்தானிய எல்லைக் காவலர் மரணமடைந்ததோடு இருவர் படுகாயமடைந்த சம்பவத்தையடுத்து அவ்வெல்லை மூடப்பட்டுள்ளது.

கடந்த 13ம் திகதி நடைபெற்ற இச்சம்பவத்துக்கு ஆப்கான் தலிபான் அரசு ஆழ்ந்த கவலை வெளியிட்டிருப்பதோடு இச் சம்பவத்தை விசாரிப்பதற்காக உயர்மட்ட குழுவொன்றை நியமித்துள்ளது. தலிபான் அரசின் பேச்சாளரான ஸபியுல்லா, முஜாஹிட், இத்தகைய சம்பவங்கள் எதிர்காலத்தில் நடைபெறாதிருக்கும் வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்படும் என்று கூறியுள்ளார்.

இச் சம்பவம் பற்றி கருத்து வெளியிட்டுள்ள கந்தஹார் கலாசார மற்றும் தகவல்துறை பணிப்பாளரான நூர் அஹ்மட் சயீட்,

இப்பகுதிக்கு விசாரணைக் குழு வந்திருப்பதாகவும் ஆனால் உடனடியாக எல்லையைத் திறந்துவிடுவது கடினமான காரியமாக இருக்கும் என்றும் கூறியுள்ளார். துப்பாக்கிச் சூட்டை நடத்தியவர் அடையாளம் காணப்பட்டு அவர் பாகிஸ்தான் அதிகாரிகளிடம் ஒப்படைத்த பின்னரேயே எல்லை போக்குவரத்துக்காகத் திறக்கப்பட முடியும் என்று சாமன் எல்லைக்கான பிரதி ஆணையாளர் கூறியிருப்பதாக கந்தஹார் தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

# யாழ். பல்கலை மாணவர்கள் நால்வருக்கு வகுப்புத் தடை

**யாழ். விசேட நிருபர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தில் மாணவர்களிடையே இடம்பெற்ற கைகலப்பு தொடர்பில் நான்கு மாணவர்களுக்கு பல்கலைக்கழகத்திற்குள் நுழைய இடைக்காலத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி கிழக்கு, கலாசாலை வீதியில் கடந்த 21 ஆம் திகதி, திங்கட்கிழமை மாலை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட சிரேஷ்ட மாணவர்களுக்கும், புது முக மாணவர்களுக்குமிடையில் கைகலப்புச் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

சம்பவத்தின் போது சிரேஷ்ட மாணவர்களால் புதுமுக மாணவர் ஒருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டை அடுத்து பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமைவாக இடம்பெற்ற ஆரம்ப கட்ட விசாரணைகளில் சம்பந்தப்பட்ட மூன்று சிரேஷ்ட மாணவர்களுக்கும், ஒரு புது முக மாணவனுக்கும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில், சுதந்திரமான விசாரணை ஒன்றை முன்னெடுப்பதற்கு ஏதுவாக அடையாளம் காணப்பட்ட நான்கு மாணவர்களையும் மறுஅறிவித்தல் வரை பல்கலைக்கழகத்தின் அனைத்துப் பகுதிகளினுள்ளும் நுழைவதற்குத் தடை விதிக்கப்படுவதுடன், கல்வி மற்றும் பல்கலைக்கழகம் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார்.

# இலங்கை வங்கி

இலங்கை வங்கி மேல் மாகாண (வடக்கு) பிரிவினால் நிர்வகிக்கப்படும் CRM அலகொன்றை நிறுவுவதற்கு பின்வரும் இடங்களில் பொருத்தமான கட்டடம் அல்லது வெற்றுக்காணி ஒன்று 10 வருட குத்தகை அடிப்படையில் தேவைப்படுகின்றது.

## பெலும்மஹர சந்தி, அம்பதலே சந்தி

**குத்தகைக்குப் பெற்றுக் கொள்ளப்படும் உத்தேசக் கட்டடம்/காணி நகர மத்தியிலிருந்து 300 மீற்றர் தூரத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும் என்பதோடு பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

- பிரதான வீதிக்கும் கட்டடத்துக்கும் இடையில் குறைந்தபட்சம் 10′.6″ அடிகளாக இடைவெளி காணப்படுதல் வேண்டும். கட்டடத்துக்கு பின்புற நுழைவாயில் இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாவிட்டால் கட்டடத்தின் அகலம் குறைந்தபட்சம் 12 அடிகளாக இருத்தல் வேண்டும்.
- தரைக்குத் தரையோடுகள் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- 30 அம்பியர் மின்சார விநியோகம் இருத்தல் வேண்டும்.
- வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கு போதுமான இடவசதி இருத்தல் வேண்டும்.
- இலகுவில் சென்றடையக் கூடிய இடத்தில் இருத்தல் வேண்டும்.
- வெற்றுக் காணியாக இருந்தால், 10′.6″X18′ அடிகளாக இருத்தல் வேண்டும். (189 சதுர அடிகள்)

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் கட்டட உரிமையாளர்/காணி உரிமையாளர் கட்டட வரைபடம்/காணித்துண்டின் வரைபடம், அளவையியல் திட்டம், உரிமைத்துவ உறுதி, இணக்கச் சான்றிதழ் (குத்தகைக் காணியாக இருப்பின்) போன்ற ஆவணங்களின் பிரதிகள் உள்ளிட்ட விபரங்களை இவ்விளம்பரம் வெளியிடப்பட்ட நாளிலிருந்து 14 நாட்களுக்குள் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பிக்கும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "CRM இயந்திரத்தை நிறுவுதல்" (இடத்தின் பெயரைக் குறிப்பிடவும்) எனக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும்.

உதவிப் பொது முகாமையாளர் (மேல் மாகாணம்-வடக்கு),
இலங்கை வங்கி,
2 ஆம் மாடி, இலங்கை வங்கி வர்த்தகக் கோபுரம்
கொழும்பு - 03.
தொலைபேசி: 011 238 1366/011 586 5151
தொலைநகல்: 011 232 6830
மின்னஞ்சல்: bocwpn@boc.lk

1975 BOC CALL CENTRE www.boc.lk
AA- (lka) Fitch ரேட்டிங், AAA- Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கியானது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டு, கண்காணிக்கப்படும் ஓர் வர்த்தக வங்கியாகும்.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

# 2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

**போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சின் கீழ் இயங்கும் வ/ப லக்திவ இன்ஜினேரு (தனி) கம்பனி**

இலக்கம் 73, மினுவங்கொட வீதி, ஏக்கல, ஜா-எல என்ற முகவரியில் இயங்கும், போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சுடன் இணைந்த வ/ப லக்திவ இன்ஜினேறு (தனி) கம்பனிக்கு 2023ஆம் ஆண்டில் தேவையான பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காகப் பின்வரும் தகவுத்திறன்களைப் பூரணப்படுத்தும் வழங்குநர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக, 2022.12.30 அன்று பி.ப. 3.00 வரை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பதிவுக் கட்டணமாக ரூபா. 2,000.00 ஐ கணக்குப் பிரிவில் செலுத்தி விண்ணப்பப்படிவமொன்றைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும். அல்லது பின்வரும் மாதிரிப்படிவத்திற்கமைவாக, சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பமொன்று, கணக்காளர், வ/ப லக்திவ இன்ஜினேரு (தனி) கம்பனி, கணக்குஇலக்கம் 404914 இலங்கை வங்கி, ஜா-எல என்ற கணக்கிற்கு ரூபா 2,000.00 ஐ வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டுடன் 2022.12.30 அன்று பி.ப. 03.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்பட மாட்டாது பற்றுச்சீட்டின் பிரதியொன்றை தம்முடன் வைத்திருத்தல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில், ‘2023ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்’ எனக் குறிப்பிடுதல் வேண்டும். இதற்கான விபரங்கள் பின்வருமாறு:

**பதிவு செய்யும்போது வழங்குநர்கள் பொதுவாக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள் மற்றும் தகவுத்திறன்கள்:**

- அரச சம்பந்தப்பட்ட நிறுவனமொன்றின் அபகீர்த்தியானோர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
- பண்டங்கள் மற்றும் சேவை வழங்கல் தொடர்பாக வியாபாரப் பெயர் பதிவு/ கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவுச்செய்யப் பெற்றுள்ள நிறுவனமொன்று/ நபரொருவராக இருத்தல் வேண்டும்.
- கடன் வசதிகளின் அடிப்படையில் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கான இயலுமை இருத்தல் வேண்டும்.
- கட்டளை பிறப்பிக்கப்படும் ஏதேனும் சந்தர்ப்பமொன்றில் தாமதமின்றி குறித்த காலத்தினுள் பண்டங்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு இயலுமை மற்றும் கையிருப்புத் தொகைவைத்து இருத்தல் வேண்டும்.
- தேவையான பொழுது, நிறுவனத்தின் பெறுகைக்குழுவிற்கு பண்டங்களின் மாதிரிகளை வழங்குவதற்கு வழங்குநர்கள் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.
- கடந்த ஆண்டுகளில், இந்த நிறுவனத்திற்கு உரியவாறு வழங்கல்களை மேற்கொள்ளாத, வழங்கல்களைப் புறக்கனித்த நபர்கள்/ நிறுவனங்கள் பதிவு செய்யப்படமாட்டார்கள்.

**1. பண்டங்களின் வழங்கல் தொகை மற்றும் சில்லறை**

| உருப்படி இலக்கம் | உருப்படி விபரம் |
|---|---|
| 1.1. | பஸ் பொடிகளைப் புதுப்பிப்பதற்கான அனைத்து வகையான பண்டங்கள் (இரும்பு, அலுமினியம் உட்பட அனைத்தும்) |
| 1.2. | பஸ் பொடி வர்ணம் தீட்டுவதற்குத் தேவையான மூலப் பொருட்கள் |
| 1.3. | வாகன மின் உதிரிப்பாகங்கள். |
| 1.4. | வாகனங்களிற்கான உதிரிப்பாகங்கள். |
| 1.5. | அனைத்து வாகனங்களினதும் உதிரிப்பாகங்கள் (புத்தம் புதிய மற்றும் புதுப்பிக்கப்பட்டவை) |
| 1.6. | அனைத்து வாகனங்களிற்குமான உராய்வு நீக்கி எண்ணெய் வகைகள். |
| 1.7. | வாகனங்களிற்கான டயர் மற்றும் பெற்றறிகள். |
| 1.8. | வாகனங்களின் சேர்விசுகளில் பயன்படுத்தப்படும் அனைத்துவகையான பதார்த்தங்கள் |
| 1.9. | அனைத்து வகையான எழுது கருவிகள் மற்றும் அச்சுப்படிவங்கள், ஆவணங்களை வழங்கல் (ரிபன், டோனர் உட்பட அனைத்தும்) |
| 1.10. | அலுவலக இயந்திராதிகளை வழங்கல் (கணனி, ஸ்கேன், நிழற்படப்பிரதி, தொலைநகல் இயந்திரம், விரல் அடையாளப் பொறி, CCTV கெமராக்கள்) |
| 1.11. | கட்டிடப் பொருட்கள் வழங்கல் |
| 1.12. | உள்ளக மின்சார உதிரிப்பாகங்கள் மற்றும் வளிச்சீராக்கிகள். |
| 1.13. | சுகாதாரப் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் சுத்திகரிப்புப் பதார்த்தங்கள் வழங்கல் (தொற்று நீக்கிகள், கையுறைகள், கம்பூட்ஸ், தும்புத்தடிகள், கூட்டுமாறுகள்) |
| 1.14. | தைக்கப்பட்ட ஆடைகள், திரைச்சீலைகள் போன்றவற்றை வழங்கல். |
| 1.15. | அலுவலக உபகரணங்களை வழங்கல். (இரும்புக்கப்பட், கதிரைகள், மேசைகள் போன்றவை) |
| 1.16. | பாதுகாப்பு உபகரணங்கள் (தொழிற்சாலை ஊழியர்களிற்கானவை) |
| 1.17. | வீட்டுத்தோட்ட அலங்கரிப்பு உபகரணங்கள் மற்றும் தேவையான பதார்த்தங்கள் |
| 1.18. | விளையாட்டுப் பண்டங்கள், |
| 1.19. | முதலுதவி உபகரணங்கள் மற்றும் மருந்து வகைகள். |

**2. சேவைகள்:**

| உருப்படி இலக்கம் | உருப்படி விபரம் |
|---|---|
| 2.1. | வாகனங்களைப் புதுப்பித்தல் மற்றும் சேர்விசு |
| 2.2. | அலுவலக உபகரணங்களைப் புதுப்பித்தல் |
| 2.3. | சுகாதாரப் பாதுகாப்புச் சேவைகள் |
| 2.4. | அச்சு நடவடிக்கைகள் |
| 2.5. | கட்டிட நிர்மாணம் மற்றும் புதுப்பித்தல் மற்றும் உபகரணங்களை வாடகை அடிப்படையில் வழங்கல் |
| 2.6. | மின்சார வழங்கல்களைப் புதுப்பித்தல். |
| 2.7. | உசாத்துணை சேவைகள் |
| 2.8. | ஒப்பந்த அடிப்படையில் பஸ் பொடிகளைப்புதுப்பித்தல் மற்றும் வர்ணம் பூசுதல் |
| 2.9. | உள்ளக வளிச்சீராக்கிகளைப் புதுப்பித்தல் |
| 2.10. | அலுவலக கணனிகள், தொலைபேசிகள், பாதுகாப்புக் கெமராக்கள் விரல் அடையாளப் பொறிகளின் சேவைகளை நடைமுறைப்படுத்தல் |

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**வ/ப லக்திவ இன்ஜினியரிங் (தனி) கம்பனி**
**இல. 73, மினுவங்கொட வீதி**
**ஏக்கல, ஜா-எல**
**தொ.பே. 0112236530, 0112236458**

**மாதிரி விண்ணப்பப்படிவம்.**

1. நிறுவனத்தின் பெயர் :
2. முகவரி :
3. தொலைபேசி இலக்கம் :
4. வியாபாரம் ஒன்றாக பதிவு இலக்கம் :
5. மின்னஞ்சல் முகவரி :
6. கட்டணம் செலுத்தியவங்கி மற்றும் கிளை :
7. பதிவு செய்யும் துறை : பண்டங்கள் ☐ சேவைகள் ☐
   (உரித்தான கூட்டில் புள்ளடி இடவும்.)
   7.1 பண்டங்கள் மற்றும் சேவை உருப்படிகளின் இலக்கம்.
   7.2 பண்டங்கள் அல்லது சேவை உருப்படி விபரத்தின் பிரகாரம்
   (லக்திவ இன்ஜினியரிங் நிறுவனம் மேலே தரப்பட்டு உள்ளவாறு குறித்த விபரங்களைக் குறிப்பிடவும்.)

# கேள்வி அறிவித்தல்

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**2023 ஆண்டிற்காக கட்டுநாயக்க மற்றும் இரத்மலான விமான சேவைகளுக்காக 19 லீற்றர் விநியோக அலகுகளுடனான குடிநீர் போத்தல்களை வழங்கல், ஒப்படைத்தல் மற்றும் மீள்நிரப்பல்**

**B/61/2022**

2023 ஆம் ஆண்டிற்காக விநியோக அலகுகளுடனான மீள்நிரப்பலுடனான 19 லீற்றர் குடிநீர் போத்தல்கள் வழங்கல் மற்றும் ஒப்படைத்தல் என்பதற்காக தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கோருகின்றார்.

ஒப்பந்தத்தை பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் விலைமனுக் கோரல் ஆவணத்தில் கூறப்பட்டுள்ள தகுதித் தன்மை மற்றும் தகைமை தகவுத்திறனுக்கு அமைந்தொழுகுபவராகவுமிருத்தல் வேண்டும்.

2022.12.13 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிவரைக்குமிடையில் இபெகூ இற்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 1,000 ரூபாவை (848.36 + 2.5% SSCL + 15% பெசேவ) செலுத் னர், கொழும்பு-09, டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, 609 ஆம் இலக்கத்தின் 1 ஆம் மாடியிலுள்ள இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகை மற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்திலிருந்து வேலைநாட்களில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம் அல்லது **http://ceypetco.gov.lk/public-tenders/..** என்ற இபெகூ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

விலைமனுக்கள் 2022.12.14 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு மூடப்பட்டு கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியின் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன பெறுகைமற்றும் களஞ்சியசாலைகளுக்கான முகாமையாளரின் அலுவலகத்தில் விலைமனுக்களின் மூடும் நேரம் முடிந்தவுடன் உடனடியாகவே திறக்கப்படும்.

தெளிவுறுத்தல்கள் ஏதுமிருப்பின், 0115855415 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக அல்லது **hasintha@ceypetco.gov.lk** என்ற மின்னஞ்சல் முகவரியூடாக பொறிமுறை பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**பெறுகை மற்றும் களஞ்சியசாலைகள் முகாமையாளர் மே/பா.,**
**இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்,**
**இல.: 609,டொக்டர் டனிஸ்டர் த சில்வா மாவத்தை, கொழும்பு-09, இலங்கை.**
**தொலைபேசி: 0094-11-5455335**
**தொலைநகல்: 0094-11-5455424**

# பெறுகை அறிவித்தல்

## தேசிய வைத்தியசாலை – கண்டி

### சுகாதார அமைச்சு

01. கண்டி தேசிய வைத்தியசாலையின் பிராந்திய பெறுகைக்குழுத் தலைவரினால் பின்வரும் சேவைகளைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக 2022.12.16 அன்று மு.ப.10.00 வரை கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.
   - Procurement of maintenance of Health Information and Management System (HIMS) at National Hospital Kandy 2023/2024
02. 2022 நவம்பர் 24 முதல் 2022 டிசம்பர் 15 வரை மு.ப.8.30 முதல் பி.ப.3.00 வரையான காலத்தில் கண்டி தேசிய வைத்தியசாலையில் ரூபா 4000/- இற்கான மீளளிக்கப்படாத தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் மாதிரிப்படிவத்தின் மூலம் கேள்விகளைச் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விகள் மூடப்பட்டதும் மு.ப.10.30 இற்கு அவை திறக்கப்படும் அவ்வேளையில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பெற்ற அலுவலர்கள் சமுகமளித்திருக்கலாம்.
03. முத்திரையிடப்பட்ட கேள்விகளை ஏற்றுக்கொள்ளல், பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் அல்லது கண்டி தேசிய வைத்தியசாலையின் பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளலாம் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் சேவையின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடவும்.
04. எவ்வாறாயினும், கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்தினத்தன்று மற்றும் நேரத்தின் பின்னர் கிடைக்கப்பெறும் கேள்விகள், நிராகரிக்கப்பட்டு, திறக்கப்படாமல் திருப்பி அனுப்பப்படும் கேள்விப்படிவங்களை கண்டி தேசிய வைத்தியசாலையில் இலவசமாகப் பரிசீலனை செய்து கொள்ளலாம். மேலதிக விபரங்களை தொலைபேசி இலக்கம் 0812222261 மூலம் பெற்றுக்கொள்ளலாம்.
05. 05 மில்லியனுக்கு மேற்படும் கேள்விகளிற்கு இலங்கை கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் பதிவுச்சான்றிதழ் (PCA3) இருத்தல் வேண்டும்.
06. கேள்வி முன்னோடி கலந்துரையாடல் (Pre bid meeting) 2022.12.05 அன்று மு.ப.11.00 இற்கு கண்டி தேசிய வைத்தியசாலையில் நடைபெறும்.
07. திறந்த போட்டிரீதியிலான முறைமையின் கீழ் கேள்விகள் கோரப்படும்.

**தலைவர், பிராந்திய பெறுகைக்குழு,**
**தேசிய வைத்தியசாலை - கண்டி**

# முத்து சிவலிங்கத்தின் மறைவு; மலையக மக்களுக்கு பேரிழப்பு

## UNP எஸ். ஆனந்தகுமார் இரங்கல்



மூத்த தொழிற்சங்கவாதிகளில் ஒருவரும் இ.தொ.காவின் முன்னாள் தலைவருமான முத்து சிவலிங்கம் அவர்களின் மறைவிற்கு ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆனந்தகுமார் தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

அமரர் முத்து சிவலிங்கம் எனது சிறந்த நண்பராவார். அரசியலுக்கு அப்பால் சிறந்த மனிதநேயமிக்கவர். அவரிடமிருந்து ஆக்கபூர்வமான அரசியல் செயல்பாடுகளை நாம் கற்றுள்ளோம்.

இன்றைய இளைய தொழிற்சங்கவாதிகளுக்கு வழிகாட்டியாக அவர் செயற்பட்டவர்.

மலையக மக்களுக்கு அவர் ஆற்றிய சேவைகள் மகத்தானவையாகும்.

அவருடைய பிரிவானது மலையக சமூகத்திற்கு ஒரு பெரும் இழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனை பிரார்த்திப்பதுடன் அவரது குடும்பத்துக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

# மன்னார் நகர சபையின் பட்ஜட் நிறைவேற்றம்



**(மன்னார் குறூப் நிருபர்)**

மன்னார் நகர சபையின் 2023 ஆம் ஆண்டுக்கான பாதீடு நேற்று (23) புதன்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

மன்னார் நகர சபையின் 57 வது அமர்வு நேற்று நகர சபையின் தலைவர் என். அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்ற போது 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட முன்மொழிவு இடம்பெற்றது.

இதன் போது மன்னார் நகர சபையில் 6 கட்சிகளை உள்ளடக்கிய 16 உறுப்பினர்கள் வரவு செலவு திட்டத்திற்கு ஆதரவை ஏகமனதாக முன்மொழிந்து நிறைவேற்றினர்.

தமிழ் தேசிய கூட்டமைப்பு, அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஆகிய கட்சிகளை சேர்ந்த 16 உறுப்பினர்கள் அமர்வுக்கு வருகை தந்து 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை முன்மொழிந்தனர்.



யாழ்ப்பாணத்துக்கான விஜயத்தை மேற்கொண்ட இலங்கைக்கான பாகிஸ்தானிய உயர்ஸ்தானிகர் உமர் பாரூக் புர்கி நேற்று புதன்கிழமை (23) வடமராட்சி சக்கோட்டைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். வருகைதந்திருந்த பாகிஸ்தான் உயர்ஸ்தானிகருக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. விஷேட அதிரடிப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டதுடன் மோப்பநாய் என்பன பாதுகாப்பிற்காக கொண்டு வரப்பட்டிருந்தன. உயர்ஸ்தானிகர் பருத்தித்திறை சக்கோட்டை முனைப் பகுதியைப் பார்வையிட்டதன் பின்னர் நண்பகல் 12:15 மணியளவில் அங்கிருந்து புறப்பட்டார்.

(நாகர்கோவில் விஷேட நிருபர்)

# யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு பலப்படுத்தல்

**யாழ். விசேட நிருபர்**

மாவீரர் வாரம் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமாகியுள்ள நிலையில் யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினர் பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

வீதி சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கைகளை இராணுவத்தினர் முன்னெடுத்துள்ள அதேவேளை, கோப்பாய் துயிலும் இல்ல பகுதி உள்ளிட்ட பகுதிகளில் வீதிச்சோதனை நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.


# மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதிகள், போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி, வர்த்தகம், வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)**

## வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2023ஆம் வருடம்

இந்த அதிகார சபைக்கு 2023ஆம் வருடத்தில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பொருட்களுக்கான வழங்கல் தலைப்புகள்**

1. அனைத்து வகையான கருங்கற்கள் வழங்குதல் (1/2'', ¾ '',1 ½ '', 6x9'' மற்றும் ஏ.பி.சீ. (கலப்புக் கற்கள்) / கற்துகள்கள்)
2. ஆற்று மணல் / கழுவிய மணல் வழங்குதல் / கடல் மணல் வழங்குதல்
3. மண் வழங்குதல்
4. ரெடிமிக்ஸ் கொங்கிரீட் வழங்குதல்
5. அஸ்போலட் கொங்கிரீட் வழங்குதல்
6. தார் மற்றும் தார் சார்ந்த உற்பத்திகள் (இமல்ஷன்) வழங்குதல்
7. தர்மோ பிளாஸ்டிக் வீதி அடையாள பவுடர் வழங்குதல்
8. அளத்தல் மற்றும் நிர்மாண ஆராய்ச்சி உபகரணங்களை வழங்குதல்
9. உருக்குக் கம்பி/அலுமாரி/மேசை கதிரைகள் வழங்குதல்
10. இரும்புப் பாலங்கள் மற்றும் துணைப்பாகங்கள் / கேபியன் வலை / அமானோ சீட்கள் என்பவற்றை வழங்குதல் (H Iron / Box Bar / GI Bar ect)
11. கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் வழங்குதல் (Hardware)
12. கணனி மென்பொருள் வழங்குதல் (Software)
13. அலுவலக வளிச்சீராக்க இயந்திரங்கள் வழங்குதல் / திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல்
14. டயர், டியூப் மற்றும் கொலர்கள் வழங்குதல் (இலகுரக வாகனங்கள் / கனரக வாகனங்கள் / நிர்மாண இயந்திராதிகள்)
15. அலுவலக காகிதாதிகள் வழங்குதல்
16. வீதிப் பராமரிப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்களை வழங்குதல் (மண்வெட்டி, அரிவாள், வீல்பரோ போன்றன)
17. ஆய்வுகூட உபகரணங்கள் (பெருந்தெருக்கள் நிர்மாணத்திற்கானவை)
18. அச்சு வேலைகள்
19. மின்சார உபகரணங்கள் மற்றும் உதிரிப்பாகங்கள் வழங்குதல்
20. கட்டிடப் பொருட்கள் வழங்குதல் (சீமெந்து / உருக்குக் கம்பி / நிறப் பூச்சுகள் மற்றும் ஏனைய கட்டிடப் பொருட்கள்)
21. இலகுரக வாகனங்கள், கனரக வாகனங்கள் மற்றும் இயந்திராதிகளுக்கான உதிரிப்பாகங்கள் வழங்குதல்
22. புகைப்படப் பிரதி இயந்திரங்கள் / ஸ்கேனர் இயந்திரங்கள் / தொலைநகல் இயந்திரங்கள் / விரல் ரேகை பதிவு இயந்திரங்கள் வழங்குதல்
23. கணனி அச்சுப் பொறிகளுக்கான டோனர் வகைகள் மற்றும் கார்ட்ரிஜ் வழங்குதல்
24. ஊழியர் நலன்புரி (பாவனைப் பொருட்கள்) மற்றும் துப்புரவேற்பாட்டுப் பொருட்கள், கிருமிநாசினி நடவடிக்கைகளுக்கான பொருட்கள் வழங்குதல்
25. வீதிப் பராமரிப்பு இயந்திரோபகரணங்கள் வழங்குதல்
26. இன்டர்லொக் கற்களை வழங்குதல் மற்றும் பதித்தல்
27. உராய்வுநீக்கி எண்ணெய் வகைகள் வழங்குதல்

**02. சேவைகளுக்கான வழங்கல் தலைப்புகள்**

28. வாடகை அடிப்படையில் வான்/கார்களை வழங்குதல்
29. வாடகை அடிப்படையில் லொறி/டிப்பர் வண்டிகளை வழங்குதல்
30. வீதி அபிவிருத்தி இயந்திரப் பொருட்களை வாடகைக்கு வழங்குதல்
31. வாகன சேவைகளை வழங்குதல்
32. வீதிப் பெயர்ப் பலகைகள் / டிஜிட்டல் பதாகைகள் / இலச்சினைகள் மற்றும் ஏனைய தேவையான பெயர்ப் பலகைகள் / ஸ்டிக்கர் வரைதல் மற்றும் தயாரித்தல்
33. கணனி மற்றும் கணனி துணைப்பாகங்கள் வழங்குதல் மற்றும் சேர்விஸ் செய்தல்
34. அளத்தல் வேலைகளை மேற்கொள்ளுதல்
35. வாகன மின்னியல் சேவைகளை வழங்குதல்
36. வாகன வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள்
37. கனரக வாகனம் / இலகுரக வாகனம் / இயந்திரங்களின் திருத்தவேலை சேவைகள் வழங்குதல்

**04. பதிவுசெய்துகொள்வதற்கான நிபந்தனைகள்**

வழங்குநர்களாக பதிவுசெய்துகொள்ள ஆர்வமுடையவர்கள், மேற்படி ஒவ்வொரு வழங்கலுக்கும் 1150.00 ரூபா மீளளிக்கப்படாத (வட் வரியுடன்) விண்ணப்பப்படிவக் கட்டணத்தை இந்த அதிகார சபையின் பின்வரும் கிளை அலுவலகங்களில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை இங்கு தரப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் முறையாகப் பூர்த்தி செய்து விண்ணப்பப் படிவத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2022-11-24ஆம் திகதி முதல் 2022-12-30ஆம் திகதி வரையில் இடம்பெறும்.

**கொழும்பு மாவட்டம்**

| | |
|---|---|
| பிரதான அலுவலகம் | - 011-5676903 |
| கொழும்பு நி.பொ. அலுவலகம் | - 011-2578848 |
| மொரட்டுவ நி.பொ. அலுவலகம் | - 011-2655629 |
| அவிசாவளை நி.பொ. அலுவலகம் | - 011-2750795 |
| இரத்மலானை நி.பொ. அலுவலகம் | - 011-5621320 |

**கம்பஹா மாவட்டம்**

| | |
|---|---|
| பிரதான பொறியியலாளர் அலுவலகம் | - 033-2051776 |
| உடுகம்பொல நி.பொ. அலுவலகம் | - 033-2222493 |
| நிட்டம்புவ நி.பொ. அலுவலகம் | - 033-2287237 |
| நீர்கொழும்பு நி.பொ. அலுவலகம் | - 031-2233621 |
| கிரிந்திவெல நி.பொ. அலுவலகம் | - 033-2267467 |
| அஸ்கிரிய இ.பொ. அலுவலகம் | - 033-2226848 |

**களுத்துறை மாவட்டம்**

| | |
|---|---|
| பிரதான பொறியியலாளர் அலுவலகம் | - 034-2238260 |
| களுத்துறை நி.பொ. அலுவலகம் | - 034-2222641 |
| ஹொரண நி.பொ. அலுவலகம் | - 034-2261215 |
| அகலவத்த நி.பொ. அலுவலகம் | - 034-2247399 |
| மொரகஹஹேன இ.பொ. அலுவலகம் | - 034-2253288 |

05. அவ்வாறே மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு வழங்கல் மற்றும் சேவைக்கும் தனித்தனியாக விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

06. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை ''தலைவர், பெறுகைக் குழு, மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா), இல. 59, புனித செபஸ்தியன் மேடு, கொழும்பு-12'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2023 ஜனவரி மாதம் 05ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். இயைபுடைய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2023ஆம் வருடம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

07. போதுமான வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்படாத வேளைகளில் அந்த பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாக திறந்த விலைகளைக் கோரும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா)**
**இல 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12**
**தொலைபேசி இலக்கம்: 011- 5676903**

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**இல 59, புனித செபஸ்தியன் மலை,**
**கொழும்பு - 12**
**தொலைபேசி இலக்கம்: 011- 5676903 தொலைநகல்: 011- 2321988**

**வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் - 2023ஆம் வருடம்**

01. வழங்குநரின் முழுப் பெயர்:..........
(வழங்குநர் / அதிகாரபூர்வ அலுவலர்)
02. தேசிய அடையாள அட்டை இலக்கம்:..........
03. பிரத்தியேக முகவரி:..........
04. வியாபார நிறுவனத்தின் பெயர்:..........
05. வியாபார நிறுவனத்தின் முகவரி:..........
06. தொலைபேசி இலக்கம் மற்றும் தொலைநகல் இலக்கம்:..........
07. வழங்கல் தலைப்பு:..........
(வழங்குவதற்கு உத்தேசிக்கும் பொருள்/சேவை தலைப்பு) (வழங்கல் தலைப்பை எழுத்தில் குறிப்பிடவும்)
08. காசாளரிடம் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டு இலக்கம்:..........
(பற்றுச்சீட்டின் பிரதியொன்றை இணைக்கவும்)
09. வியாபாரப் பதிவு விபரங்கள்:..........
(வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும்)
10. முன்னைய வழங்கல்கள் தொடர்பான அறிக்கை:..........
(உறுதி செய்வதற்காக சான்றிதழைச் சமர்ப்பித்தல் வேண்டும்)
11. வெட் வரி பதிவிலக்கம்:..........
(பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைத்தல் வேண்டும்)

.................................... ..............................
**கையொப்பம்** **திகதி**
**(உத்தியோகபூர்வ முத்திரை)**

**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை**
**இல 59, புனித செபஸ்தியன் மலை,**
**கொழும்பு - 12**
**தொலைபேசி இலக்கம்: 011- 5676903 தொலைநகல்: 011- 2321988**

**வழங்குநராகப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவம் வாடகை அடிப்படையில் வாகனங்கள் வழங்குதல்- 2023ஆம் வருடம்**

01. வாகன உரிமையாளர் / நிறுவனத்தின் பெயர்:..........
02. முகவரி: ..........
03. தேசிய அடையாள அட்டை இல. ..........
04. வெட் வரி பதிவிலக்கம்:..........
05. தொலைபேசி இலக்கம்:..........
06. வாகனத்தின் வகை மற்றும் மாதிரி:..........
07. வாகனத்தின் பதிவு வருடம்:..........
08. டிப்பர் / லொறிக்கான கொள்ளளவு (கியூப்)..........
09. என்ஜின் கொள்ளளவு..........
10. வாடகை அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்தும் வகையில் முழுமையான காப்புறுதி செய்யப்பட்டுள்ளதா என்பது பற்றி ..........
11. இவ்வாறான வாடகை வாகன சேவையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் உள்ளதாயின் அதன் விபரங்கள்..........

விண்ணப்பப் படிவத்துடன் இயைபுடைய வாகனத்தின் வருமான அதிகாரப்பத்திரத்தின் பிரதியையும் காப்புறுதிச் சான்றிதழின் பிரதியொன்றையும் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.

.................................... ..........................
**வாகன உரிமையாளர் கையொப்பம்** **திகதி**
**(உத்தியோகபூர்வ முத்திரை)**

களுத்துறை மாவட்ட

# இளைஞர், யுவதிகளுக்கு தொழில்சார் கற்கை நெறி செயலமர்வு

களுத்துறை மாவட்டத்தை வதிவிடமாக கொண்ட இளைஞர் யுவதிகளுக்கு களுத் துறை நகர மண்டபத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.00 மணி முதல் தொழில் கற்கை நெறி செயலமர்வு நடைபெ றவுள்ளது.

தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி நிறுவனம் (NAITA) மற்றும் இளைஞர் சேவை மன்றம் (YOUTH SERVICE CENTRE) போன்ற அரச நிறுவனங்கள் மூலம் மேசன், தச்சு, மெக்கானிக், கணனி, அலங்கார மீன் வளர்த்தல் மின்சார உபகர ணங்கள் பழுது பார்த்தல் போன்ற பல்வேறு தொழில் திறமைகளை கொண்டவர்களுக்கு சில நிபந்தனைகளுடன் அரசாங்கத்தால் உறுதிப்படுத்தப்பட்ட தொழில் வாண்மை தகைமைச் சான்றிதழ்கள் (NVQ LEVEL 3 & 4) வழங்கப்படும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பை எதிர் பார்த்து காத்திருப்போருக்கு இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத் தில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் மூலம் வெளிநாட்டு தொழில் வாய்ப்பு வச திகளை பெற்றுக் கொடுத்தல் மேலும் உள் நாட்டு தொழில்வாய்ப்புக்கு தேவையான அரச தொழில் தகைமைச் சான்றிதழ்களை பெற்றுக் கொள்ள வசதிகள் செய்து தரப்ப டும். இதனைத் தவிர கனரக வாகன சாரதி அனுமதி பத்திரம், கட்டிட நிர்மானம், மணப் பெண் அழகியற்கலை, பாலர் பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி மற்றும் சான்றி தழ்களுடன் 300க்கும் மேற்பட் தொழில் பயிற்சி வகுப்புகளில் இணைத்துக் கொள் வதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப் படும். களுத்துறை மாவட்ட செயலகம் மற்றும் களுத்துறை மாவட்ட ஏனைய பிரதேச செயலாளர் பிரிவுகளும் இணைந்து தம் ரிவி அமைப்பு அனுசரணையுடன் இவ் வமர்வு நடைபெறவுள்ளது.

# திறப்பனை பிரதேச வீதிகளில் யானைகளின் நடமாட்டம் அதிகரிப்பு; மக்கள் பீதியில்

திறப்பனை தினகரன் நிருபர்

அநுராதபுர மாவட்ட திறப்பனை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட துருவில அலிஸ்தான் வீதியில் அடிக்கடி வீதியில் நடமாடும் யானைகளினால் பாதையில் செல்வோர் பல்வேறு சிரமங்களுக்கு உட்படுவதாக தெரிவிக்கப்ப டுகிறது. இப்பிரதேசத்தின் காட்டுப்புற வீதியிலேயே இவ்வாறான நிகழ்வுகள் அடிக்கடி இடம் பெற்று வருவதாக இப்பாதையூடாக பிரயாணம் மேற்கொள்ப வர்கள் தெரிவிக்கின்றனர்.இக்காலப் பிரிவில் இவ்வாறான சம்பவம் அடிக்கடி இடம் பெற்று வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.



வீதியின் காட்டுப் பகுதியில் வந்து நின்று கொள்ளும் தனியன் யானையானது வீதியில் வரும் பிரயாணிகளால் எழுப்பப்படும் அதி கரித்த வாகன "ஹார்ன்" சப்தத்துக்கு பின்பே காடுகளை நோக்கி செல்கின்றது. சிலபோது வாகனங்களை செல்ல விடாது நீண்ட நேரம் பாதையின் குறுக்கே நின்று விடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

கெக்கிராவை ,தம்புள்ள,கண்டி நோக்கி பிரியாணிக்கும் இப்பிரதேச மக்கள் இவ் வீதியையே பயன்படுத்தி வரும் நிலையில் மாலை, இரவு வேளைகளில் இப் பாதையில் பயணிப்பதை பொது மக்கள் தவிர்த்து வரு கின்றனர்.


NSB

## தேசிய சேமிப்பு வங்கி

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கேள்வி இல: NSB/PT/ITE/2022/32

இங்கு காட்டப்பட்டுள்ள கேள்விக்கு இயைபான பொருட்களை வழங்குதல், விநியோகித்தல், பொருத்துதல், செயற்படுத்திக் காண்பித்தல் மற்றும் பராமரிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்ட முதன்மை உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் இலங்கைக்கான உத்தியோகபூர்வ உள்நாட்டு முகவர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **பெறுகையின் விளக்கம்** | Backup Solution |
| **பெறுகை முறை** | தேசிய போட்டி ரீதியிலான கேள்வி கோரல் (NCB) |
| **தேவைப்படுத்தப்படும் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணம்** | ரூபா 25,000.00 |
| **சமர்ப்பிக்கப்பட தேவைப்படும் விலைமனுப் பெறுமதி** | ரூபா 1,200,000.00 |
| **விலைமனு ஆவணங்களை வழங்கும் இறுதித் திகதி மற்றும் நேரம்** | 2022-12-20ஆம் திகதி பி.ப. 3.00 மணி |
| **கேள்வி மூடும் திகதி மற்றும் நேரம்** | 2022-12-21ஆம் திகதி மு.ப. 10.00 மணி |
| **கேள்வி முன்னோடிக் கூட்டம் மற்றும் தள விஜயம்** | 2022-12-05ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு |

1. எந்தவொரு கேள்விதாரர் சார்பாகவும் பிரதிநிதியொருவர் அல்லது உப பிரதிநிதியொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவராக செயற்படும் எந்தவொரு நபரும் கேள்விக்காக விண்ணப்பிப்பதற்கு முன் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும் என்பதுடன் அவர் சார்பில் ஒப்பந்தத்தைப் பதிவு செய்து கொள்ளல் கட்டாயமாகும்.
2. 2022-11-24ஆம் திகதியிலிருந்து 2022-12-20ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 8.30 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை கொழும்பு-03, காலி வீதி, 255ஆம் இலக்கத்திலுள்ள தேசிய சேமிப்பு வங்கியின் வழங்கல்கள் பிரிவு, வழங்கல்கள் முகாமையாளரிடமிருந்து எழுத்துருவிலான கோரிக்கையொன்றின் பேரில் விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
3. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கோரல் ஆவணங்கள் மேலே சுட்டிக்காட்டப்பட்டுள்ளவாறான தொகைக்கானதும், தேசிய சேமிப்பு வங்கியினால் ஏற்றுக்கொள்ளும் தன்மையிலுள்ளதும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் கேள்வியை திறக்கும் திகதியிலிருந்து ஆகக் குறைந்த காலப்பகுதியான 120 நாட்காட்டி நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதுமான வங்கி உத்தரவாதத்துடன்/விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
4. விலைமனுக்கள் உரிய திகதியன்று மு.ப. 10.00 மணிக்கு அவைகளை மூடியதும் உடனடியாகவே திறக்கப்படுமென்பதுடன், மு.ப. 10.00 மணிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விலைமனுக்கள் நிராகரிக்கப்பட்டு திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.
5. எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான உரிமையை கொண்டிருப்பதுடன், எவ்வித காரணங்களையும் முன் வைக்காமல் பாகமொன்றை ஏற்றுக்கொள்வதற்கான உரிமையை தேசிய சேமிப்பு வங்கி கொண்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை தேசிய சேமிப்பு வங்கியின் (வழங்கல்) சிரேஷ்ட முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**கூட்டு வர்த்தக பெறுகைக்குழு – மேல் மட்டம்,**
**தேசிய சேமிப்பு வங்கி,**
**இல. 255, காலி வீதி, கொழும்பு-03.**



நீர்ப்பாசன அமைச்சு

பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகம்

cecb

## வழங்குனர்கள் / சேவை வழங்குனர்களை பதிவுசெய்தல் 2023

இல.415 பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 இல் அமைந்துள்ள பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தின் சிரேஷ்ட கொள்முதல் குழுவின் தலைவரினால 2023 ஆம் ஆண்டிற்கான பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு தங்களை பதிவு செய்ய விரும்பும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குனர்கள், உற்பத்தியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், பிரதிநிதிகள், சேவை வழங்குனர்கள் மற்றும் பிற நபர்களிடமிருந்து விண்ணப்பங்களை கோரப்படுகின்றது.

**A. எழுதுபொருட்கள்**

1. CR பதிவு புத்தகங்கள், கோப்பு செய்யும் பொருட்கள், குறிப்பேடுகள், அனைத்து வகையான புகைப்பட நகல் பேப்பர், ஃபெக்ஸ் பேப்பர் ரோல்ஸ், அனைத்து வகையான பசைகள், அனைத்து வகையான பேணைகள், பென்சில்கள் மற்றும் அழிப்பான்கள், நகல் மற்றும் தட்டச்சு காகிதங்கள், அனைத்து வகையான கடிதஉறைகள், அனைத்து வகையான ஸ்டெப்லர்கள் மற்றும் பேப்பர் பின்ஸ் கிளிப்புகள், பஞ்சர்கள், கத்தரிக்கோல், ஸ்டேப்லர்கள், வெள்ளைநிற பலகைகள் மற்றும் தூசு துடைப்பான்கள், வரையும் கருவிகள், பிணைக்கும் சாதனங்கள் போன்றவை
2. டோனர் கார்ட்ரிட்ஜ்கள் மற்றும் ரிப்பன்கள்: (HP, Canon, Toshiba, Epson, Sharp, Samsung, Richo, Brother போன்றவை.
3. அலுவலக ஸ்டேஷனரி, அச்சிடும் தாள்கள், டிரேசிங் பேப்பர்கள் உட்பட

**B. அலுவலக பொருட்கள்**

4. அலுவலக தளபாடங்கள் - மேசைகள் (பலகை, ஸ்டீல், பிளாஸ்டிக் நாற்காலிகள் கலையரங்க நாற்காலிகள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் போன்றவை.
5. ஆடியோ கானொலி உபகரணங்கள் மற்றும் மின்னனு பொருட்கள் (டிவி, கேமராக்கள், கையடக்கதொலைப்பேசிகள், மல்டிமீடியா ப்ரொஜெக்டர்கள், தொலைபேசி அமைப்புகள், ஒலி அமைப்புகள், மின்விசிறிகள் மற்றும் ஒளிநகல்கள் போன்றவை)

**C. கணினி பாகங்கள் மற்றும் தொடர்புடைய சேவைகள்**

6. அலுவலக உபகரணங்கள் (புகைப்பட நகல், அச்சுப்பொறிகள், வரைவிகள், ஸ்கேனர்கள், தொலைநகல் இயந்திரங்கள் மற்றும் கைரேகை இயந்திரங்கள் போன்றவை.
7. கணினிகள் (மேசை கணினி மற்றும் நோட்புக் கணினிகள் மடிக்கணினிகள் போன்றவை)
8. UPS (UPS, மடிக்கணினிகளுக்கான மின்களங்கள் போன்றவற்றுக்கான மின்களங்கள்)
9. கணினி பாகங்கள் (ஹார்ட் டிரைவ்கள், நெட்வொர்க் கார்டுகள், மதர்போர்டுகள், கேபிள்கள், கேபிள் மாற்றிகள், கீபோர்டுகள், மவுஸ் மற்றும் பென் டிரைவ்கள் போன்றவை)
10. கணினி வைரஸ் பாதுகாப்பு அமைப்புகள் மற்றும் கணினி மென்பொருள் விற்பனையாளர்கள்
11. நெட்வொர்க் உபகரணங்கள் மற்றும் துணைக்கருவிகள் (செயலில் உள்ள பொருட்கள் மற்றும் செயலற்ற பொருட்கள்)

**D. பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு பொருட்கள்**

12. தேவைப்படும் பணியாளர் சீருடை (சட்டை மற்றும் கால்சட்டை துணிகள்)
13. பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு பொருட்கள் (சீருடைகள், உபகரணங்கள் மற்றும் பாகங்கள்,ரெயின்கோட்கள் மற்றும் கம் பூட்ஸ், பாதுகாப்பு காலணிகள், பாதுகாப்பு பூட்ஸ், ஹெல்மெட்கள், பாதுகாப்பு வலைகள் போன்றவை)

**E. அளவீடு மற்றும் ஆய்வக உபகரணங்கள்**

14. அளவீடு மற்றும் ஆய்வக உபகரணங்கள்
15. பொறியியல் சோதனை மற்றும் அளவிடும் கருவிகள்

**F. துளையிடுதல் மற்றும் பாகங்கள்**

16. அனைத்து வகையான துளையிடுதல் மற்றும் பாகங்கள்
17. கோர் பெட்டிகள் (மாதிரி பெட்டிகள்)
18. துளையிடும் கருவிகள் மற்றும் இயந்திரங்கள் (பழுது)

**G. ஆய்வக இரசாயனம்**

19. அனைத்து வகையான ஆய்வக இரசாயனங்கள்

**H. கட்டிடப் பொருட்கள்**

20. கட்டுமான கருவிகள் (கொத்து, தச்சு கருவிகள், பொறியியல் கருவிகள், பாதுகாப்பு கருவிகள் போன்றவை)
21. கட்டிட பொருட்கள் (பி.வி.சி குழாய்கள் மற்றும் பொருத்துதல்கள் உட்பட பெயிண்ட் மற்றும் கட்டிட பராமரிப்பு பொருட்கள் போன்றவை)

**I. மின்சார பொருட்கள் மற்றும் பாகங்கள்**

22. அனைத்து வகையான கேபிள்கள் (PVC இன்சுலேட்டட்) மற்றும் மின் பாகங்கள்
23. குளிரூட்டிகள், குளிர்சாதன பெட்டிகள் மற்றும் பாகங்கள்

**J. வாகனங்கள், யார்டுகள் மற்றும் இயந்திரங்கள்**

24. டயர்கள் மற்றும் குழாய்கள் (இலகு/கனமான)
25. அனைத்து வகையான மின்களங்கள்

**K. வாகனங்கள், ஆழைகள் மற்றும் இயந்திரங்களுக்கான சேவைகள்**

26. கார் வாடகை (கார்கள், பயணிகள் வேன்கள், லொரிகள் மற்றும் SUV sகள் போன்றவை)
27. டிராக்டர்கள் உள்ளிட்ட இயந்திரங்களை வாடகைக்கு எடுத்தல்
28. என்ஜின் ஹெட்கள், என்ஜின் பிளாக்ஸ் போன்றவற்றை பழுது பார்த்தல்.
29. இருக்கை குஷன்கள் மற்றும் அப்ஹோல்ஸ்டரி வேலைகள் (இலகுரக வாகனங்கள், கனரக வாகனங்கள் மற்றும் கனரக இயந்திரங்கள்)
30. வாகன வாயு சீராக்கி சேவை மற்றும் பழுது
31. அனைத்து வகையான மோட்டார் வாகனங்களையும் பழுது பார்த்தல்.
32. அனைத்து வகையான கார்களுக்கும் டிங்கரிங் மற்றும் பெயிண்டிங்.
33. அனைத்து வகையான கார்களுக்கும் மின்சார வேலை.
34. இலகுரக மற்றும் கனரக வாகனங்களுக்கான மசகு எண்ணெய் சேவைகள்.

**L. ஆலோசனை சேவைகள்**

35. உட்புற வடிவமைப்பு சேவைகள்.
36. இயற்கை வடிவமைப்பு சேவைகள்.
37. பொறியியல் கணக்கெடுப்பு சேவைகள்
38. கட்டடக்கலை இயற்பியல் மாதிரிகள் தயாரித்தல்.
39. CAD 3D மாதிரிகள் தயாரித்தல்.
40. மண் பரிசோதனைகளை நடத்துதல்.
41. சமூகவியலாளர் / மீள்குடியேற்ற நிபுணர்.
42. சூழலியலாளர் / தாவரவியலாளர் / விலங்கியல் நிபுணர்
43. பொருளாதார நிபுணர் / விவசாயப் பொருளாதார நிபுணர் / சமூகப் பொருளாதார நிபுணர்.
44. கடல் உயிரியலாளர் / மீன் வளர்ப்பு
45. போக்குவரத்து நிபுணர்
46. நீரியல் நிபுணர்
47. ஹைட்ரோஜியாலஜிஸ்ட்
48. GIS நிபுணர்.
49. கழிவு நீர் சுத்திகரிப்பு நிபுணர்
50. தொல்பொருள் ஆய்வாளர்
51. சுரங்கப்பாதை பொறியியல்
52. கடலோர / துறைமுக பொறியியல்
53. கடலோர வள நிபுணர்
54. ஆங்கிலம்-சிங்கள மொழிபெயர்ப்பாளர்
55. ஆங்கிலம்-தமிழ் மொழிபெயர்ப்பாளர்
56. அளவியல் பணி / பூகோள அளவியல்

**M. ஆய்வக பரிசோதனை சேவைகள்**

57 பொறியியல் பொருட்களின் இயற்பியல் மற்றும் வேதியியல் அளவுருக்கள்
58. நீர் பரிசோதனை சேவைகள் (பூச்சிக்கொல்லிகளில் கன உலோகங்களின் கதிரியக்கத்தன்மை)
59 மண் பரிசோதனை சேவைகள் (பூச்சிக்கொல்லிகள் கன உலோகங்கள் மற்றும் விவசாய அளவுருக்கள் பரா மீட்டர்)
60. காற்றின் தர சோதனை (புகை கூடு உமிழ்வுகள்)

**N. ஏனைய சேவைகள்**

61. அச்சிடுதல் (ஆஃப்செட் விளம்பரங்கள் போன்றவை)
62. பிளவு வாயு சீராக்கி சேவை மற்றும் பழுது பராமரிப்பு
63. மத்திய வாயு சீராக்கி அமைப்பு சேர்விஸ் மற்றும் சீராக்கம் மற்றும் பராமரித்தல்
64. கணினிகள் மற்றும் பிரிண்டர்கள் பழுது மற்றும் பராமரிப்பு போன்றவை
65. தச்சு மற்றும் கொத்தனார் ஒப்பந்ததாரர்கள்
66. அலுமினியம் செயலிகள்
67. உருக்கு செயலிகள்
68. மின் ஒப்பந்ததாரர்கள்
69. உட்புற அலங்கரிப்பாளர்கள்
70. இயற்கையை ரசித்தல் ஒப்பந்ததாரர்கள்
71. ஓவியர்கள்
72. பூச்சி கட்டுப்பாடு சேவைகள்
73. கிரானைட், பித்தளை, வெள்ளி, செம்பு போன்றவை
74. அலுமினியம் கூடாரங்கள், அடுக்குகள், நிலைகள் போன்றவை வாடகைக்கு
75. குடிநீர் விநியோகம்
76. காப்பீட்டு வழங்குநர்கள் (IBSL பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மட்டும்)
77. பூகோள தொழில்நுட்ப ஒப்பந்ததாரர்கள்

**நிபந்தனைகள்**

1. தொடர்புடைய பிரிவுகளின் கீழ் செல்லுபடியாகும் வணிகப் பதிவைக் கொண்டிருப்பது பதிவு செய்வதற்கான குறைந்தபட்ச தகுதியாகக் கருதப்படும், இருப்பினும் பின்வரும் காரணிகள் சப்ளையர்கள் மற்றும் சேவை வழங்குநர்களின் பதிவுக்கான கூடுதல் தகுதிகளாகக் கருதப்படும்.
   அ. குறைந்தபட்சம் ஒரு வருடம் (01) வியாபாரத்தில் ஈடுபட்டிருத்தல்
   ஆ. கொள்வனவு செய்த பொருட்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் திறன்
   இ. கொள்வனவு செய்த பொருட்களுக்கான சலுகைக் கடன் வசதியினை வழங்குதல்
2. பொதுவாக பதிவுசெய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படும், இருப்பினும், தற்போதுள்ள தேவைகளைக் கருத்தில் கொண்டு, பதிவு செய்யப்பட்ட வழங்குனர்கள் மற்றும் பிற வழங்குனர்களர்களின் பட்டியலிலிருந்து விண்ணப்ப கோரலக்கான உரிமையை பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகம் கொண்டுள்ளது.
3 ஒரு பொருளுக்கான கட்டணமாக **2022.11.24** முதல் **2022.12.30** வரை **பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தின்** பெயரில் வழங்கப்பட்ட காசோலை அல்லது பணமாகவோ அல்லது **ரூ. 1,000/-** திரும்பப்பெறாத கட்டணத்தைச் செலுத்தி, பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தின் இணையதளத்தில் **(https://www.cecb.lk/tender-notices/)** நிகழ்நிலையில் விண்ணப்பங்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. வழங்குனர்கள் தங்கள் வணிகத் துறையின் பொருத்தத்தைப் பொறுத்து ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரிவுகளின் கீழ் பதிவு செய்ய விண்ணப்பிக்கலாம் மற்றும் விண்ணப்பப் படிவத்தில் தங்கள் விருப்பத்தைக் குறிப்பிடுவதன் நாடு பூராக உள்ள அலுவலகங்களில் பதிவு செய்யலாம்.
5. பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தினால் நிராகரிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட வழங்குனர்கள் / ஒப்பந்ததாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.
6. முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை பிரதிகள் இரண்டுடன், ஆவணங்களின் நகல் மற்றும் பணியகத்திற்குச் செலுத்தப்பட்ட ரசீது நகலை **2022.12.30 ஆம் திகதி 14:00** மணிக்கு முன்னர் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டெண்டர் பெட்டியில் இடவேண்டும் அல்லது பதிவுத்தபால் மூலம் சிரேஷ்ட கொள்முதல் குழுத் தலைவருக்கு கிடைக்கக்கூடியவாறு **பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகம், இல. 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07** எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதமான அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
7. திருப்பிச் செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்துவதற்கான ஆவணச் சான்றுகளைச் சமர்ப்பிக்கத் தவறினால் விண்ணப்பப் படிவத்தில் தேவையான தகவல்களைச் சமர்ப்பிக்கத் தவறினால் அல்லது பகுதியாக சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
8 பதிவு செய்வதற்கான எந்தவொரு விண்ணப்பத்தையும் ஏற்க அல்லது நிராகரிக்கும் உரிமை பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தின் மூத்த கொள்முதல் குழுவிற்கு உள்ளது.
9. விண்ணப்பம் அடங்கிய கடித உறையின் மேல் இடது பக்க மூலையில், **“2023 ஆம் ஆண்டிற்கான வழங்குனர்களை பதிவுசெய்தல்”** எனத தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
10. மேலதிக தகவல்களை கொள்முதல் அதிகாரி அலுவலகம், பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தின் தலைமை அலுவலகத்தில் சாதாரண வார நாட்களில் அல்லது **0112668821** என்ற எண்ணில் தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது **po@cecb.lk/ pocecb@gmail.com** மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**சிரேஷ்ட பெறுகை குழு,**
**பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகம்,**
**இல. 415, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு-07.**



சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு

## சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல் – 2023

கொழும்பு 08 பொரள்ள, சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் பெறுகைக்குழுத் தலைவரினால், 2023ஆம் ஆண்டிற்கான கட்டிட நிர்மாணங்கள் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக தகைமை பெற்றுள்ள ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் அன்றாட கருமங்களிற்கு இடையூறு ஏற்படாத வண்ணம், வைத்தியசாலையின் சட்ட திட்டங்கள் மற்றும் அறிவுருத்தல் களிற்கமைவாக, உங்களுக்கு வழங்கப்படும் அவசர பராமரிப்பு வேலைகளைப் பூரணப்படுத்துதல் வேண்டும்.

03. 2006ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட தேசிய பெறுகை வழிகாட்டி கைநூலின் பிரகாரம், பராமரிப்பு ஒப்பந்தக்காரர்கள் பதிவு செய்து கொள்ளப்படுவர்

04. பராமரிப்பு ஒப்பந்த நிறுவனங்களைப் பதிவு செய்து கொள்வதற்கான தகைமைகள்

- ❖ அபகீத்தியானோர் பட்டியல் படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.
- ❖ கட்டிட நிர்மாணிப்பு மற்றும் மின் பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பாக, விஷேட அறிவு மற்றும் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
- ❖ கட்டிடப் பராமரிப்பு C10 அல்லது அதற்கு மேல்
- ❖ மின் தொழில்நுட்பச் சேவை EM 5 அல்லது அதற்கு மேல்

05. கடந்த 02 ஆண்டுகளில் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் சித்திகரமாகப் பூரணப்படுத்தப்பட்ட பராமரிப்பு அல்லது நிர்மாணிப்பு ஒப்பந்தங்கள் தொடர்பான அங்கீகரிக்கப்படக்கூடிய சான்றிதழ்கள் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். வைத்தியசாலையின் நடவடிக்கைகளிற்குப் பாதிப்பு ஏற்படாதவண்ணம் கூடியகெதியில் மற்றும் மிகவும் சித்திகரமாக, வழங்கப்படும் கடமைகளை முடிவுறுத்தல் வேண்டும்.

06. 2022.12.13 அன்று பி.ப. 2.00 வரை, வார வேலை நாட்களில் சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் கணக்காளரிடம் மீளளிக்கப்படாத ரூபா 2,500.00 இற்கான தொகையைச் செலுதி, இதற்கான விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

07. மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியெனக் குறிப்பிடப்பட்ட விண்ணப்பங்கள், 2022.12.14 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு பணிப்பாளர், சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை, கொழும்பு 08’ என்ற முகவரிக்குப் பதிவுத்தபாலில் அல்லது கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் முடியும். விண்ணப்பத்தின் இடது பக்க மூலையில், ‘பராமரிப்பு ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல் 2023’ எனக்குறிப்பிடுதல் வேண்டும்.

08. ஒப்பந்த நிறுவனத்தின் அதிகாரம் பெற்ற அலுவலரொருவர், விண்ணப்பத்தில் கையெழுத்திடுதல் வேண்டுமென்பதுடன், தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

09. வைத்தியசாலையின் பெறுகைக்குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாக அமையும்.

**டாக்டர் ஜீ. விஜேசூரிய,**
**தலைவர்,**
**பிராந்தியப் பெறுகைக் குழு,**
**சீமாட்டி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலை,**
**கொழும்பு-08**

# 2023 கேள்வி அறிவித்தல்

## கதிர்காமம் பிரதேச சபை

கதிர்காமம் பிரதேச சபைக்குரித்தான பின்வரும் ஆதனங்களை 2023 வருடத்தில் குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் 2022-11-24ஆம் திகதி முதல் 2022-12-15ஆம் திகதி மு.ப. 11.00 மணி வரையில் கதிர்காமம் பிரதேச சபை அலுவலகத்தினால் வழங்கப்படும். கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் 2022-12-15ஆம் திகதி பி.ப. 1.30 மணிக்கு நிறைவுறும். கேள்விப் படிவங்கள் 2022-12-15ஆம் திகதி 2.00 மணிக்கு பிரதேச சபையின் கேட்போர்கூடத்தில் இடம்பெறும்.

| | கேள்வியிடப்படும் ஆதனங்கள் | கேள்வி பிணைத் தொகை ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | 2023ஆம் வருடத்திற்கான ஆகக் குறைந்த கேள்வித் தொகை |
|---|---|---|---|---|
| 1 | வெடிஹிடிகந்த வாகனத்தரிப்பிடம் | 5000.00 | 2000.00 | 500,000.00 |
| 2 | செல்லக் கதிர்காமம் 01ஆம் இலக்க வாகனத்தரிப்பிடம் | 5000.00 | 2000.00 | 2,600.000.00 |
| 3 | செல்லக் கதிர்காமம் 02ஆம் இலக்க வாகனத்தரிப்பிடம் | 5000.00 | 2000.00 | 1,701,000.00 |
| 4 | லக்ஷ்மி ஆலயத்திற்கு அருகிலுள்ள வாகனத்தரிப்பிடம் | 5000.00 | 2000.00 | 286,000.00 |
| 5 | கதிர்காமம் 1ஆம் இலக்க வாகனத்தரிப்பிடம் | 5000.00 | 2000.00 | 350,000.00 |
| 6 | முஸ்லிம் ஓய்வு மண்டபத்திற்கு அருகிலுள்ள வாகனத்தரிப்பிடம் | 5000.00 | 2000.00 | 600,000.00 |
| 7 | சதொச அருகிலுள்ள வாகனத்தரிப்பிடம் | 5000.00 | 2000.00 | 600,000.00 |
| 8 | கங்காராம ஓய்வு மண்டபத்திற்கு அருகிலுள்ள வாகனத்தரிப்பிடம் | 5000.00 | 2000.00 | 300,000.00 |
| 9 | துருலிய தரைத்தள பொது மலசலகூடம் | 5000.00 | 2000.00 | 402,000.00 |
| 10 | 03ஆம் இலக்க பால முரகபொல்ல அருகிலுள்ள வாகனத்தரிப்பிடம் | 5000.00 | 2000.00 | 150,000.00 |
| 11 | பஸ் நிலையத்திற்கு அருகிலுள்ள மலசலகூடம் | 5000.00 | 2000.00 | 350,000.00 |
| 12 | செல்ல கதிர்காமம் 1-2 மலசலகூடம் | 5000.00 | 2000.00 | 2,510,000.00 |
| 13 | வெடிஹிட்டிகந்த அருகிலுள்ள பொது மலசலகூடம் | 5000.00 | 2000.00 | 155,000.00 |
| 14 | 02ஆம் இலக்க வாகனத்தரிப்பிட பொது மலசலகூடம் | 5000.00 | 2000.00 | 100,000.00 |
